
புற்று நோய்



ஆசிரியர்

ஆர். ஜே. சி. ஹாரிஸ்

தமிழாக்கம்

டாக்டர் அ. கதிரேசன்

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு — அரசாங்

தமிழ் வெளியீட்டுக் கழக வரிசை எண்—146

புற்றுநோய்

(CANCER)

ஆசிரியர்

ஆர். ஜே. ஸி. ஹாரிஸ்

தமிழாக்கம்.

டாக்டர் அ. கதிரேசன், எம். டி., டி. டி. டி.,
அரசினர் காசநோய் மருத்துவமனை,
அஸ்தினபட்டி, மதுரை.

தமிழ் வெளியீட்டுக் கழகம்

தமிழ்நாடு - அரசாங்கம்

First Edition—April, 1967

B.T.P. No. 146

CANCER

R. J. C. HARRIS

Translation
Dr. A. KATHIRESAN

Price Rs. 3-50

இந் நூல், பெங்குவின் புக்ஸ் லிமிடெட்,
ஹார்மண்ட்ஸ்வொர்த், மிடில்செக்ஸ்
இங்கிலாந்து ஸ்தாபனத்தாரால் வெளி
யிடப்பெற்ற 'புற்றுநோய்' என்ற
நூலின் தமிழாக்கம்.

Printed by
C. H. S. PRESS,
Mount Road,
Madras-2.

அணிந்துரை

(திரு. இரா. நெடுஞ்செழியன், தமிழகக் கல்வியமைச்சர்)

தமிழ்நாடு அரசாங்கம், சில ஆண்டுகளுக்கு முன்னர்க் கல்லூரித் தமிழ்க் குழுவொன்றை நிறுவி அதன்மூலம் கல்லூரி மாணவர்கட்குத் தேவையான பல தமிழ் நூல்களை வெளியிட்டுவந்தது. தமிழை ஆட்சி மொழியாக அரசாங்கம் ஏற்றுக்கொண்ட பிறகு, தமிழ்மொழிக்கு ஆக்கம் தேடுகின்ற முறையில், இன்னும் மகத்தான அளவில் தமிழ் நூல்கள் வெளிவரவேண்டும் என்ற கருத்தில தமிழ் வெளியீட்டுக கழகம் 1962-ல் நிறுவப்பெற்றது.

உலகின் பிற பகுதிகளிலுள்ள மககளின் அறிவு வளர்ச்சிக்குக குறையாமல தமிழ மககளும் அறிவு வளர்சசி பெறவேணடுமானால், பிற மொழியிலுள்ள நூல் களைப் படிக்க முடியாதவர்கள தமிழின்மூலமே எல்லாவற்றையும் கற்கககூடிய சூழநிலை ஏற்படவேண்டும. இந்த எண்ணத்தின் அடிப்படையிலேயே தமிழ் வெளியீட்டுக கழகம கல்லூரி மாணவர்ககுரிய நூலகளை வெளியிடுவதுடன், பொதுமக்களுககும பயன்படுகின்ற முறையில வரலாறு, அரசியல், உளவியல், பொருளாதாரம், புவியியல, விஞ்ஞானக் கலைகள் ஆகிய பல துறைகளிலும் பலவேறு நூல்களை வெளியிட முனைந்துள்ளது.

அததகைய முயறசிகளுள ஒன்றாகப 'புற்றுநோய்' என்ற இந் நூல தமிழ் வெளியீட்டுக கழகத்தின் 146ஆவது வெளியீடாக வருகிறது.

கல்லூரித் தமிழக குழுவின சார்பில் வெளியான 35 நூல்களையும சேர்த்து, இதுவரை 181 நூல்கள் தமிழ் வெளியீட்டுக் கழகத்தால் வெளியிடப் பெற்றுள்ளன. இந் நூல்களை வாங்கிப் படிப்பதனமூலம் தமிழ மககள் மேலும் வளர்ச்சி பெறுவார்கள் என்று நம்புகிறேன்.

இரா. நெடுஞ்செழியன்

புற்றுநோய்

பிரச்சினையின் தன்மை

ஆர். ஜே. ஸி. ஹாரிஸ்

ராபர்ட் ஹாரிஸ், PH.D., A.R.C.S. 1922-ல பிறந்தார்; ராயல் விஞ்ஞானக கலலூரியிலும், மெய்ட்ஸ்டோன் இலக்கணப பள்ளியிலும் பயின்றார்; சிறந்த முறையில் ரசாயனத்தில் பட்டமபெற்று, ஆராயசசித துறையில் 8 மாதங்கள் கழித்தார்; பின்னர் ராயல் மார்ஸ்டன மருததுவமனையின செஸ்டர் பீட்டி ஆராய்ச்சிக் குழுவில் சேர்ந்தார்; புற்றுநோய வளாச்சியைத தடைசெய்யும் மருந்துகள்பற்றி ஆராயசசி செய்துகொண்டிருந்த, காலஞ்சென்ற ஜி. ஏ. ஆர். கானுடன் பணிபுரிந்தார். சென்ற 17 வருடங்களாக, அவர் புறறுநோய உணடாககும வைரஸகள், நூக்ளியிக் அமிலஙகள் போன்றவைகளின் ஆராய்ச்சியில ஈடுபட்டிருக்கிறா.

ராபர்ட் ஹாரிஸ 1958-ல் செஸடர் பீட்டி ஆராய்சசிக குழுவிலிருந்து விலகி, இமபீரியல் புற்றுநோய் ஆராயச்சிக் குழுவில், பரீட்சாாதத உயிரியல். வைரஸ்கள் பிரிவின் தலைவராகப பணியாறறினர், மில்ஹில் பரிசோதனைச்சாலையின் பொறுப்பை ஏற்றுக்கொணடார்; நோயக குறியியலாளர்கள, உயிரியலினர், உயிர் இயைபியலினர் இவர்களின் துணைகொண்டு புறறுநோய்பற்றிய பிரசசினை களை ஆராய்ந்துவருகிறார்.

1946-ல் மணம்புரிந்துகொண்ட ராபர்ட் ஹாரிஸுக்கு ஒரு மகனும் மகளும் உண்டு. 1954-லிருந்து, அவர்கள் மில்ஹில்லில வசித்து வருகின்றனர்.

முன்னுரை

முதன்முதலில் நான் இதைக கூறவேண்டும். புறறுநோயபற்றி அசசம கொண்ட—அசசங்கொள்வது சாதாரணமும் புரிந்துகொள்ளக் கூடியதுமாகும்—அனைவரும படிககவேண்டிய புததகம இது வாழககையின மறறத துறைகளைப போல், இஙகு, அசசமகொளவது, புற்றுநோயபறறிய போதிய அறிவு இல்லாத தால்தான். மேலும, புறறுநோயபறறிப பலர் தவறுகவே புரிநதுகொணடிருக கினறனர். டாகடர் ஹாரிஸின இநதச சிறந்த புத்தகததைப் படிபபதனமூலம, அசசம் நீஙகி, ஆர்வம உணடாகும. புறறுநோய் ஒரு ரசமான தததுவமாகும அதன் தனமையை அறிவது, அதன் காரணிகளைக கணடுபிடிபபது, சிகிசசைககுச சிறந்த முறைகளை உருவாககுவது போனறவைகள், நவீன மனித சமூகததின் பொது அறிவிறகான ஓர் அறைகூவல் ஆகும.

இரணடாவதாக, விஞ்ஞானி என்று கூறும் எவரும, இந்தப புததகத்தைப படிககாமல் இருக்கமுடியாது. புற்றுநோய் பிரசசினைககுத தீர்வுகாண, உயிரியலினா, பௌதீக நிபுணர்கள், ரசாயனவாதி, வைரஸ்பறறிய நிபுணர்கள் ஒததுழைககவேணடும. வளாசசி ஏன தவறுன வழியில செல்லவேணடும? செல்களின் ஒரு கூட்டம, ஏன், மற்ற செலகளை பாதிதது வாழவேணடும்? இது தடை செயயப்படாவிட்டால், ஏன் உடல முழுவதும் அழிககப்படுகிறது? உலகத்திலேயே, இதுதான் சமூகத்திறகுத தீஙகான ஒனறு வளர்ச்சியில், வழககததிற்கு விரோதமான இந்த மாறுதல ஏன்? இது, ஜீனின கோளாறு? விநதுசெலலின திடீர் மாற்றமா? ஒரு வைரஸாலா? தினவாலா? வயது ஏறஏற நாளமிலலாச சுரபபியில் ஏற்படும் மாறுதலகளாலா? இவைகளில எது காரணம? அல்லது இவைகளில, பல காரணஙகள் ஒன்று சோவதாலா? இதுபறறி யாருககும ஒன்றும் தெரியாது. இந்தப் புற்றுநோய்ப் பிரச்சினைக்கான தீர்வு விஞ்ஞானத்தின் எந்தத் துறையிலும கிடைககலாம்.

மூன்றுவதாக, மருத்துவ மாணவன் இந்தப புததகத்தை அவசியம படிகக வேணடும். தெளிவான, எளிய நடையில், புற்றுநோயின் தற்போதைய நிலைபற்றி, விளக்கப்படடிருககிறது. இத்தனை விவரஙகள, மாணவனுககு எந்தப புததகத திலும கிடைத்தல அரிது. எலலா உணமைகளும ஒன்று திரட்டப்பட்டு இநதப புத்தகத்தில் கொடுககப்பட்டிருக்கின்றன. மாணவனது இறுதிப பரீடசை களுக்கு, டாக்டர் ஹாரிஸின் புததகம மிகவும உபயோகமாக இருககும. இது, செவிலியர்களுககும், எக்ஸ்-கதிர் சிகிசசையாளர்களுககும, புறறுநோய பற்றிய நவீன கருததுகள் தேவைப்படும மருத்துவர்களுககும மிகவும உபயோகமாக இருக்கும்.

இந்தப் புத்தகத்தை எழுதியதன்மூலம், டாக்டர் ஹாரிஸ் நாட்டிற்குச சிறந்த சேவை செய்திருக்கிறுர். இது, பொதுஅறிவு படைதத சாதாரண மனிதனுக்குமாத்திரமன்று, விஞ்ஞானிகளுககும, பகுததறிவு மாணவர்களுக்கும், மருத்துவர்களுக்கும் மிகவும் அவசியமான ஒரு சிறந்த புத்தகம்.

ஏ. ஈ. கிளார்க்—கென்னடி

அறிமுகம்

புற்றுநோய்ப் பிரச்சினைபற்றிய இந்த அருமையான புத்தகத்திற்கு அறிமுகம் எழுதுவதுபற்றி, நான் மிகவும் மகிழ்கின்றேன். இந்தப் பொருள்பற்றி, நான் இதுவரை படித்த புத்தகங்களில், இது மிகவும் சிறந்ததாகும். ஒரு சிரமமான பொருள்பற்றிய விவரங்களை, மிகவும் எளிதாகவும், திறமையாகவும் எழுதும் ஆற்றல்வாய்ந்த டாக்டர் ஹாரிஸை நான் பாராட்டுகிறேன்.

உலகம் முழுவதும் பெரிதும் பரவியிருக்கும் நோய் புற்றுநோயாகும் ஆகவே, எல்லோருக்கும் இதில் ஆர்வம் உண்டு. இது, சாதாரண மனிதனுக்கு மாத்திரமல்ல, எல்லா மருத்துவ மாணவர்களுக்கும், செவிலியர்களுக்கும் மிகவும் உறுதுணையான ஒன்று. இந்தப் புத்தகத்திற்கு எனது வாழ்த்துகள்.

செசில் வேக்லி
இம்பீரியல் புற்றுநோய்
ஆராய்ச்சிக் குழுவின் தலைவர்,
ஆங்கிலேய சாம்ராச்சியப்
புற்றுநோய்க் கழகத்தின் துணைத்தலைவர்.

பொருளடக்கம்

புகைப்படங்களின் பட்டியல்

(ஆருவது அத்தியாயப் பக்கங்கள் 72—73-ல் காணப்படுகின்றன)

1. (a) எலியின் கணையத்தின் செல்லின் ஒரு பகுதி—எலக்ட்ரான் நுண்படம்.
   (b) இதே படத்தின் குறிப்பிடப்பட்ட பகுதி, எளிதாகக் காட்டப் பட்டது.

2. (a) மனிதக் கரு செல்லின் சைட்டோபிளாஸத்தின் ஒரு பகுதி.
   (b) பகுப்படையும் மனிதக் கரு செல்லின் ஒரு பகுதி—எலக்ட்ரான் நுண்படம்.

3. (a) மனிதப் புற்றுநோய் செல்லின் ஒரு பகுதி—எலக்ட்ரான் நுண் படம்.
   (b) இதே படத்தின் குறிப்பிட்ட பகுதி, பெரிதாகக் காட்டப்பட்டது.

4. (a) ஆரோக்கியமான சுண்டெலி கல்லீரலின் ஒரு பகுதியின் நுண் படம்.
   (b) ஆரோக்கியமான சிறுநீரகப் பகுதியின் நுண்படம்.

5. (a) சுண்டெலிக் கட்டியின் ஒரு பகுதி.
   (b) தைராய்டு சுரப்பியின் ஓர் அடினோமா.

6. முலையின் கார்சினோமா.

7. (a) ஹேம்ஸ்டர் சார்கோமாவால் நுரையீரலில் விளைந்த மெடாச்டேசு களின் நுண்படம்.
   (b) பால்மூலம் கடத்தப்பட்ட சாதனத்தால் விளைந்த சுண்டெலி முலைப் புற்றுநோய்களுடன் காணப்பட்ட வைரஸ் துகள்கள்—செல்களுக்கு வெளியே.
   (c) மில்ஹில் பாலியோமா வைரஸால் பாதிக்கப்பட்ட சுண்டெலிக் கரு செல்லின் ஒரு பகுதியின் நுண்படம்.
   (d) 'c' ஐப் போன்ற ஒரு நுண்படம். மில்ஹில் பாலியோமா வைரஸ் செலுத்தப்பட்ட ஒரு சுண்டெலியின் உமிழ்நீர் சுரப்பிக் கட்டியிலிருந்து எடுக்கப்பட்டது.

8 (a) எதிர்மறை முறைமூலம் தயார் செய்யப்பட்ட நான்கு தனித்தனியான வைரஸ் துகள்கள்.
   (b) மேற்கூறிய முறையில் (a) தயாரிக்கப்பட்ட ரூஸ் கோழிக்குஞ்சு சார்கோமாவின் வைரஸ்.

புத்தகப் படங்களின் பட்டியல்

1. செல்லும் செல் பகுப்பும்

ஓர் உயிரினத்தை உருவாக்கும் செல்கள் சிலவற்றின் இயற்கையான நடத்தை மாறுவதால் ஓர் உயிரினத்தில் புற்றுநோய் தோன்றுகிறது எனத் தெரிகிறது. அந்தந்த உயிரினத்தின் வாழ்க்கைக்கு ஏற்ப அமைந்துள்ள வளர்ச்சி நியதிகள், சிறப்பு வேறுபாடுபற்றிய நியதிகளை இதுநாள்வரை அனுசரித்துவந்த செல்கள் திடீரென்று அத்தகைய நியதிகளுக்குப் பணிய மறுத்துத் துரிதமான ஒழுங்கற்ற பகுப்பு அடைந்து, அருகிலுள்ள ஆரோக்கியத் திசுக்களை ஊடுருவல், இரத்த ஓட்டத்தின் வழியாகவும் நிணநீர் ஓட்டத்தின் வழியாகவும் மற்ற உறுப்புகளுக்குப் பரவுதல்போன்ற வரம்புக்கு மீறிய செயல்களில் ஈடுபடுகின்றன.

மனித, மிருக உடலைப் பலதரப்பட்ட செல்கள் உருவாக்குகின்றன என்பதை நாம் அறிவோம். அதுபோலவே, பலவகையான புற்றுநோய்களும் இருக்கின்றன. புற்றுநோயை ஒரு தனி நோயாகக் கருதக்கூடாது; ஒன்றுக்கொன்று இணைந்த பல நோய்களின் ஒரு குடும்பமேயாகும். பெண்முலைப் புற்றுநோயின் செல்கள், எலும்பு மஜ்ஜைப் புற்றுநோய் செல்களிலிருந்து உயிரியல் நியதிகளைப் பொறுத்த மட்டில் பல வகைகளில் மாறுபட்டவை. சிறுநீரகப் புற்றுநோயும், சிறுநீர்ப்பையின் புற்றுநோயும் பல குணங்களில் மாறுபட்டன. ஆகவே, ஏதோ ஒரே ஒரு காரணம்தான் இருப்பதுபோன்று, புற்றுநோயின் அந்த ஒரு காரணம் என்னவாக இருக்கும் என்று பேசுவது தவறாகும். இயற்கையான ஒரு செல் கொடூரமான புற்றுநோய் செல்லாக மாறுவதற்கான காரணம், எல்லா செல்களுக்கும் பொதுவான ஒன்றாக இருந்தாலும், இந்த மாற்றங்களை ஊக்குவிக்கும் மற்ற முதல் காரணங்கள் மாறுபட்டு இருக்கலாம்.

நமது வாசகர்களில் சிலருக்கு மிகவும் புதிதாக இருக்கும் பல கோட்பாடுகளை நாம் ஏற்கெனவே அறிமுகப்படுத்தியிருக்கிறோம். ஆகவே, நாம் முதலிலிருந்தே ஆரம்பிக்கிறோம். இயற்கையான செல்களையும், அவை இனப்பெருக்கமடையும் வழிகளையும் மிகவும் சாதாரண ஓர் ஆரம்பத்திலிருந்து மிகவும் சிக்கலான அமைப்பும் பணியும் கொண்ட ஓர் உயிரினமாக மாறிய பாகுபாட்டைப் பற்றியும், உடலில் ஏற்படும் தேய்மானம் சீர்செய்யப்படும் முறைகள்பற்றியும் நாம் படிப்படியாக விவரிப்போம்.

தாவர, மனித வாழ்வின் அடிப்படை மூல அலகு செல்லாகும். ஒரு வீட்டிற்குச் செங்கல் எப்படியோ அதுபோன்றே ஓர் உடலுக்கும் செல் உள்ளது.

என்றும் இது பெருமளவு சிக்கல் கொண்டது. அது தன்னைத் தானே பெருக்கிக் கொளள முடியும. ஒரு நாகரிக வீட்டில திறமை வாய்ந்த உட்புற வேலைப்பாடுகள் இருந்தபோதிலும, உயிரினததின் வாழககையில் பணிபுரியும் செலலின் பஙகு மிகவும் மகததானது. உதாரணமாக, வீட்டின நுழைவு கதவில் இருககும் மணியின் அழுககுப பிததானையும, சமையலறை மணியையும ஒன்றுக இணைக்கும் கமபிகளை வீட்டுச் செஙகலலுடன ஒபபிடககூடாது எனினும, உடலில கால் பெருவிரலையும மூளையையும இணைககும நரமபுப் பாதை செலகளால் ஆனது. இந்த செல்கள தாயின கர்பபப்பையில பொலிவான ஒறறைக கருச்செல்லிலிருநது உருவானவை. அவை உடலின ஒரு பாகததிலிருநது மற்றொரு பாகததிற்கு மின்சார உணர்சசிகளை எடுததுச செலவதறகெனவே அமைந்தவை.

செல் என்பது ஒரு பருப்பொருளாகும. அது உடைககப்பட்டு, அதன் ஒவ்வொரு பாகமும் ரசாயன, பௌதிக ஆய்வுககுட்படுத்த முடியும. இததகைய செல்துகள்களில் சில, தஙகளது அன்றுடப பணிகளில பலவறறை ஒருசில காலத்திறகு ஆற்ற முடியும். இவைகளைப்பற்றியும் தெரிந்துகொளளலாம். அவை ஆகஸிஜனை உபயோகிதது சாககரைப பொருள்களைப பிரித்துப் புதிய செல பொருளகளையும் உணடாக்கலாம. ஆனல், இததகைய தனிப்பட்ட, குறைந்த கால நடவடிக்கைகள, எப்படி ஒரு சமையலறைமாததிரம் வீடு ஆகிவிட முடியாதோ, அதுபோன்று வாழக்கை ஆகிவிட முடியாது. இவவிதம் உடைபட்ட செல் தொடாந்து நீணட கால வாழ்க்கை நடத்த முடியாது. மேலும், இவ்விதம உடைபட்ட செல்களை மீண்டும் ஒன்றுசேரககும வழியை இதுவரை யாரும் அறியார்.

உயிருள்ளது என்று சொல்லப்படுவதன் குறைந்த மூல அலகு செல்லாகும். ஒவ்வொரு செல்லும் தனது இனப்பெருக்கத்திறகான சாதனஙகளை உருவாக்கும ஒரு ரசாயனத் தொழிற்சாலையாகும்; அல்லது தனிச சிறப்பு வாய்ந்ததாக இருந்தால், இன்சுலின் அல்லது இரைப்பையின் ஜீரண என்ஸைமகள்போன்ற ஏற்றுமதிக்கான சரக்குகளை உருவாக்குகின்றன. உடல் பூராவுமே, செல்களாலோ அல்லது செலகளின விளைபொருள்களாலோ ஆனதாகும. நமது தலை ரோமத்திலிருந்து கால்களின் அடிப்பாதம்வரை நாம இவவித செல்களாலேயே ஆக்கப்பட்டிருககிறோம். மேலும, செல தொழிறசாலைகளின எலலா 'முதனிலைப் படிவஙகளுமே, நாம் முதலில் ஆரமபமான பொலிவான முட்டையில ஏற்கெனவே உருவானவை. அதன் விட்டம் ஒரு மி.மீ.-க்கும குறைந்ததாகும்.


சென்ற 300 ஆணடுகளாகவே செல்கள் இருப்பது நமக்குத் தெரியும். ராபர்ட் ஹூக் என்ற ஆஙகிலேய ஒலிபெருக்கி அறிஞர், ஒரு மெல்லிய தக்கையின் பகுதியில் முதலில் 1665-ல் செல்களைக் கண்டார். அவர் அவற்றைக கீழககண்டவாறு விவரித்தார்: 'ஒரு நீணட தொடர்ச்சியான நுணதுளையினின்று சில மெல்லிய விதானஙகளால் பிரிக்கப்பட்ட பலப்பல சிறிய பெட்டிகள்'. மேலும், இவர், பல தாவர வாககஙகளின் உயர்நிலைப் பகுதியும இதுபோன்றே ஆககப்பட்டிருப்பதைக் கண்டார். 1839-ல் தாவரநூல் அறிஞர ஷலெய்டன், விலஙகு

நூல் அறிஞர் ஷ்வான் என்ற இரண்டு ஜெர்மானியர்கள் எடுத்துக்காட்டும்வரை, வாழ்க்கையின் அடிப்படை மூல அலகு 'செல்'தான் என்ற கோட்பாடு பிரபல மடையவில்லை.

20 ஆண்டுகள் கழிந்து, வர்சோவ் என்ற ஜெர்மானிய நோய்க்குறி இயல் வல்லுநர், மேலும் ஒரு முக்கியமான கோட்பாட்டைத் தெரிவித்தார். 'ஏறகெனவே இருந்த செல்களிலிருந்துதான் செல்கள் உண்டாகின்றன' — 'ஓம்னிஸ் செல் லுலா - ஏ - செல்லுலா' கருவுறுதலினபோது விந்தும முட்டையும சேர்நதுதான் கருசெல்கள் தோன்றுகின்றன என்று உயிரியல் வல்லுநர்கள் தெரிநதுகொண்டபோது, 'வாழக்கை என்பது ஒரு தஙகு தடையற்ற செல் களின ஒரு பல வண்ணப பகட்டான வளர்சசியாகும்' என்பது தெளிவாயிறறு. செல்பகுப்பு, வளர்சசி, உயிரினஙகளின் வளர்ச்சி, வியாதி, வயதடைவது, புற்று நோய், மரணம் எல்லாமே செல்கள் நடத்தையின் பல அம்சங்களாகும். உயிருட னிருககின்ற செல்களாலும், இறந்துபடுகினற செல்களாலும் அவறறின் தீவிர மான, சோர்வற்ற இணைப்பு முயற்சிகளின் விளைபொருள்களாலும்தாம் நமது உடல் பூராவுமே ஆககப்பட்டிருககிறது என்பதை நாம அறிவோம்.

செல்களின் அளவும் உருவும் தாவர, மிருக இனஙகளுக்கிடையே மாறுபடு வது அல்லாமல், ஒரே உயிரினத்தின் உள்ளிருக்கும் செல்களுக்குள்ளும் மாறுபடுகின்றன.

அங்குல முறையில் அல்லாமல், அவைகளின் அளவை மெட்ரிக் முறையில் சொல்வது மிகவும் வசதியாக இருக்கும். ஒரு சென்டிமீட்டரின் 10-ல் 1 பகுதியான 1 மில்லி மீட்டரை ஆயிரம் மூல அலகுகளாகப் பிரித்தால், அந்தப் பிரிவு ஒவவொன்றையும் 1μ என்கிறோம். பொதுவாக, செல்களை அளககும் அளவு இதுதான். எவ்வித உதவியுமின்றி, மனிதக் கணகளால் பார்க்கக்கூடிய அளவு 80μ தான் எனபதைக கவனத்தில் கொள்ளவேண்டும. சாதாரண உருப்பெருக் கியின்மூலம் 0·5 μ வரை பார்க்க முடியும். இதிலும் குறைந்த அளவுள்ள மிகச சிறிய பொருள்களைப் பார்க்க எலக்ட்ரான் உருப்பெருக்கியின் உதவி தேவை. இதன் சக்தி 0.001 μ வரையாகும் (அலலது 10 ஆஙகஸ்ட்ராம் யூனிட்டுகள்); படம் 1ஐப் பாரக்கவும்.



படம 1.

மனிதாகளின சாதாரண உருபபெருககி, எலெகட்ரான உருபபெருககி இவைகளின சக்திகளினது எலலைகள.

மனித உடலில் சிறிய இரத்த வெள்ளணு செல்தான் மிகவும் சிறிய செல்லாகும. அதன் விட்டம் சுமார் 4 μ ஆகும். நரமபு செலதான் மிகவும் பெரிய செல். அதன் தொடா நரமபு 100 செ.மீ. (1,000,000 μ) நீளம இருககும. செல்களுக்கும் உடமபிற்கும் செங்கல்களையும் வீட்டையும் முனனா ஒப்பிட்ட உதாரணத்தில், மணிக்கம்பிக்கு, இது சமமாகும். எனினும், நரமபு செல்லின் முக்கியமான உட்கருப்பகுதி வெளளணுவிடமிருந்து அவ்வளவு மாறுபட்டதன்று. அதன விட்டம் சுமார் 100 μ ஆக இருககலாம். முழுவதும பொலிவான மனித முட்டை சுமார் 1,000 μ விட்டமாக இருக்கலாம. அது செய்யவேணடிய வேலைக்கு ஏற்ப செல்லின அளவு அமைக்கப்பட்டிருககிறது. நாம முன்னரே தெரிந்துகொண்டதுபோல, இந்தச் சிக்கலும வேறுபாடும் நிறைநத. அமைபபும் செயலும் ஆரம்ப முட்டைகுள 'அடைபட்டுக் கிடந்தன' எனபது மிகவும ஆச்சரியமான ஒன்றாகும.

இந்தச் சிக்கல்கள் மாத்திரம் அடைபட்டுக்கிடக்காமல், உயிரினத்தின் செல்களின் இறுதி எண்ணிக்கை பூரணததுவம் அடையும்போது ஜீவனின இறுதி உருவால நிாணயிககபபடுகிறது. உதாரணமாக, கருவக முதிாசசியின்போது, மனிதன், ஒரு தனி செலலாக ஆரமபமாகிறான். சுமார் 9 மாதஙகள் கழிந்து, சுமார் 2.41 செல்கள் கொணட ஒரு குழந்தையாக உருவாகிறான் (2 41 என்பது 2,000,000,000,000). இநதக காலம பூராவும இதே விகிதத்தில் செலகளை பகுப்படைந்தால், 42 செல் தலைமுறைகள் உணடாகி, ஒவ்வொரு செல்லும் ஆறு, ஏழு நாட்களுக்கு ஒரு தடவை பிரிந்திருக்கும். ஒரு குழநதையைவிடப் பூரண வளர்ச்சியடைந்த மனிதனிடம் சுமார் 30 பஙகு செல்கள் அதிகமாக உள்ளன.

உடலின் செல்கள் ஒரே விகிதத்தில் பகுப்படைவதிலலை. நரம்பு, தசை போன்ற செல்களில் சில, பிறவியினபோதே தஙகள முழு எண்ணிககையில் இருக்கின்றன. மேலும, அவைகளில் ஒன்று அழிந்துபட்டால அவைகளுக்கு மாற்றுக் கிடைக்காது. ஏனெனில், இனியும் பகுபபடையும சக்தி இலலாமலும், இனப்பெருக்கம செயய முடியாமலும அவைகள் அநத அளவிற்குச சிறப்புத் தன்மை வாய்ந்துள்ளவைகளாகும். இயற்கையாகவே வளரும உடலின் அளவிற்கு ஏறப அவைகள் தஙகளை மாறறியமைத்துக்கொள்ளவேண்டியிருப்பதால், அவைகள் அளவில் அதிகரிக்கின்றன. சாதாரண மனிதனின் கல்லீரலிலோ, சிறுநீரகததிலோ செல்பிரிவு அதிக அளவு நிகழ்வதில்லை. ஆனால், இந்த அங்கங்கள், செல்கள் இழந்துபோகுமபடியான சீர்கேடடைந்தால், எஞ்சியிருக்கும் செல்கள், அந்தந்த அஙகத்தைத் தனது முந்திய அளவிற்குக் கொண்டுவர செல்பகுப்பின்மூலம் முயற்சி செய்கின்றன.

எனினும், உடலில் இடைவிடாது உபயோகப்படுத்தப்பட்டு, ஈடுசெய்யப் பட்டுவரும் செல்களும் நிறைய இருக்கின்றன. இரத்த அணுக்கள் எளிதில்

தேய்மானம அடைகின்றன. அவைகள் எலுமபு மஜ்ஜையிலிருந்து மீண்டும் புதுபபிக்கபபடுகின்றன. அவை ஒவவொரு நிமிடமும பல இலட்சககணக்கான செல்களை இரத்த ஓட்டத்தில் கொணடு சேர்ககின்றன. சருமததிலிருந்தும பலதரபபட்ட வழிகளில செல்கள் தேய்மானம அடைகின்றன. அதே விகிததததில தோலிற்கு அடியிலிருந்து செல் பகுப்பால் அவைகள் ஈடுசெய்யப்படுகின்றன.

அதிதீவிரமாக செல் பகுப்பு நிகழும மற்றோர் இடம் குடலின் உட்புறச் சுவர்களில ஆகும். இந்த உறுப்பு மிகவும் கடினமாக வேலை செய்வதால், குடல் அமைபபின் ஒருமைப்பாட்டை ஒரே சீராக வைததிருக்க இடைவிடாது உற்பததியாகவேணடிய செல்கள் பெரிதும் தேவைப்படுகின்றன. ஒரு பெண்ணின் தேவைக்குப போதுமானதைவிட அதிக முட்டைகளுடன் அவளது வாழ்வு தொடஙகுகிறது. மனித ஆணில விந்து செல்கள் வயதுவந்த பருவததிலிருந்து முபபடையுமவரை இடைவிடாது உற்பத்தியாகிககொணடே யிருக்கினறன. தினமும் பல இலட்ச அளவில் அவை உற்பத்தி செய்யப்படுகின்றன.

ஒரு செலலின் அமைப்பைப்பற்றி நாம விவாதிக்கத் தொடங்கும்போது, ஒரு சராசரி மனிதனைப்போன்ற ஒரு 'குறிப்பிட்ட அமைப்புள்ள' செல் கிடையாது எனபதை நாம நினைவில கொள்ளவேணடும். ஆகவே, பல விலஙகு செலகளின அமைபபுக் குணஙகளைககொண்ட ஒரு கலவையான செல்லைப்பற்றித்தான் நாம இஙகு விவரிககப்போகிறோம்.

எலியின கல்லீரலின செல் 25 μ விட்டம் கொண்டிருக்கும். மற்ற செல்களைப்போல் அது இரண்டு பாகஙகள் கொணடது — சைடோபிளாசம், நூக்ளியஸ் (உட்கரு). செல் என்ற தொழிற்சாலையின் 'உபகரணச சாமான்கள்' சைடோபிளாஸத்தில் இருக்கும். இதன்மூலம செலலின் தேய்மானம் அடைந்த பாகஙகள் ஈடுசெய்யப்பட்டு, செல் கிரகிக்கும் உணவு சக்தியாக மாற்றப்படுகினறன. இதனமூலம செல் தனது அன்றாட வேலையைச செய்யவோ, அல்லது வருஙகால உபயோகததிற்குக கொழுப்புப் பொருளாக அலலது கிளைகோஜனைகச சேமிததுவைக்கவோ செய்கிறது.

தொழிறசாலையின் திட்டமிட்டுச் செயலாற்றும் பகுதியாக நூக்ளியஸ் பணிபுரிகிறது. ஒருவேளை அதன் டிஆக்ஸிரைபோநூக்ளிக் அமிலத்தின் (D N A) மரபுவழித் தகவல்களை எடுத்துச் செல்கின்றன. இதைப் பெற்றோர்களிடமிருந்து குழந்தைகளுக்குக் கொடுககிறது. உண்மையில் இதுதான் முழு செல்லையும் கட்டுப்படுத்துகிறது.

செல் (புகைப் படம் 1a) ஒரு படலத்தால் சூழப்பட்டு மற்றொரு செல்லிடமிருந்து பிரிக்கப்படுகிறது. அருகிலுள்ள செல்களின் படலங்களும், தாஙகளே உற்பத்தி செய்யும் செல்லிடை இணைப்பொருளால் ஒட்டி

இணைக்கப்படுகின்றன. செல் படலத்தை முட்டை மேலோடு போன்ற ஒரு சாதாரணப் பெட்டியாகக் கருதக்கூடாது. படலம் நிலையமைதி சார்ந்த பொருள் என்பதைவிட இயக்க ஆற்றல் சார்ந்த பொருளாகவே தோன்றுகிறது. இதனுள்ளிருக்கும் மெல்லிய துளைகள் வழியாக செல்கள் உணவை உள்ளே எடுத்துக்கொள்ள முடியும், வேண்டாதவற்றை வெளியேற்ற முடியும். ஏற்றுமதிக்காகத் திரவங்களைச் சுரக்க முடியும். ஹார்மோன்கள் மூலமாகவோ, அல்லது ரசாயன உதவிகள் கொண்டோ ஒன்றுடன் ஒன்று தொடர்புகொள்ளவும் முடியும். செல்லின் படலம் மிருதுவானதும் அன்று; பல மேடுபள்ளங்களுடன் கூடி அதன்மூலம் செல்கள் அருகிலுள்ளவைகளுடன் நன்கு இணைந்து, ஒரு குறிப்பிட்ட பலத்துடன்கூடிய ஒரு திசுவாக செல்படலம் உருவாகலாம்.

நூகளியசுக்கும் செல்படலத்திற்கும் இடையே உள்ள இடைவெளியில் சைடோபிளாச இடைப்பொருள் (அடித்தளப் பொருள்) அமைந்திருக்கிறது. அதனுள்ளே மிகச் சிறிய பொருள்களான மைடடோகாண்ட்ரியா, எண்டோபிளாசத்தின் வலைபோன்ற சவவு, சென்ட்ரோசோம், உட்கரு (நூகளியஸ்) போன்றவைகள் காணப்படும்.

ஒரு காலத்தில் சைடோபிளாசம் என்பது ஒரு திரவக் கரைசல் என்றும், உப்புகளும் புரதங்களும் அத் திரவத்தில் மிதந்துகொண்டிருக்கின்றன என்றும் கருதப்பட்டது. ஆனால், இப்போது அது ஒரு பெரிதும் திட்டமிட்டு உருவாக்கப்பட்டு நாறபுரத அணுத்திரள்களுடன் கூடிய ஒரு சிறந்த வேலைப்பாட்டுடன் கூடிய வலைப்பின்னலுடன் கூடியது என நாம் அறிகிறோம். அதுதான் செல்களின் பல முக்கியப் பணிகளுக்குக் காரணமானது. உயிர்வாழும் செலலைபபோன்ற இத்தகைய திறமையான உயிர் இயைபியல் சாதனம், தனக்கு வேண்டாத பொருள்களைத் தனது படிமுறை வளர்ச்சிக் கோட்பாட்டினபோது வெளியேற்றியிருக்கும் என நாம் நம்பலாம். என்னவாக இருந்தபோதிலும், அது மிகவும் சிறப்பு வாய்ந்த ஒன்றாகும்.

மைட்டோகாண்ட்ரியாக்கள் (புகைப்படம் 2a) உருளைக்கிழங்குபோன்றோ அல்லது வெள்ளரிக்காய்போன்றோ வடிவத்துடன்கூடி 0·2—3 μ என்ற அளவில் இருக்கின்றன. அவைகள் இரண்டு மடிப்புகளாலான படலத்துடன் கூடியவை உள்ளுறை நன்றாக மடிந்து, பிரிக்கும் திரைபோன்று அமைந்து கிரிஸ்டா எனப்படும் முகட்டுடன் கூடி விளங்குகிறது மைட்டோகாண்ட்ரியா, செல்லினுள் இடைவிடாத இயக்கத்திலேயே இருக்கிறது. தேவைப்படும்போதெல்லாம் சக்தியளிக்கும் சிறு 'அடுப்புகளாக' அவை பணிபுரிகின்றன. செல்லுக்குள் வரும் சர்க்கரைப் பொருள் எல்லாம் இந்த 'அடுப்பு'களால் 'எரிக்கப்படுகின்றன'. இதன்மூலம் கிடைக்கும் சக்தி அடினோசின் டிரைபாஸ்பேட் (A T P) உண்டாகக உதவுகிறது. இதுதான் அவசிய ஜீவாதாரப் பணிகளுக்குத் தேவையான சக்திக்கு மூலாதாரமாக 'விளங்குகிறது'. 'எரிக்கப்படுகிறது' என்ற சொல்லின்மூலம் விளங்குவதைவிட, உணவை சக்தியாக மாற்றும் பணி மிகவும்

சிககல் வாய்ந்தது. மைட்டோகாணடரியாவில் அடுக்கப்பட்டு இருக்கும் பலதரப் பட்ட என்சைம்களின் உதவியால், அடுககடுக்கான பல சிக்கல் நிறைந்த ரசாயன முறைகள்மூலம இந்தப் பணி ஆற்றப்படுகிறது.

தசைகள சுருஙகவும், நரம்புகள்மூலம் உணர்ச்சிகள் பரவவும், அமைப்பு களைச் சீர் செய்யவும, செல்களுக்குத தேவையான பொருள்களை உருவாககவும் இநத சக்தி பயன்படுத்தப்படுகிறது. (இந்த மாற்றஙகளை உணடாககும் என் சைம்களும், புரதகிரியாவினை ஊககிகளும் செல்களிலேயே ஆககப்படுகின்றன என்பதை நாம நினைவில் கொள்ளவேண்டும்.) வைட்டமின் 'பி' கூட்டம் செல் செயலின இந்தப் பணியில் பஙகு பெறுகிறது. 'பி' வைடடமினின் ஒவவொரு பகுதியும் மைடடோகாணடரியா என்சைம அமைப்பின பகுதியாகப் பணியாற்று கின்றது. மைடடோகாண்ட்ரியாவில 25 விதவிதமான எனசைம அமைப்புகள் இருககினறன எனக கணககிடபபட்டு இருககின்றது. ஒவ்வொனறிலும 20 வகையான புரதஙகள இருப்பதாகவும, ஒவவோர அமைபபின 2,000 நகல்கள ஒரே சமயத்தில் உடனிருந்து வாழ்வதாகவும தெரிகிறது. புல செலகளில் ஒரே ஒரு நூக்ளியஸ (உட்கரு) இருநதபோதிலும் பல மைட்டோகாண்ட்ரியாக்கள் உள்ளன. எலியின கல்லீரலின செல் 1,000 மைட்டோகாணட்ரியாக்கள் கொண்டிருக்கினறன.

செல்களின் சைட்டோபிளாஸம் வலைப் பின்னல்போன்ற இணையான படலங் களைக கொணடிருககின்றன (புகைப்படம 1b). எலக்ட்ரான் உருப்பெருக் கியின் உதவிகொணடு எடுக்கப்பட்ட படஙகளில், இவைகளினமேல் கருமை யான சிறிய புளளிகளாக ரைபோ-நூகளியோ புரதத துகள்கள (R N P) தெரிகின்றன. இவை விடடததில் 0·02 μ-வைவிடக குறைவாகத் தெரியும. இவைகளில செல் சைட்டோபிளாசததின் ரைபோ நூகளியிக அமிலம் (ஆர. என். ஏ.) இருககினறன. இநத செல் பொருளகளின் உயிர் இயைபியல் பணபைபபறறித தற்போதைககு நமக்குத தெரியவேணடியதில்லை. எணடோபிளாசததின் வலைபோனற சவவு (ரெடிகுலம), சைடோபிளாசததினுள் அமைந்துள்ள பல கால்வாய்கள கொணட அமைப்புப்போல் தோன்றுகிறது; செல் படலததின் வழியாக வெளி உலகததுடனும நூகளியசுடனும் (உட்கரு) தொடர்பு கொணடிருபபதாகவும தெரிகிறது. வெளிபபடையாகத தெரிகின்ற கால்வாய் அமைபபு எனற முறையில அவைகளின் முககியமான பணிகளில் ஒன்று, செல்லுககுளளும வெளியேயும முககியமான தேவையான பொருள்களைக் கொணடுசெலவதாகும. செல தொழிறசாலையின உபகரணஙகளான என்சைம களை உருவாககுவது அவறறின பொறுப்பாக இருக்கலாம. இந்த ஆர.என்.பி. துகள்கள துணைச சாதனமாகப் பணி புரிநது, அவைகளினமேல புதிய பொருள் உணடாக்க ஏதுவாகப் பணிபுரிகின்றன எனத் தறபோது நமபப்படு கிறது. எனினும, எணடோபிளாச ரெடிகுலத்தின் (வலைபோன்ற சவ்வு), முககியப் பணி புரதஙகளை உருவாக்குவதேயாகும்.

உட்கருவிற்கு ஒரு பக்கத்திலும், மிகவும நெருங்கியும ஓா அடர்த்தியான பொருள் (சென்ட்ரோசோம) இருககிறது (புகைப்படம 2b). அமைதி நிலையில் இருககிற செல்லில் — அதாவது, தொடாந்து பகுபடுமபோது ஏறபடும் இடை நேரத்தில் — இந்த சென்ட்ரோசோம அவ்வளவாகத் தெரிவதிலலை எனினும், செல் பகுப்படையுமபோது இதற்கு ஒரு பெரிய பணி இருககிறது. சென்ட்ரோ சோமிறகுள் இரண்டு கமபி வடிவமான துகள்கள் இருககின்றன. அவைதாம் சென்ட்ரியோல்கள் என்ற ஒன்றுககொன்று செஙகோணததில் அமைந்த சிறிய உருணடை வடிவமான பொருள்களாகும. இநத ஒவவொரு செனடரியோலி லும ஒன்பது நார் இழைப பொருளகளோ அலலது ஜோடியான நாா இழைப் பொருளகளோ அதன் சுறறுவட்டததைச் சுறறி இருககினறன. இவைகளில் ஒனறு அலலது இரணடு மததியிலும் இருககலாம. உயிாமப பிளவியககம செல் பிரிவின ஆரம்ப அறிகுறிகளில் ஒனறு. இந்த செனடரியோலகள தனியாகப் பிரிநது நூகளியசின எதிாப்புறஙகளில இடம் பெறுகினறன. ஒவவொனறும் சாமநதியினச செடிபோனறு உருவம படைத்து, இதன ஒவவொரு கதிாகளும் இணைந்து நூல் சுற்றும உருளைபோனறு (ஸபிணடில எனறு சொலலப்படும்) இழைநாாப் பொருளகளின் ஒரு கூட்டமாகத தோன்றுகிறது. இவை செல் பிரிவின்போது, குரோமோசோமகள் பிரிவதில் முககியப் பஙகு வகிககினறன. கீழே காண்க.

உட்கரு (நூக்ளியஸ்)

உட்கருவினுள் செல்லின் குரோமோசோம்கள இருககின்றன. அவைகளி னுள் ஜீனும (மரபு உறுதிப்படுததும் நுட்ப அணு), அதைக கொணட டி. என். ஏ.-யும் இருககின்றன. ஜீனகள் என்பது ஓா உயிரின முழுவதறகுமான முதனிலைப படிவமாகும. இது ஒரு செல் சந்ததியிலிருநது மறறொனறிறகு எடுத துச செல்லப்படுகிறது. செல் பணிபுரிவதை நூகளியஸ் (உட்கரு) பொது வாகக கட்டுப்படுததுகிறது. குரோமோசோம்களைத தவிர, ஒனறு அல்லது இரணடு நூகளியோலகளும உட்கருவினுள் இருககின்றன. சைடோபிளாசத் திற்குள் காணபபடுவதுபோனற ஆர். என. பி. பொருளால் நூகளியோல்ஸ் ஆக்கப்பட்டிருககிறது. உடகருவிற்கும சைடோபிளாசததிற்கும இடையே ஒரு நடுவராகப பணிபுரிகிறது. மரபின தனி அலகுகளான உயிரினஙகள குரோமோ சோம்களில நீளவாட்டில் எடுத்துச செலலப்படுகின்றன. சைடோபிளாசத்தின் ரைபோநூகளியிக அமிலத் (ஆா. என். ஏ.) திணிடமிருந்து இது மாறுபட்ட, டிஆக்ஸிரைபோ நூகளியிக அமிலத்தால் (டி. என். ஏ.) ஆனது.

உட்கருவிற்குக் கட்டுப்படுததும் ஒரு படலம் உணடு. செல்லின் படலத்தைப் போன்று இதிலும் துளைகள் இருக்கும் (புகைப்படம் 3a, b). மரபுவழி ஒழுஙகு ஜீன்களின் டி.என்.ஏ.-யில் இருககிறது. நூக்ளியோல்ஸின் ஆா.என்.ஏ.-யால் இந்தத் தகவல் சைட்டோபிளாசத்திற்கு உட்கரு நுணதுளைகள்மூலம் செலுததப் படுகிறது என்பது சாத்தியமே.

குரோமோசோமகளைப்பற்றிய தகவலகளைத் தெரிந்துகொள்வதில் எலக்ட்ரான் உருப்பெருக்கி இதுவரை உபயோகபபடவிலலை. செல் பிரிவின்போது அவைகளின நடததையைப்பற்றிய தகவல்கள் பெரும்பாலும சாதாரண உருப்பெருககியினமூலமும, சமீப காலமாக உயிர் இயைபியல்மூலமாகவும் கிடைத்ததாகும.

அடுத்த பகுதியில் செல் பகுப்புப்பறறி விளக்கப்படும். அடுத்த பகுதிக்குப் போகுமுன்னர், எஙஙனம ஒவவொரு தனி செல்லும் சேர்நது திசுவாக மாறுகிறது என்பதைப பார்ப்போம. உருபபெருககிப படஙகள் (புகைப்படம் 4a & b) சாதாரணக கல்லீரல், சிறுநீரகம இவைகளின செல்களைக காட்டுகின்றன. இந்தத் திசுககளின ஒவவொன்றும ஒரு வரையறுககப்பட்ட உருவ அமைப்பைக்கொண டிருககினறன. திசுவை உருவாககும செல்களின வகைகளைத தெரிந்து கொளளலாம். செலகள், திசுககள இவைகளின் அமைப்பியலைப்பற்றிய விவரஙகள இல்லாமல, ஒரு செலலில சாதாரண நிலை எபபோது உணடாகிறது என்பதை நிச்சயபபடுததுவதே மிகவும சிரமமாகும. இதையும நாம் இரண்டாவது அத்தியாயத்தில கவனிப்போம்.

செல் பகுப்பு

இயறகையின் மிகவும் சிறப்பு வாயந்த தன்மை என்னவென்ருல், செல்கள் கொணட எலலா ஜீவனகளிலும செல் பகுப்பு எனபது ஒரே மாதிரியாகவே இருககினறது எனற உணமைதான. செல பகுபபின்மூலம் செல்களின் எணணிககை அதிகமாகிறது. முக்கியமான நிபநதனை எனனவெனருல், மரபுவழிப் பொருளான குரோமோசோமகள, இரணடு புதிதாகத தோனறும செல்களிடையேயும சமமாகப பஙகிடபபடவேணடும. இதனமூலம, ஒரு செல் உட்கருவிலுள்ள எல்லா விவரஙகளும வழிசெலகளுககு முழுவதுமாகவும சரியாகவும் பஙகிடபபடடுக கொடுககபபடவேணடும. இரட்டிபபதற்கான காலமதான் முதல் தேவையாகும. படிப்படியான செல் பகுப்பின்போது ஏறபடும இடை நேரததின்போது நூக்ளியஸின குரோமோசோம பகுதி இருமடஙகாகிறது. இது எவ்விதம நடைபெறுகிறது என்பது நமககுத தெரியாது. ஆனுல, குரோமோசோமகளின பகுதிகளான டி. என. ஏ.-யும புரதஙகளும ஓய்வு நேரததினபோது உணடாககப்படுகினறன. இந்த வினையின்போது செல உட்கரு பெரிதாகி நூகளியோலை மிகவும நனருகப் புலபபடுததுகினறது. குரோமோசோமகள் எளிதில் தெனபடுவதிலலை. ஆனுல், ஒரு துலலியமான நகலை உருவாககுவதறகு ஓர் இலககாக ஏதோ ஒரு வழியில் பணிபுரிநதுதான ஆகவேணடும்.

இடைநேரம முடிந்த பின்னர் (துரிதமாகப பிரியும் செல்கள்கூடத் தங்களது நேரத்தில் 90% பகுதியை செல் பகுப்பிற்கே செலவிடுகின்றன) செல்கள் **புரோபேஸ்** என்ற கட்டததை அடைகினறன. உடகரு முழுவதும, இஙகுமஙகுமாக, குரோமோசோம்கள நீணட நூலகள் போனறு கணணுககுத் தோற்றமளிககின்றன. அவை ஒரேமாதிரியான இரு பாதிகளாக நீள்வட்டத்தில்


பிரிகின்றன. அவைகளை குரோமோடிட்கள் என்கிறோம. சுருண்டுகொள்வதன் மூலம சுருஙகுவதும் கடினமடைவதுமான முறை ஆரம்பமாகிறது. மிருக செலகளில செனடரோசோமின் சென்ட்ரியோல்கள் தனியாகி உட்கருவின் எதிர்ப்புறஙகளுக்குச் செல்கின்றன. நூகளியோல் அளவில் சிறிதாகின்றன. புரோபேசின் இறுதிக் கட்டததில் உட்கருப் படலம் சிதைந்துபடடு மறைநது விடுகின்றது. இது நடைபெற்றவுடன் சென்ட்ரியோல்கள், சைட்டோபிளாச அடிப்படையின் சைட்டோபிளாசப புரதஙகளை செல்லுடன் இணைக்கும் ஸ்பிண்டில்களாக மாற்றுகின்றன (புகைப்படம 2b). செல் பகுப்பிற்கு ஸ்பிண்டில் ஆவது மிகவும முக்கியமாகும. இதற்குப் பெருமளவில் சைட்டோ பிளாசப புரதம தேவையாக இருக்கும்.

பின்னர் செல் 'மெடாபேசை' (metaphase) அடைகிறது. ஸ்பிண்டிலின் பக்கமாக குரோமோசோம்கள நகர்ந்து சென்ட்ரோமீர்கள் எனப்படும குறிப்பிட்ட இடஙகளில ஒட்டிககொளகினறன. ஸபிண்டிலின இருசுககுச செஙகுததான நிலநடுககோட்டு நிலை அடைகின்றன. மனிதனைபபோன்று 46 குரோமோசோமகள் இருந்தாலும சரி, சோளததைப்போன்று 20 குரோமோசோமகளாக இருந்தாலும் சரி, ஒவவொரு குரோமோசோமுககான சென்ட்ரோமீரின் நிலை சிறப்புத தன்மை வாய்ந்ததாகும. சில சமயஙகளில், ஒரு குறிப்பிடட குரோமோசோமிறகு இறுதிநிலையில சென்ட்ரோமீர் இருக்கலாம. ஆனால், சரிசமமிலலாத இரு பகுதிகளாகவே அடிக்கடி அது பிரிகிறது.

அடுத்து வரும் கட்டமான அனபேசில் (anaphase) ஒவவொரு சகோதர குரோமேடிட்டுககும ஒன்று என்ற விகிததததில சென்ட்ரோமீர்கள தாமாகவே பகுப்படைகின்றன. மிருக செலகளில் ஒவவொன்றும ஒரு ஸபிண்டில் நார்இழையுடன் பொருந்தியிருககின்றது. செலலின் எதிர் துருவஙகளிலுள்ள இரணடு, சாமந்தியினச செடி போனறவைகளை நோககி இருககினறன. இரண்டு ஒரே மாதிரியான குரோமோசோமகள் ஒன்றைவிட்டு ஒன்று பிரிந்து, எதிர்துருவஙகளுக்கு நகர்ந்து, ஓர் அடர்ததியான கும்பலாக ஆகிறது.

அனபேசிற்கு அடுதது டெலோபேஸ் வருகிறது. இஙகு செல்படலம் மீண்டும் உணடாவதில் ஒவவொரு குரோமோசோம் கூட்டமும உட்கருவாக மாற்றியமைககப்படுகிறது. சுருணடு கிடநத குரோமோசோமகள சுருள் நீஙக ஆரமபிககினறன. நூகளியோலஸ அலலது நூகளியோலை மீணடும தோன்று கினறன. இறுதியாக, குரோமோசோமகள முநதைய கண்ணுககுத தெரியாத இண்டாபேஸ நிலையை அடைகினறன. இறுதியில் இரணடு செல்கள தனிததுப போவதைப் பூர்த்தி செய்யும் வகையில இரு புதிய செல படலஙகள் உருவாகினறன.

பைப்ரோசைட் எனப்படும மனித இணைப்புத் திசு செல் பிரிவின் நிகழச்சி ஒரு மணி நேரத்தில் நடைபெறுகிறது. பிரிவுகளுககிடையே இருக்கும் நேரத்தின்



படம் 2.

நான்கு குரோமோசோமகளுடன கூடிய ஒரு மிருக செலலின உயிர்மப் பிளவியககப படம.

(a) இணடர்பேஸ, (b) புரோபேஸ ஆரமபநிலை; (c) புரோபேஸ் மததியநிலை (ஒவவொரு குரோமோசோமும இருமடஙகாகிவிடடன); (d) மெட்டாபேஸ, (e) அனபேஸ; (f) டெலோபேஸ (Telophase); (g) குழநதை செலகள.

பெரும் பகுதி புதிய பொருளை உருவாக்குவதில் மரபுவழிக் கோட்பாட்டைத் துல்லியமாக நகல் எடுப்பதில் செலவாகிறது.

மிகவும் சரியான—துல்லியமான முறையில் இந்த நிகழ்ச்சி நடைபெறுவதே இந்த நிகழ்சசியின் ஓர் ஆசசரியமான பகுதியாகும். குரோமோசோமின் ஜீனில் ஒரு மாறுதல் நிகழ்நதால் திடீமாற்றம மாறுதலடைந்து புது உயிரினம தோன்று தல்—மாறுதலடைந்த ஜீன் நகல் எடுக்கப்படடு, வழிவழித் தலைமுறைகளுக்குக் கொடுககபபடுகிறது என்பதைத தெரிந்துகொண்டால், மேற்கூறியவற்றின் உண்மை புலனாகும்.

ஒரு செலலில் திடீர் மாறறம ஏற்படுவதால புற்றுநோய்கள் உணடாகின்றன என்று பல கருததுகள உணடு. இந்தத் தத்துவததைப்பற்றிப் பின்னா நாம் கவனிபபோம. ஒரு சாதாரண செல்லில் ஏறபடும ஒரு ஜீனின் மாறறம, அதன் வழி செல்களுக்குக கொடுககபபட முடியும என்பதைத் திட்டவட்டமான செல் பிரிவு உறுதிப்படுத்துகிறது.

உயிர்மப் பிளவியக்கத்தின்மூலம்தான் உடலின் சாதாரண செல்கள் பகுப்படைகின்றன. உடலின கருசெல்கள் வேறு விதமாக நடந்தாகவேணடும் என்பது, சிறிது யோசித்தால நனகு தெரியவரும். மனிதப் பெணமுட்டையி லிருந்தும, ஆணவிநதிலிருந்தும கருவுறும் முட்டைககு 46 குரோமோசோம்கள் வீதம சென்றால், புதிதாக உருவாகும் முடடையில் 92 குரோமோசோமகள இருககவேணடும என்பது தெளிவு. உணமையில் ஒவ்வொரு கரு செலலும், இதில பாதி குரோமோசோமகளுடனதான் இருககின்றன. மியோசிஸ (meiosis) என்று சொல்லப்படும ஒரு தனி வகையான செல் பிரிவால குரோமோசோம் களின எணணிக்கை குறைக்கபபடுகிறது. இதன் அடிப்படை என்னவெனறால், இரணடு உட்கருப் பகுப்பினபோது குரோமோசோமகளின் ஒரு பகுப்புதான் ஏற்படுகிறது. மனித செல் 46 பலவகைப்பட்ட குரோமோசோமகளுககுப் பதிலாக 23 ஜோடி குரோமோசோம்கள் கொணடிருககின்றன என்பதும தெளிவாகிறது.

2. சாதாரண வளர்ச்சியும் அசாதாரண வளர்ச்சியும்

முழுதும் உருவான உயிரினத்தின் திறன்கள அனைததுமே கருவுற்ற அணடத்தின் உடகருவிலுளள மரபு சஙகேதததில—டி.என.ஏ-யில் இருககின்றன என்று நாம் ஏற்கெனவே கணடோம. வளாசசி, அபிவிருததி இவை சாதாரணமாக நடைபெறுமபோது இந்த முதனிலைப் படிவஙகள ஓா உயிரினம் மனிதனாக வேணடுமா, எலியாகவேண்டுமா? அதன் எல்லா அஙகஙகளும சரியான அளவில் சரியான இடத்தில் இருககுமா? அநத அஙகஙகள ஆறறவேணடிய பணிக்கு ஏற்பச் சரியான செயலகளைப் பெற்றிருககுமா என்பனவற்றை நிாணயிக்கின்றன.

சாதாரண வளாச்சி, அபிவிருததி போனற பிரச்சினைகள் தீாவு காண முடியாதவைகளாகும. ஏனெனில், அவைகள் மிகவும் சிக்கல் கொண்டனவாகவும, பூரணமாகத தெரியாத செயல்முறைகள் கொணடனவாகவும இருக்கின்றன என்பதை நாம வருகிற பககஙகளில தெரிந்துகொளவோம. செலகள் பகுப்படைகின்றன, உயிரினம் வளர்கிறது, செல்களை தஙகளுககு வெவ்வேறு அணிகளை அமைத்துக்கொளகின்றன — இதைததான் சிறப்பு வேறுபாடு அடைதல எனகிறோம. உயிரினம செயலளவில் ஒருமைப்படுததப்பட்டிருப்பதுடன் சீர்செய்யவும், மறுவளாச்சிககு வேண்டிய சக்திகளையும பெற்றிருககிறது.

சாதாரண வளர்ச்சி

பெருகும் தன்மைதான வளர்ச்சி எனபபடுகிறது. ஆரமப செல சுற்றுப்புறத்திலிருந்து உணவு எடுத்து, இதில் சிலவற்றை சக்தியாக மாற்றி, இந்த சக்தியின்மூலம் மற்றக் கசசாப் பொருளகளிலிருந்து இன்னும தன்னைப்போன்ற பல செலகளை உருவாககுகிறது. இது மட்டுமே உயிரினததின் கதையாகுமானல், அது தவளை முட்டைகளின் தொகுதிபோனறு உருவற்ற பிண்டமாக இருக்கும். இறுதியான பிராணி கால்கள், கைகள், நுரையீரல்கள், காதுகளுடன் இருக்கக்கூடிய வகையில் செல்களின் அமைப்புகளையும் அபிவிருத்தி நடைமுறைகளையும் திசைப்படுத்தும் வேறு அமசஙகளும் இருக்கவேணடும். மேலும் ஓர் உயிரினத்தின் பல அங்கங்களின் வளர்ச்சியின விகிதமும வேறுபடுகின்றது.

சிறப்பு வேறுபாடு

ஓர் உயிரினத்தின் பலதரப்பட்ட அமைப்புகளும் பணிகளும் உருவாகும் நிகழ்ச்சியைத்தான் நாம சிறப்பு வேறுபாடு என்கிறோம். பல பணிகொண்ட முதல் செல் ஜீவன் வளர்ச்சியடையும்போது படிப்படியாக, தனிச்சிறப்பு வாய்ந்த செல்களாக மாறுகின்றது. அதன்மூலம சிறப்பு வேறுபாடும் புகுத்தப்படுகிறது. நாம் ஏற்கெனவே கண்டபடி, மனிதனின் முதல் செல்கள் தசை செல்களாகவும், நரம்பு செல்களாகவும, நுரையீரல் செல்களாகவும், எலும்பு செல்களாகவும், மற்றும பலவாகவும மாற்றப்படுகின்றன.

பொதுப்படையாகச சொல்லவேண்டிய மற்றுமொரு முக்கியமான செய்தியும இருக்கிறது. தனி வேறுபாட்டின்போது செலகள் மேலும் பெருகுவது தடை செய்யப்பட்டிருக்கிறது. ஒரு செல் அதிகமாகத தனி வேறுபாடு கொண்டிருந்தால், அது பகுப்படைவது அபூர்வமே. ஆகவே, செல் ஒரே திசையிலேயே செயல்பட வேண்டியிருக்கிறது. அதிகமாகச் சிறப்பு வேறுபாடு கொண்ட மனித நரம்பு செல்கள், தனி நபரின் வளர்ச்சியின்போது தங்கள் அளவில் அதிகரித்தாலும அவை பகுப்படைவதில்லை என்பதை நாம் ஏற்கெனவே கண்டிருக்கிறோம. தங்களது இறுதியான, முதிர்நிலையின் அருகே செல்லச செல்ல அவைகள் தங்களது போக்கை மாற்றிக்கொள்ள வாய்ப்புகள குறைவே.

கருவுற்ற அண்டம் பகுப்படைந்தவுடன் சிறப்பு வேறுபாடு ஆரம்பமாகிறது. கண்ணுக்குத் தெரியும் மாறுதல்களுக்கு முன்னதாகவே செல்லுக்குள்ளும் (செல்லுக்கிடையேயும்) மாற்றங்கள ஆரம்பித்திருக்கவேண்டும். உடலின பலதரப்பட்ட அங்கங்கள, திசுக்கள எல்லாமே ஒரே மாதிரியான மரபுவழிப பொருளைக் கொண்ட உட்கருக்களை கொண்டிருக்கின்றன. உதாரணமாக, இருதய தசை புரதமான மையோசின கால்தசை புரத மையோசினிலிருந்து பிரிந்தமையலாம. செல்சைட்டோபிளாசத்தின் ஒரு பணி, சிறப்பு வேறுபாடு எனக் கூறலாம். செல் சைட்டோபிளாசத்தில்தான் புரதங்கள் ஆக்கப்படுகின்றன. ஒரு குறிப்பிட்ட புரதத்தை உருவாக்கவேண்டும என ஒரு செல பணிபுரிய ஆரமபித்துவிட்டால், அதன வருங்கால விருத்தி, உடலில் அதன நிலை, அதன் பணி எல்லாமே நிர்ணயமாகிவிடுகின்றன.

ஓர் உயிரினத்தின் திசுக்கள், அங்கங்கள் இவைகளின் இறுதி இணைப்பை நிர்ணயம் செய்யும் மற்றோர் அம்சமும் இருக்கிறது. பாகங்கள எல்லாமே தொடர்பு கொண்டிருக்கவேண்டும. வேதியியல் மின்சார வழிகள்மூலம இது செய்யப்படுவதை இங்கு விவரிக்கமுடியாது. ஆனால், செல் படலங்களுக்கிடையேயுள்ள தொடர்புகளமூலம் செல்கள் நேரடித் தொடர்புகொண்டிருக்கின்றன என்றும், அதற்கென்த் தனிப்பட்ட முறையில் அமைந்த செலகளால் அளிக்கப்படும் ஹார்மோன் தூண்டுதல்களுக்கு அங்கங்கள் மறுவினை புரிகின்றன என்றும் (தூண்டுதல்கள் அவைகளை இரத்தமூலம அடைகின்றன), உடல் முழுவதும் வியாபித்து இருக்கும் நரம்பு செல் வலைப்பின்னல் மூளைக்கு இடைவிடாது வேண்டிய தகவல்களைக் கொடுக்கின்றன என்றும, மூளை, மற்ற செல்கள், அங்கங்களையும் இயக்குகின்றன என்பதையும் நாம் சுருக்கமாக அறிவோம்.


சிறப்பு வேறுபாடும முழுமையுமே உயிரியலின் இரு பெரும் புதிர்கள். இந்தப் பிரச்சினைகளில் சிலவற்றிற்கான விடைகளைத் தனிப்பட்ட செல்களின் மட்டததில் தேடவேணடும எனறும், மறறவைகளுககான விடைகளை செல் தொகுதிகளுககு இடையே நடைபெறும இடைமிடைந்த செயல்களில் தேட வேணடும் எனவும நாம அறிவோம. நாம் சிறபபு வேறுபாட்டைப்பற்றி நன்கு தெரிந்துகொணடால, புறறுநோய்ப பிரசசினை வெலல முடியாத ஒனறன்று. ஒவ்வொரு மிருகமும் ஒரு குறிபபிட்ட நிலை அடைந்தவுடன் வளாவதை ஏன் நிறுததிககொள்கிறது எனபதும, ஒரு குறிப்பிட்ட அளவிறகு எவ்விதம் உடலின் அஙகஙகள் தஙகளைத் தக அமைத்துககொள்கின்றன எனபதும, ஓா உயிரினம் எவ்வளவு காலத்திறகு வாழும என்பதை நிாணயிப்பவை யாவை என்பதும் இன்னும நமக்குத தெரியாத விஷயஙகள்.

தான் இருக்கும் நிலையை நிலைப்படுததுவதறகான உள்ளார்ந்த அமைப்பைக் கொணட ஒரு முதிாந்த உயிரினத்தின் சாதனையோடு, அதன் வளர்சசிக கதை முற்றுப்பெற்றுவிடவிலலை. ஏனெனில, சில தனிபபட்ட செல்கள் மறறவைகளை விடக் குறைந்த காலமே வாழுகினறன. ஒவவோா ஏழு வருடஙகளுக்கு ஒரு தடவை நமக்குப் புது உடல் உணடாகிறது என்ற கூறறை நாம கேள்விப் பட்டிருக்கிறோம். இநத 7 வருடஙகள் என்ற காலவரை, உடலின் பழைய செல்கள் அழிநது, புதிய செல்கள் உருவாவதற்கான காலம எனக கருதப் படுகிறது. இது தவறு; ஏனெனில, உடலின் சில பாகஙகளுக்குப் புதிதாக உருவாகும் செலகள் அடிககடி தேவையாக இருககும். அதே சமயத்தில் மற்ற செல்கள் ஈடுசெய்யப்பட முடியாமலேயே இருககலாம.

தினமும் நாம் நமது செல்களில் 2%ஐ செல்லின் மரணத்தின்மூலம இழக் கிறோம் என்றும், அந்த நஷ்டத்தை ஈடுசெய்யப் பல இலட்சக்கணககான புதிய செல்கள் உருவாகினறன என்றும் கணககிடப்பட்டிருக்கிறது. புதிய செலகள் உருவாவது, மிகவும் துரித வேகத்தில் சருமத்திலும், எலுமபு மஜ்ஜையிலும், சிறு குடல் பாதையிலும, ஆணகளின் விந்துச சுரப்பிகளிலும நடைபெறுகின்றன என நாம் ஏற்கெனவே கண்டோம். சாதாரணமான தேகாரோக்கிய நிலைகளில் மற்ற அங்கஙகள் மிகவும குறைந்த விகிததநிலேயே செல்களை உருவாக்கு கின்றன. கல்லீரல் செல்லின் ஆயுட்காலம் 1½ வருடஙகள் எனத தெரிகிறது. ஆகவே, கல்லீரலின் ஒரு பகுதியை உருப்பெருக்கிகளின்மூலம் பார்த்தால், பகுப்படையும் நிலையில் இருக்கும பல செல்களை நாம் எதிர்பார்க்க முடியாது. மற்றொருபுறத்தில, கலலீரல் பாதிக்கப்பட்டுச் செப்பனிடுவது நடந்துகொண் டிருந்தால், இழந்த செல்கள் ஈடுசெய்யப்படும்வரையில செல் பாகுபாட்டின் விகிதம அதிகமாக இருப்பதை நாம எதிர்பாாக்க முடியும்.

இரததத்தின் செல்கள் சம்பந்தப்பட்டவரை இரத்தத்தின் சிவப்பு அணுககள் எலும்பு மஜ்ஜையில் உற்பத்தியாகின்றன. வெள்ளணுக்களில் சில நிணநீா முடிச்சு களிலும், மணணீரலிலும், தைமஸிலும் உருவாகின்றன. மனித இரத்தச சிவப்பு செல்களின் ஆயுட்காலம் நான்கு மாதங்களாகும். அவைகளுக்கு உட்கரு

இல்லை. மேலும், அவைகளுக்குத் தாமாகவே மீண்டும உருவாகும் சக்தியுமஇல்லை. இரத்த நாளங்கள் வழியாக அவைகளின் இடைவிடாத ஆகஸிஜன (பிராணவாயு) எடுததுசசெல்லும பயணததினபோது, அவைகள் இறுதியில துணடு துணடு களாக உடைககப்படுகின்றன. அவறறிறகுப பதிலாகப் புதியவை தோற்று விக்கப்படுகினறன.



படம் 3.

a) ஆரோக்கியமான சருமப பகுதியின படம; (b) A படததையே மிகவும் பெரிதாகக் காட்டபபட்டிருக்கிறது (c) அடிததளப பகுதியில் செல்கள பகுபபடைந்து மேற்பரபபில் இழுக்கபபடட செலகளை ஈடு செயதல, (d) சருமம சேதமடையுமபோது; பல செலகள இழுககபபடுகின்றன. சேதாரம சீரடையுமவரை செல்பகுபபுத துரிதமாகிறது.

படம் 3A ஓர் ஆரோக்கியமான சருமப் பகுதியின் அமைப்பைக் காட்டுகிறது. ஆகவே B-ல் பெரிதாகக் காட்டப்பட்டுள்ளது. கனமான மேல் அடுக்கு உயிரற்ற வெளிப்பகுதியைக காட்டுகிறது. இதனடியில், உட்கரு உடன்கூடிய உயிருள்ள செலகள் இருக்கின்றன. சருமததின் மேற்பரப்புத தினமும் தேய்மானம அடைவதால, அடிப்பகுதியில் இருககும் செல்கள் பகுப்படைநது (C), மேற்பரப்பில இறக்கும செலகளை ஈடு செய்கின்றன. சருமத்திறகுச சேதம ஏறபடடால், சேதாரம சீரடையும வரை, செல் பகுப்பு விகிதம அதிகமாகவே இருககிறது (D).

உள்ள நிலைமையை மாறாது வைக்க, செய்யப்படும் இடைவிடாத முயற்சியே உயிரினததின் மறு வளர்சசிப் படிவமாகும. இது வெற்றிகரமாக நடைபெறுமவரை உயிரினம வாழகிறது; இறுதியாக உயிரினம முதுமையடைந்து மறு வளாசசியின் சகதி குறைந்து மரணம சமபவிககிறது எனபதை நாம அறிவோம. உயிரினம இளமைத துடிப்புடன் இருககுமபோது வெளிப்புறமிருந்து வரும தாககுதலகளைச சமாளிகக, அதற்குப் போதிய சகதி இருககிறது. வியாதி உணடாககும பாகடீரியாககளை எதிர்கக முடியும; வைரஸகளை மட்டுபபடுதத முடியும. வெளியிலிருநது வரும அபூர்வமான நச்சுகளுக்கு உடலில பாதுகாப்பு சக்தி உணடாக முடியும.

நாம் தெரிந்துகொணடிருக்கும் சாதாரண நிலை இதுதான். மறு வளர்சசி உருவாகும பணி, சில சமயஙகளில் அதிகமாகச சீர்கெட்டுபபோகலாம. உளளிருந்தே உடல் காடடிககொடுககப்படுகிறது ; தமனிகள கடினமடைகினறன. இரதத உறைவுககட்டிகள உணடாகினறன. இரதத ஓடடம இருதயததிறகோ மூளைககோ நிறுத்தப்படுகிறது. சிறுநீரகஙகள வேலை செய்ய முடிவதிலலை. மூட்டுகளில் சீர்கெடட சிதைந்த மாறுபாடுகள் ஏற்படுவதால, வலியும விறைதத நிலையும் ஏறபடுகின்றன. சருமம் அதன் நெகிழ்வுத் தன்மையை இழக்கிறது. நமககுச் சுருககம் ஏற்படுகிறது. ஒரு வார்த்தையில் சொன்னால் நாம கிழவர்களாகிறோம்.

அசாதாரண வளர்ச்சி

உடலின் உள் அங்கங்கள செய்யும் மற்றொரு துரோகமே புற்றுநோய். இதுவரை 'சட்டததிற்குட்பட்ட பிரஜைகளாக இருந்த செல்கள திடீரென்று தஙகள் குணஙகளை மாறறிப் பகுபபடைகினறன , உயிரினத்தின் தேவைககுத தொடர்பறறு வளாநது, அருகிலுள்ள ஆரோக்கியமான திசுககளின மேல் 'படையெடுககின்றன'; உடலின் மறற அஙகஙகளுக்கும இவை பரவலாம. முடிவாக ஓர் ஒழுஙகுககும் கட்டுப்படாத இரணடாம நிலை மெடாசடேசுகள எனப்படுபவை உடலின் மறறப் பாகஙகளில படியவைககின்றன. மெடாசடேசுகள் (Metastases) எனப்படுபவை என்னவென்றால், முதலில் ஓர் உறுபபில புற்றுநோய் உண்டாகி, அதிலிருந்து மறற உறுப்புகளுக்கு அது பரவும் நிலை. உதாரணமாக, நுரையீரலில் முதலில் புற்றுநோய் ஆரம்பித்தால் அதன் இரண்டாம் நிலை

மெடாசடேசுகள், மூளை, கல்லீரல எலுமபு இவைகளில் காணப்படலாம் (மொ-ர்). இததகைய ஒழுங்கீனமான மெடாசடேசுகள் உடலின எந்த உறுப்பிலும் தோன்ற லாம (சிறப்பு வேறுபாட்டிறகும, பகுபடும சகதிககும இடையேயுள்ள எதிர் விகிதத் தொடர்புபற்றிய பொதுமைக்கு இது ஒரு விதிவிலக்காகும்). ஆரோககிய மான கொடூரமான புறறுநோய செல்லாக மாறுமபோது தனது சிறபபு வேறு பாடடுத தனமையை இழககினறது என்பதும, வேகமாக அவைகள வளர்ந்து பகுபடுமபோது அவைகள தொடககால நிலையை அடைகின்றன என்பதும் புறறுநோய செல்களின் வளாசசியின சிறப்புக குணஙகளாகும்.


ஓா அஙகத்திலோ அல்லது திசுவிலோ ஒழுஙகீன வளர்சசி ஏற்பட்டு, அதன் விளைவாகச சாதாரண செல்களைவிடப் புற்றுநோய் செல்கள் கொண்ட கட்டி தோன்றுமபோது ஓர் உறுப்பில் புறறுநோய செலகள உணடாகிவிடடன என நாம தெரிநதுகொள்கிறோம. ஏறபடக்கூடாத இடத்தில் பெருமளவு செலகள கொண்ட கட்டி ஏற்படுதல் (உதாரணம, மூலையில் கட்டி, ஓர் உறுப்பு செய்யவேண்டிய பணியில் மாறுதல் ஏற்படுதல் (உதாரணம், கல்லீரலின் சீர் கெடட நிலை), ஓர் அங்கம அடைககப்பட்டுவிடுதல் (உதாரணம, அன்னக் குழாயிலோ, குடலிலோ புற்றுநோய் வளர்ச்சி) இவையே புற்றுநோயின் அறிகுறிகள்.

படம் 3-ல் காட்டப்பட்ட அதே சருமததைப் படம் 4A காட்டுகிறது. எனி னும், படம் 4A-ல் எபிதீலியத்தில் புற்றுநோய் செல்கள் உண்டாகிவிட்டன. இவை களின் வளர்சசி ஏற்கெனவே ஒரு சிறு கட்டிபோல் தோன்றுகிறது. அத்தகைய புறறுநோயின் பிந்திய நிலைகள B-ல காடடப்பட்டிருககினறன. புற்றுநோய செல் களின எணணிக்கை அதிகமாகிவிட்டது. அருகிலுள்ள சாதாரண செலகள் நிலை பெயர்ககப்பட்டுவிட்டன. இன்னும அடுத்த நிலையில் (C) புற்றுநோய் செலகள, சருமத்திற்குள் புரையோடிச சென்றிருக்கின்றன. அடிப்படைப் படலத்தை உடைததுச் சிதறி அருகிலுள்ள அஙகஙகளைப் பாதிகக ஆரம் பித்திருக்கின்றன.

இத்தகைய புற்றுநோய் மாற்றம் அடைய முடியாத சில செல்களும் உடலில் இருக்கின்றன. முழுதும் சிறப்பு வேறுபாடடைந்த நரம்பு செல்களுக்குப் பகுப்படையும் சக்தி இல்லாமல் இருப்பதால், அவைகள் கொடூரப் புறறுநோய் நிலையை அடைவதில்லை. எத்தனை கொடூர மாறுதல்கள் செல்லில் ஏற்பட்டாலும், மீண்டும் மீணடும் செல்கள் பகுப்படைந்தாலொழிய புற்றுநோய் வெளிக்குத் தெரியாது.

எல்லாப் புற்றுநோய்களும் ஒரேமாதிரியாகவே நடந்துகொள்கின்றன என்ற எண்ணம் கொள்ளக்கூடாது. சில கட்டிகளின் செல்கள் சிறப்பு வேறுபாடு சக்தி கொண்டு மெதுவாக வளர்கின்றன. அது எந்தத திசுவிலிருந்து உருவா கிற்றே, அந்தத் திசுவின் சிறப்புக் குணங்களுடன் இருக்கின்றது. மற்றவை ஒரே செல் சந்ததியில் சிறப்பு வேறுபாட்டை முற்றிலும் இழந்துவிடுகின்றன. எல்லாக் கட்டிகளும் கொடூரமானவை என்று சொல்ல முடியாது.

தீங்கற்ற கட்டிகளும் துரிதமாக வளருகின்றன. இந்த விகிதம அதன் மூல திசுவினதைவிட அதிகமாக இருககிறது. இருந்தபோதிலும அமைப்புகளின் அசாதாரண நிலைகள உணடாவதிலலை. உடலின மற்றப பகுதிகளில மெடாச்டேசுகளும உண்டாவதில்லை.



படம் 4.

(A) சருமத்தில் கொடூரச் செல்களின் ஆரமபமும வளாசசியும், (B) அதற்கு அடுத்த நிலை; (C) அதற்கும் பிந்திய நிலை.

நோய்க குறியியல் மருத்துவர்கள் கீழ்க்கண்ட மூன்று குணங்களின் உதவி யால் புற்றுநோயைக கணடறிகின்றனர் :

(1) செல் நியோபிளாசியா (செல் புது வளர்ச்சி)—ஓர் அங்கத்திலோ திசுவிலோ புதிய வளர்ச்சி.

(2) செல் அனப்பிளாசியா (செல் வேறுபாட்டு வளர்ச்சி)—பழைய, புதிய வளர்ச்சிகளுக்கிடையே உள்ள அமைப்பு வேறுபாடுகள்.

(3) செல் ஹெடரோடோபியா (செல் இடப்பெயர்ச்சி)—உடலின் ஒரு தவறான இடத்திற்கு, செல்கள் செல்வது.

தீங்கற்ற கட்டிகள், பொதுவாக முதல் அறிகுறியை மாத்திரமே காட்டு கின்றன (புகைப்படம 5-b). மூன்றாவது அறிகுறி கொடூரச் செல்களில் மட்டுமே காணப்படுவதில்லை. ஏனெனில், கொடூர நோயுற்ற தைராய்டு சுரப்பியிலிருந்து செல்கள் சிரைகளுக்குச் செல்லலாம. நஞ்சுக் கொடியின் செல்களும, காப்பப் பையின் படலததை வழக்கமாகத் தாககுகின்றன. 3ஆம அறிகுறி லியுகீமியா (எலும்பு மஜ்ஜையின் புற்றுநோய்) சமபந்தபபட்டவரையில் பயனற்றது. ஏனெனில், இரததததிலிருக்கும் சாதாரண செலகள, இரத்தம் எஙகெல்லாம் ஓடுகிறதோ அஙகெல்லாம் காணப்படும்.

அதுபோன்றே, கொடூரப் புற்றுநோய் செல்களின் வளர்ச்சி விகிதமும் போதுமான அறிகுறியன்று. புதிதாகப் பிறந்த ஒரு குழந்தை 9 மாதத்தில் கருவகத்தில் அடையும வளர்ச்சி அதே சமயத்தில் உருவாகும புற்றுநோயின் வளர்ச்சியைவிட, எவவளவோ துரிதமானது. மான் ஒவவொரு வருடமும புதுப் பிக்கும் கொம்பின் வளர்ச்சி, எந்த எலும்புப் புற்றுநோய் வளர்சசியையுமவிட அதிகமானது.

புற்றுநோயின் செல் இயல், வியாதி நிர்ணயம இரண்டு சான்றுகளைப் பொறுத்தது. முதலாவது கட்டி என்ற சொல்லுடன் தொடர்புடையதாய் நமக்குப் புலனாகும் அறிகுறி உடலில் ஒரு வீக்கம் நமக்குத் தெரியுமபடியாக, உடல் அமைப்பிலோ, பணியிலோ ஒரு மாற்றம். இரண்டாவது, உருப்பெருக்கிமூலம் தெரிவது. திசு, செல் இவைகளின் அமைப்பில் மாற்றம. புற்றுநோயின் ஆரம்ப நிலையில் கண்ணுக்குத் தெரியும் சான்று எதுவுமே இராது. ஆரம்ப மாறுதல்கள் மிகவும் குறைவாக இருப்பதால் உருப்பெருக்கியின்மூலம் தெரியும் மாறுதல் களும் மிகவும் கொஞ்சமே. செல் இயல்மூலம் தெரியும் புற்றுநோய்க்கும் மருததுவ முறைமூலம் தெரியும் புறறுநோய்க்கும—அதாவது, உருப்பெருக்கி மூலம் பார்க்கப்படுவதற்கும், நோயின் அறிகுறிகள் வெளிப்படையாகத் தெரிவ தறகும—இடையே ஒரு வேறுபாடு உள்ளது. சில நோய்க் குறியியலாளர்கள் ஐம்பது வயதுக்கு மேற்பட்ட மனிதர்களில் 30–40 சதவீதத்தினரின் பிராஸ்டேட் சுரப்பிகளில் புற்றுநோய்க்கான செல் இயல் அறிகுறிகள் காணப்படுகின்றன

என்ற முடிவு கொண்டுள்ளனர். எனினும், இத்தனை உயர்ந்த விகிதத்தில் அந்த உறுப்பில் புற்றுநோய் உண்டாவதாகத் தெரியவில்லை.

புற்றுநோய் உண்டாகும் விகிதம்

இதைப்பற்றி நாம விவரமாக அடுத்த அத்தியாயத்தில் காணலாம். ஆனால், மொததத்தில், எல்லா வகைப்பட்ட மிருகஙகளிலும், தாவர இனஙகளில்கூடப் புற்றுநோய் உணடாவதாகத தெரிகிறது. இது செல் பாகுபாட்டைப போன்று எஙகும வியாபிததிருககும ஒனறாகும். இன மரபுப்படி இது எல்லா ஆறு இனஙகளிலும் அதன் சுமார் 30 உட்பிரிவுகளிலும் காணப்படுகிறது. பூகோள இயல்படி, பூமியில் ஒவவொரு பகுதியிலும இது காணப்படுகிறது. ஒரு குறிப்பிடட புறறுநோயக கடடி உண்டாகிறதா இல்லையா என்பது சுற்றுப்புறச் சூழநிலைகளையும மரபுவழிவநத உடம்பு அமைப்புகளையும பொறுத்து இருக்கிறது என்பது நோய பரவிய நிலைகளின்படி கணட உண்மையாகும.

புற்றுநோய் மாற்றஙகளுககு ஏற்படும் எதிர்ப்பு சக்தியில் செல்கள் வேறுபடுகின்றன என்றும், அவைகளில சில புற்றுநோய்க் காரணிகளின் தலையீடின்றியே சாதாரணமான நிலையிலிருந்து கொடூர நிலையாக மாறுகின்றன எனவும நாஙகள் நமபுகிறோம. பிறவிக கட்டிகள் மிகவும் அபூர்வமே. ஆனாலும், ரெடினோபிளாஸடோமா போன்றவைகள இருப்பதை நாம கவனததில் கொள்ள வேணடும. எனினும, உடலுககு வெளியே, ஊட்ட ஊடகததில் சாதாரண செல்களிலிருநது கொடூரப புறறுநோய செல்களை உருவாககமுடிகிறது. எனவே, உணவூட்டம சார்நத நரமபுகள, திசு அமைப்பு ஹாாமோனகளின் கட்டுபபாடு போனற பலவறறின் தலையீடு அவசியமில்லை என ஆகிறது. அதாவது, உயிரினத்தின ஒருமைப்பாடடு நுட்பஙகள் தஙகள் பணியில் தவறிவிடுவதால் மாத்திரம் புற்றுநோய உணடாவதாகத தெரியவில்லை.

மனித வாகததில் தோன்றும சில கட்டிகள் வெளிப்புறப் பாதிப்புகளால் உண்டாகின்றன எனத் தெரிகிறது : புற்றுநோய் ரசாயனக் காரணிகள் அல்லது வைரஸ்கள்.

உடலின் உள்ளிருந்து வரும சில புற்றுநோய்க் காரணிகள்—குறிப்பாக உடலின் சில ஹாாமோன்கள —இருபபது நமக்குத் தெரியும். இவைகள் பெரும்பாலும செல்களை முதலில் சேதம செயகின்றன என்பதை நாம பின்னர்க் கவனிப்போம; செலகளைச சாக அடிக்காமல் செய்கின்றன. இதன் மூலம செல்கள் கொடூர நிலை அடைகினறன. சருமப் புற்றுநோய்களும் நிணநீர் திசுவின் புறறுநோய்களும, விலஙகுகளின் கர்ப்பப் பையின் கழுத்தில் பரிசோதனைமூலம் உணடாக்கிய புற்றுநோயகளும ஏற்கெனவே அதிக வளர்சசியடைந்து பின்னர் மட்டுப்பட்ட பகுதிகளிலிருந்து தோன்றுகின்றன எனவும் தெரிகிறது.

ஒரு குறிப்பிட்ட அஙகததையோ, திசுவையோ மட்டும் பாதிக்காததும், அசாதாரண செல்களின் அபரிமிதமான வளர்சசியைக் கொண்டதும், பலதரப் பட்ட ரசாயன, பௌதிக உயிா இயல் காரணிகளால் தூணடப்படக்கூடியதுமான ஒரு நோய் நிகழசசியைப்பறறி நாம தெரிந்துகொண்டால்தான் நாம் புற்று நோயை விளகக முடியும.

புகைபிடிப்பவாகளின் பல வகைகளைப் பிரித்துப் பார்ப்பது மிகவும சிரமமே. சிகரெட, குழாய, சுருட்டுப் புகையை உள்ளிழுப்பவாகள், உள்ளே இழுககாத வர்கள, வடிகட்டும் சாதனம் உபயோகிப்பவர்கள், சிகரெட தாஙகிகளை உபயோகிபபவர்கள் போன்ற பல வகையினர். இவர்கள் ஒரேமாதிரியாக என்றும் புகைபிடிப்பதிலலை என்ற காரணத்தால் இதைப பிரித்துப் பார்ப்பது மிகவும் சிரமமே ஆகும. சுருட்டு உபயோகிபபவர்களைவிட, இவர்களிடையே புற்றுநோய் உணடாவது இன்னும குறைகிறது. சிகரெட்டை வாஙகி உபயோகிப்பவர் களுககும் தாமாகவே சிகரெட செய்து உபயோகிபபவர்களுக்குமிடையேயும், அல்லது தீப்பெட்டி உபயோகிப்பவர்களுககும் லைட்டர் உபயோகிப்பவர்களுக்கு மிடையேயும் அதிக வேறுபாடு இருப்பதாகத் தெரியவில்லை.

புகைபிடிப்பதற்கும் நுரையீரல் புற்றுநோய்க்கும இடையேயுள்ள தொடர்பு பற்றி முடிவுசெய்வது எளிதான ஒன்றன்று. ஆண பெண் விகிதமான 5 : 1 என்பது, அடுத்த சில வருடங்களில் பெண்கள் புற்றுநோய்க் காரணிகளால்

தாக்கப்படும் காலம் அதிகமாகும்போது குறையுமா என்பது நமக்குத் தெரியாது. மேலும், கிராமப்பகுதிகளைவிட நகரப்பகுதிகளில் இந்த மரணவிகிதம் 2-4 மடங்கு அதிகமாக இருக்கிறது. இந்த வேறுபாடு நகரத்திலும் கிராமத்திலும் பரவி இருக்கும் புகைபிடிக்கும் வழக்கத்தைப் பிரதிபலிக்கவில்லை. இந்த நிலைபற்றி 20 ஆண்டுகளுக்குமுன் ஒன்றுமே தெரியாது.

மாதிரியாக அமைந்த நகர்ப்புறத்திலும் (லிவர்பூல் மருத்துவ மனைப்பகுதி), நாட்டுப்புறத்திலும் (வடக்கு வேலஸ்) வசித்த 45–74 வயதுவரை உள்ள ஆண்களிடையே ஏற்பட்ட நுரையீரல் புற்றுநோய் மரண விகிதத்தைப்பற்றி ஸ்டாக்ஸும் கேம்பெல்லும் (1955) ஆராய்ந்தனர். வடக்கு வேலஸில் ஆண்களில் வருட மரணவிகிதம் புகைபிடிக்காதவர்களிடையே $140/10^6$-லிருந்து புகைபிடிப்பவர்களிடம் $3{,}630/10^6$ ஆக உயர்ந்தது. (புகைபிடிப்பவர்கள் என்பவர்கள் வாரத்திற்கு 250 சிகரெட்டுகள் வீதம் 10 வருடங்களாக உபயோகித்தவர்கள்) எவ்வளவு புகையிலை உபயோகித்தார்கள் என்று கணக்கிடாமல் குழாய் உபயோகித்தவர்களிடையே இந்த எண்ணிக்கை $410/10^6$ ஆக இருந்தது. லிவர்பூலில் புகைபிடிக்காதவர்களிடையே $1{,}310/10^6$ ஆகவும், புகைபிடிப்பவர்களிடம் $3{,}940/10^6$ ஆகவும் இந்த விகிதம் இருந்தது. இந்தப் புள்ளிவிவரங்களிலிருந்து, புகைபிடிக்கும் வழக்கத்தை அடியோடு அகற்றிவிட்டால் நுரையீரல் புற்றுநோயால் ஏற்படும் லிவர்பூல் மரணங்கள் பாதியாகக் குறைந்துவிடும் என்றும், கிராமப்புறங்களில் 38% மரணவிகிதம் ஏதோ ஒரு தலச் சூழ்நிலைச் சுற்றுப்புறக் காரணங்களால் ஏற்படுகிறது என்றும் ஸ்டாக்ஸும் கேம்பெல்லும் முடிவுசெய்தனர்.

இந்த வகையான தலக் காரணங்களில் நன்றாகத் தெரிவது புகையிலிருந்து வரும் ஆகாய அசுத்தமேயாகும். கிராமப்புறத்தைவிட நகர்ப்புறத்தில் 6 மடங்கு புகை அதிகமாகவும், 3 : 4 பென்ஸ்பைரீன் 10 மடங்கு அதிகமாக இருப்பதாகவும் கணக்கிடப்பட்ட உண்மை, மேற்கூறியவற்றிற்கு நல்ல ஆதாரமாகும். 3 : 4 பென்ஸ்பைரீன் என்பது ஒரு சிக்கலான பாலிசைக்ளிக் நீரகக் கரியாகும்.



இது சில மிருகங்களில் புற்றுநோயை உண்டாக்குகிறது. புகைக்கப்பட்ட 500 சிகரெட்டுகளில் ஒரு கிராமில் 40 இலட்சத்தில் ஒரு பங்காக (4 μg) அது சிகரெட் புகையில் இருக்கிறது. ஒரு சாதாரண மனிதன் ஒரு வருடத்தில் 7,300 கன மீட்டர் காற்றை உள்ளிழுக்கிறான். இந்தக் காற்றிலிருந்து உடலின் உட் செல்லும் 3 : 4 - பென்ஸ்பைரீனின் சராசரி அளவு : வடக்கு வேல்ஸ 41 μg; லிவர்பூல் 450 μg. சிகரெட் புகையிலிருந்தோ, ஆகாய அசுத்தத்திலிருந்தோ, அல்லது இரண்டிலுமிருந்தோ வரும் 3 : 4 பென்ஸ்பைரீன் அளவை நேரடியாகப்

பொறுதத்தே நுரையீரல் புற்றுநோய் மரணங்கள் உண்டாகின்றன என ஸ்டாக்ஸ்ும் கேம்ப்பெல்லும் முடிவு செய்தனர்.

இந்த முடிவுகள் இறுதியானவை என எவரும் கூறமுடியாது. ஹியூபர் (1956) என்பவர் காற்று சம்பந்தமான காரணங்கள் ஒன்று என்பதைவிடப் பலவாக இருக்கவேண்டும் எனக் கருதினர். உதாரணமாக, நிக்கல், குரோமியம், ஆர்சனிக கூட்டுப் பொருள்களிலிருந்து வரும புகையும், தூசியும், அஸ்பெஸ்டாஸ், நிலக்கரி எண்ணெய, கரிபபுகை, புற்றுநோய் உண்டாக்கும் பெட்ரோலின விளை பொருள்கள், கதிர் வெளிவிடும தாதுபபொருள்களும், வாயுக்களும, பெட்ரோல் ஆவிகளும், டீசல் என்ஜின வெளிவிட்ட வாயுக்களும, கருங்காரை ரோடுகளி லிருந்தும ரப்பர் டயாகளிலிருந்தும் வெளிவரும தூசுகள் போன்றவைகளாகும்.

பெட்ரோல், டீசல் என்ஜினகளிலிருந்து வெளிவரும வாயுக்களில் 3 : 4 பென்ஸ்பைரீன்மாத்திரமன்றி, மற்றும பல புற்றுநோய் உண்டாக்கும் பொருள் களும் வெளிவருகின்றன என்பதில சந்தேகமேயில்லை. ரோடு போக்குவரதது சம்பநதப்பட்ட லாரி டிரைவர்கள், கார்ஷெட் ஊழியர்கள், போலீஸ்காரர்கள் இவர்களிடையே நுரையீரல் புற்றுநோய் அதிகமாகக் காணப்படுகிறது என்ப தற்குப் போதிய உண்மையான ஆதாரம இல்லை. டீசல் என்ஜின்கள் மிகவும் சமீபகாலத்திலேயே உபயோகததிற்கு வநதிருப்பதால், அதுபற்றிய முடிவுக்கு வர இயலவில்லை (1930-ல் டி.இ.ஆர்.வி. 600 டன்களே உபயோகப்படுததப் பட்டிருககின்றன. ஆனல், பெட்ரோல் 3,324,000 டன்கள் உபயோகப்பட்டிருக் கின்றன).

புகையிலைப் புகையில் இருககும் மற்றும பல புற்றுநோய் உண்டாககும் பொருளகளாவன : 1:2 பென்சாந்தரசீன், ஆர்சனிக, கதிர் இயக்க பொட்டாசியம் போனறவைகளாகும். புகையிலையைப் போன்றே சிகரெட்டைச சுற்றியிருககும காகிதமும எரிபொருள்கள கொணடிருககின்றன. சிகரெட உபயோகிப்பவர் களுககும குழாய் உபயோகிபபவர்களுககுமிடையே உள்ள வேறுபாடுகளை எரியும சிகரெட்டின் காகிதமகொணடு விளககமுடியாது. சாதாரணமாக, சிகரெட் பிடிககும்போது நிகழும உள்ளிழுப்பது, வெளிவிடுவது போன்ற முறைகளைக கொணட இயநதிரப பொறிகளமூலம வெளிவநத புகையிலைப புகையை நேரடியாக மிருகஙகளுககுச செலுததி நுரையீரல் புற்றுநோய உணடாககப் பல முயற்சிகள சென்ற பல ஆணடுகளாகச செய்யபபட்டுவருகின்றன. முடிவுகள் ஐயப்பாடு உடையனவாக இருககின்றன. சுணடெலியின சருமததில தாரை நேரடியாகப் பூசிப புற்றுநோய உணடாககச செய்த முயற்சிகளும இஙஙனமே ஆயின. பல நாட்களாக நீடிததுவரும இந்தச சோதனையைபபற்றிப் பினவரும அத்தியாயஙகளில் குறிப்பிடுவோம.

நுரையீரல புற்றுநோய்ககும சிகரெட் புகைபிடிப்பதற்குமிடையே உள்ள தாகச் சொல்லப்படும தொடர்பு பரிசோதனைகள்மூலம் ஊர்ஜிதம் செய்யப

படவில்லை. எனினும், இன்னும் ஆராய்ச்சிகள் செய்யச் செய்ய இந்த விவரம் பற்றிய முழு உண்மைகள் நமக்குக் கிடைக்கும். உதாரணமாக, டிரான்ஸ்வாலில் பாண்டு மரபினர் உபயோகிக்கும் அலோ மூக்குப்பொடிகளில் 3·4 பென்ஸ்பைரீன் இருப்பதாகக் காமபெல்லும் கூபபரும் கண்டுபிடித்திருக்கின்றனர் மூக்குப் பொடி அதிகமாக உபயோகிக்கும் இந்த மரபினரிடையே மூக்குக் குழிகளின் புற்றுநோய் இருப்பதாகத் தெரிகிறது. மூக்குக்குழி என்பது மூக்குப்பொடி போடப்படும் இடம்.

மிகவும் அதிகமாகப் புகைபிடிப்பவரின் மரபுவழி உடலமைப்பில் நுரையீரல் புற்றுநோய்க்குக் காரணம் இருப்பதாக ஓர் எதிர்த்தரப்பு வாதம் உருவாகியிருக்கிறது. ஆகவே, நுரையீரல் புற்றுநோய் உண்டாவதற்கான முன்நிலையும், புகையிலைக்கான முன்சார்புநிலையும் ஒரே சமயத்தில் இயங்கியபோதிலும், அவற்றிடையே காரணத் தொடர்பு இல்லை. இந்தக் கோட்பாட்டைப் புறக்கணிப்பது சிரமமாகும். ஆனால், சென்ற சில ஆண்டுகளாக நுரையீரல் புற்றுநோய் திடீரென அதிகமானதை அந்தக் கோட்பாட்டால் விளக்கமுடியாது.

இதற்கும் புகையிலை உபயோகிப்பதற்கும் போதுமான அளவு தொடர்பு இல்லாவிட்டாலும், அதிகமாகப் புகைபிடிக்கும் வழக்கத்துடன் சம்பந்தப்பட்ட மற்றும் பல வியாதிகள் இருக்கின்றன. அவை: காரோனரி இரத்தநாளம் அடைத்துவிடுவது (காரோனரி இரத்தநாளம்தான் இருதயத்திற்கு இரத்தம் எடுத்துச்செல்லும் தமனியாகும்—மொ-ர்). பெர்ஜா வியாதி (கால்களுக்கான இரத்தத் தமனிகள் அடைக்கப்பட்டுக் கால்கள் புரையோடி அழுகிப்போதல்—மொ-ர்), டுவடினம், இரைப்பைப் புண்கள், பார்வை மந்தம் (amblyopia), நாட்பட்ட மூச்சுக் குழல் அழற்சி, க்ஷயரோகம் முதலியவைகள் ஆகும். டென்மார்க் மருத்துவர்கள் சிலரின் கணிப்புப்படி, மூத்திரப்பைப் புற்றுநோய்கூட இதில் அடங்கும். நுரையீரல் புற்றுநோய்க்கு முன்னோடியாக நாட்பட்ட மூச்சுக்குழல் அழற்சி இருக்கலாம் எனவும் தெரிகிறது. 1918-ல் அகில உலகத்திலும் ஏற்பட்ட இன்புளூயென்ஸா ஜுரம், நுரையீரலைத் தாக்கி, அதனமூலம் நுரையீரல் புற்றுநோய் உண்டாகியிருக்கலாம் எனவும் பல ஆசிரியர்கள் கருதுகின்றனர் எனினும், இந்த இன்புளூயென்ஸா ஜுரத்தினால் அதிகமாகப் பாதிக்கப்பட்ட ஐஸ்லாண்டு நாட்டில் நுரையீரல் புற்றுநோய் அதிகரித்ததாகத் தெரியவில்லை. மேலும், இந்த இன்புளூயென்ஸா இருபாலரையும் ஒரேமாதிரியாகவே தாக்கியது.

முடிவாக, நுரையீரல் புற்றுநோய் மரண விகிதத்திற்கும் உபயோகிக்கப்பட்ட மொத்தப் புகையிலைக்கும் ஒரு தொடர்பும் இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், பலதரமான பத்து நாடுகளில், 20வருடங்களுக்கு முன்னர் சிகரெட் உபயோகிக்கப்பட்ட விகிதத்திற்கு ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கிறது.

நுரையீரல் புற்றுநோய் சிகிச்சை

மூன்று காரணங்கள் ஒன்று சேர்ந்து, நுரையீரல் புற்றுநோயை ஒரு சமூகப் பிரச்சினையாக்குகின்றன. (1) மற்ற அங்கங்களின் புற்றுநோயைவிட, இந்தப் புற்றுநோய் குறைந்த வயதிலேயே அதிகமாக உண்டாகிறது. (2) நோய் தீர்ப்பது மிகவும் சிரமம். (3) ஏனெனில், நோயின் அறிகுறிகள், நோய்வளர்ச்சியின் இறுதிக்கட்டத்திலேயே தோன்றுகின்றன. 1951–52-ல் பிக்னல் கண்ட 637 நோயாளிகளில் 135 பேர் அறுவை சிகிச்சை செய்யப்பட்டனர். 210 பேர் எக்ஸ்-கதிர் சிகிச்சை செய்யப்பட்டனர். 292 பேர்களுக்கு ஒரு சிகிச்சையும் தரப்பட வில்லை. கடைசியாகக் குறிப்பிட்டவர்களில் 128 பேர்கள், நோயின் முதல் அறிகுறி கண்ட 9 மாதங்களிலேயே மரணமடைந்தனர். 7 பேர்களில் ஒருவரே இரண்டு வருடங்களுக்கு அதிகமாக வாழ்ந்தனர். 5 மாதங்களாக நோயின் அறிகுறிகள் கொண்ட நோயாளிகளின் பாதிப்பேருக்கு முதல்நிலை வளர்ச்சியிலிருந்து மெடாச் டேசுகள் ஏற்கெனவே உண்டாகியிருந்தன. நோயாளிகளின் 18%ல் போதிய அறுவை சிகிச்சை செய்யமுடிந்தது. அறுவை வல்லுநர்களும், செவிலியர்களும், போதிய சிறந்த அளவில் முயற்சிசெய்தும், அறுவை சிகிச்சை செய்யப்பட்டவர் களில் 25-30% விகிதத்தினரே மேலும் 5 ஆண்டுகள் வாழ முடிந்தது.

இந்தப் பிரச்சினைக்கு முடிவு கூறுவது சிரமமேயல்ல. உடனடியாகப் புகை யிலை தடைசெய்யப்பட்டால், இன்றிலிருந்து 25 ஆண்டுகளுக்குள் ஆண்களில் நுரையீரல் புற்றுநோய் தோன்றும் விகிதம் சுமார் 80% நிச்சயமாகக் குறைந்து விடும். புகையிலை தடைசெய்யப்படுமென்பது நடவாத காரியம். பல காரணங் களால், தேசிய சுகாதாரக் குழுவினருக்கு ஆகும் முழுச் செலவைவிட அதிகமான பணம், புகையிலை வரிமூலம் அரசினருக்குக் கிடைக்கிறது. சுதந்திரமான சமூகத்தில் அது தடை செய்யப்படவேண்டுமா என்று நாம் சந்தேகிக்கிறோம். புகைபிடிப்பதால் உண்டாகும் தீங்குகளைப்பற்றித் தேசமெங்கும் பிரசாரம் செய்ய வேண்டும். இராணுவத்தில் பணியாற்றுபவர்களுக்கு வரியில்லாது சிகரெட் கிடைப்பது தடை செய்யப்படவேண்டும். இதன்மூலம் புகைபிடிக்கும் வழக்கம் ஓரளவு மட்டுப்படுத்தப்படலாம். புள்ளிவிவரங்கள் அதிகமாக ஆகப் புகையிலை தயாரிப்பாளர்கள், ஏற்கெனவே ஆரம்பித்திராவிட்டால், புற்றுநோய் உண்டாக் காத சிகரெட்டுகள் தயாரிப்பதில் ஆராய்ச்சி செய்ய ஆரம்பித்துவிடுவார்கள். சக்தி வாய்ந்த வடிகட்டும் சாதனங்கள், உள்ளிழுக்கப்பட்ட தாரின் அளவைக் குறைக்கப் பெரிதும் உதவும். புகையிலையில் புற்றுநோயின் முன்னோடிகளை அகற்றுவதன் மூலமும், எரிவதன் உஷ்ணத்தை மட்டுப்படுத்துவதன் மூலமும், புகையிலையில் புற்றுநோய் உருவாக்கும் சாதனங்களைக் குறைக்கமுடியும்.

கதிர்வீச்சும் புற்றுநோயும்

'எக்ஸ்' அல்லது 'காமா' கதிர்வீச்சால் 200 கேசுகளில் புற்றுநோய் உண்டானதாக மருத்துவ இலக்கியத்தில் காணப்படுகிறது. 1895, டிசம்பரில்

உர்ஸ்பர்க் மருத்துவக் குழுவில் ராண்ட்ஜன், தனது புதிய கிரணங்கள் (கதிாகள) கணடுபிடிப்பை வெளியிட்ட ஆறு ஆணடுகள கழித்து, 1902-ல முதல் கேஸ் விவரிககப்பட்டது. ராணடஜன் குழாய்களை நான்கு ஆணடுகளாக மற்றவாகளுக்கு விவரிததுககாட்டிய ஒரு ராணடஜன கதிா வலலுநர்தான் முதல் நோயாளி. 33 வயதுவந்தவர்; அவருககு வலக்கையின பின்புறததை பெருமளவிறகுப பாதிதத கார்சினோமா உணடாயிற்று அதனமூலம முழஙகை, அககுள இவைகளின் கிணநீர் முடிசசுகளில மெடாசடேசுகள உணடாயின. முதலில் வியாதி பெருமபாலும எகஸரே மருததுவர்கள, செவிலியர்கள, தொழில் வல்லுநாகள இவாகளிடையே தோனறிற்று. இதையே 'தொழில்மூலம் உணடான கதிர்வீசசுப் புற்றுநோய்' எனகிறோம.

இதன பின்னர், 'சிகிசசைமூலம உணடான கதிர்வீச்சுப் புற்றுநோய்' ஆரம் பித்தது. தற்காலத்துப் பெருமபாலான கேசுகள் இநதப பிரிவையே சாரும். கதிாவீசசுகளின ஆபததுகளைப்பறறித தெரியுமுன்னா முகபபரு, சோரியாஸிஸ், வெருகா, பேஸ், புருரைகோ போன்ற பல தீஙகற்ற வியாதிகளுககுக் கதிாவீச்சுச சிகிசசை செய்யப்பட்டது. கதிர்வீசசிறகும புறறுநோய் உணடாவதற்குமான இடையிலுள்ள 'மறைந்து கிடககும காலம' மிகவும் நீணடதாகும; 4 முதல் 34 வருடஙகளவரை ஆகலாம இந்தச சிகிசசைகளைச செயயும மருததுவர்களைப் பொறுத்தவரையில் சராசரியாக மருததுவாகளைவிட, எகஸரே மருததுவர்கள் 5 ஆணடுகள சீககிரமே மரணமடைகிறாாகள என ஷிலட்ஸவாரன கணடார். எனினும, அவாகளிடையே குறிபபிடும அளவில் புற்றுநோய அதிகமாக உணடாவதிலலை. கதிர்வீசசுக கிரணஙகள் அதிக அளவில் உடமபைத தாக்கும போது, மூப்படைதல் துரிதப்படுத்தப்படுகின்றன என மிருகப் பரிசோதனைகள் மூலம தெரிகிறது.

உறுபபுகளின் உள்கதிர்வீச்சுக்குச் சிகிசசைக்காக உபயோகப்படுத்தப் படுகிற கதிரியகக 'ஐசோடோப்களும' மேறகூறியவைபோன்று, சம அளவில் ஆபத்து உண்டாககககூடியவைகள. உதாரணமாக, தைராயடுச சுரப்பி அளவுககு மிஞசி அதிக அளவில வேலைசெயவதறகுச் சிகிசசையாக, கதிரியக்க ஐயோடின கொடுககப்பட்டால அதிதீவிரமான மைலாய்டு லியூகிமியா உண்டா வது தெரிநததே. ஜபபானில் 'அணுகுணடு வெடிப்பிற்குப்' பிழைததிருந்த எஞ்சியவர்களிடம காணப்பட்ட நோயும இதுதான. பொதுவாக ஜபபானியர் களிடையே காணபபடுவதைவிட, அதிதீவிர லியூகிமியா அஙகு 5 மடஙகு அதிகமாகக காணபபடுகிறது. திடீரெனறு அணுகுணடு வெடிபபினால விளையும கதிர்வீசசுகளுககு ஒருமுறை உட்படுத்தப்பட்டால பலதரபபட்ட கட்டிகள் மிருகஙகளிடையே உண்டாகலாம எனவும தோன்றுகிறது.

புற்றுநோய் உருவாகும் கணணோட்டததில பார்ததால், மிக்வும ஆபத்தான பிளவுபபொருள ஸட்ரானசியம-90 எனபபடும ஸடரானசியததின கதிரியகக ஐசோடோப் பொருளதான் இளைஞர்கள, மிருகங்கள் இவைகளின வளரும்

எலும்புகளில் உள்ள கால்சியத்தை அகற்றி ஸ்ட்ரான்சியம் சேரமுடியும். அனுமதிக்கபபட்ட அதிகபட்ச அளவின் 10% (தொழில்மூலம் தாக்கப்படுவது); ஒரு வருடத்தின் 0.25 rad (ரேட) விகிததகில எலும்பைக் கதிர்வீசசினல் தாககும என லூயிஸ் (1957) கணககிட்டார். பல நூறு குண்டுகளின் வெடிப் பால தொடர்ந்து வெளிவிடப்படுகிற கதிர்களில் அந்த நிலையான ஜனதொகை இருந்தால், ஒவவொரு வருடமும லியூகிமியா மரணஙகள் 5—10% அதிகமாகும என லூயிஸ கணககிடுகிறா. தறபோது ஸ்ட்ரான்சியம-90-ன அளவு மிகவும் குறைவாக இருபபதால, அதனல ஏறபடும ஆபததும் குறைவாகவே இருக் கிறது. எனினும, நிலைமை பழைய நிலைக்கு மாற்றமுடியாத ஒன்றாகும் என்பது குறிபபிடத்தகுந்தது. அணுகுணடுகளின் வெடிப்பு அதிகமாக ஆக ஸட்ரானசியம்-90-ம அதிகமாக உறபததியாகி, அதனல் ஏறபடும ஆபத்தும் அதிகமாகிறது. ஆபதது உணடாகும அளவு என்ன என்பதுபற்றி நமக்குத திட்டமாகத் தெரியாது. இதுபறறிய தெளிவான விவரஙகள் நமக்குக கிடைக்கும் போது, அதன அளவு மிகவும அதிகமாகி, காலம் கடந்துவிட்டது எனத் தெரியும் போது கஷ்டமாக இருககும

பரிசோதனைப் புற்றுநோய்களின் முக்கியத்துவம்

தொழில மூலமும நூழ்நிலைச் சுற்றுப்புற மூலமும மனிதனுககுப புற்றுநோய் உணடாகக காரணமான சிலவற்றை நாம இநத அததியாயததில் கண்டோம். நேரடி மனிதப பரிசோதனைமூலம இந்தத் தகவல கிடைககவிலலை. பரிசோதனைகள மூலம மிருகஙகளில புறறுநோய உணடாக்கி, அதன்மூலம கிடைககும் புளளி விவரஙகள அதிகரிததுவருகின்றன. செனற 20 ஆணடுகளாக 3.4 பென்ஸைப ரீன் போனற பாலிசைகளிக நீரககரிபபொருளகளும, β நாப்தலமைன் போனற சாயததொழிலின இடைபபொருளகளும, கதிர்வீசசுகளும் (எகஸ-ரே அல்லது கதிரியக்க ஐசோடோப்கள்), வைரஸகளும் போன்ற 400-க்கு மேற்பட்ட பல பொருள்கள, குறிப்பாக எலிகள், சுணடெலிகள் போன்ற கொரிக்கும் உயிரினங களில் புறறுநோய் உண்டாககுவதாகத தெரிகிறது.

செய்தொழிலாலோ, சூழ்நிலையாலோ மனிதர்களிடத்தில் இயற்கையிலேயே நோயை உண்டாககும முறைகள்மூலம், விலஙகுகளிடததில் புற்றுநோயைப் பரிக்ஷார்த்தமாக ஊககுவிபபது, புறறுநோய ஆராய்சசியில் மிகுந்த முககியத்துவம் வாய்நததாகக் கருதப்படுகிறது.

5. பரிசோதனைகள்மூலம் புற்றுநோய் உண்டாக்குதல்

புகைக் கூண்டுகளைச் சுத்தம் செய்பவர்களின் விதைப்பையில், எபிதீலி யோமா எனப்படும் சருமப்புற்றுநோய் உண்டானதை விளக்கமாக 1775-ல் பெர்சைவல் பாட் (1713–88) விவரித்ததிலிருந்து, ரசாயன சாதனங்களால புற்றுநோய் பரவிய வரலாறு ஆரம்பமாயிற்று. இதுதான் முதல முதலாக நமககுத தெரிந்து 'செய்தொழில்மூலம்' உருவான புற்றுநோயாகும. ஒரு குறிப்பிடட காரணத்தால் இது உருவாயிற்று என பாட் அறியலானா. புகையினுல் சருமம ஆபாசமடைந்துவிடலாம். அந்த நாட்களில் 'ஏறும பையன்களால்' புகைக் கூண்டுகள் சுத்தம செய்யப்பட்டன. இள வயதிலிருந்தே புகையுடன் தொடாபு அதிகமாக இருப்பதால், பிற்காலத்தில் விதைபபையில புற்றுநோய் உண்டா யிற்று. 1875-ல் 100 வருடஙகள் கழித்து, ஹேல்லிலுளள பாரபின், தார் தொழிற் சாலையில் பணிபுரியும தொழிலாளர்களிடையே, தொழில்மூலம் உண்டாகும சருமப் புற்றுநோய்கள் வான் வால்க்மேனல் கண்டுபிடிககப்பபட்டன. 1876-ல் ஸ்காட்லாந்து ஷேல் நிலஙகளில் இதுபோனற கேசுகளை ஜோஸப் பெல் விவரிததார். 1887-ல் லங்காஷயர் பஞ்சாலைத தொழிலாளாகளிடையே இதைபபோன்ற கட்டிகள் உணடாயிருப்பது தெரியவநதது. அந்த இயந்திரஙகளுககு இடப படும் கனிப்பொருள் எண்ணெயுடன் நீண்ட தொடர்புகொணடிருந்ததால் இந்த வியாதி உண்டாயிற்று எனத் தெரிந்தது.


இவைகளெல்லாம் ஒப்பிட்டுப் பார்க்கப்படாத பரிசோதனைகள். ஆனால், விஞ்ஞான ரீதியான ஆராயச்சியில் பயன்படுததக்கூடிய புற்றுநோய்க் காரணி களின் மூலத்தை இவைகள காட்டின. 1889-ல் ஹானஸ் என்பவர், வான் வால்கமேனின கேசுகளைப் போன்றே, கபிலநிறமான நிலககரி எண்ணெயைச் சருமத்தில் பூசி எலிகளிலும நாய்களிலும புற்றுநோய் உண்டாக்க முயற்சி செய்தார். அவர் வெற்றி பெறவில்லை. ஆனல், 1915-ல் யமகீவாவும், இச்சி காவாவும நிலக்கரி எணணெயை முயல்களின் காதுகளில் பூசியதன்மூலம் புற்றுநோய்க் கட்டிகளை உண்டாககுவதில் வெற்றியடைந்தனர்.

20ஆம் நூற்றாண்டின ஆரம்ப காலங்களில், நிலக்கரி எண்ணெயால் உணடான 'நோய்க்குறியியல் நிலைகள்' சாதாரணக் காயமாக இருக்கமுடியாது. ஆனால், 'ரசாயனக் காயததுடன்' இணைந்திருக்க வேண்டும் என்ற கருத்து வலுப்பட்டது (ராஸ, கிராப்பா 1912). கீலில் உள்ள ரசாயனப்பொருளே சாதாரண செலபகுபபை நேரடியாக ஊககுவிததன என ஏற்கெனவே ராசும, கிராப்பரும கருததுத் தெரிவிததனா (ஆஙகில மருத்துவ சஞ்சிகை, 15-4-1911) 1922-ல பேசி என்பவர் கரிப்புகையின புறறுநோய் உணடாகும் தன்மையைபபற்றிப பரிசோதனைகளமூலம் ஊர்ச்சிதம செய்தார். இதன் பினனர்ப் புறறுநோய் உண்டாக்கும பொருளையோ அல்லது பொருள்களையோ தனிமைப் படுத்த முயற்சிகள் செய்யப்பட்டன.

கூரிசசின் பிளாககாலும், டிரைபசாலும இதற்கான முதல் சூசகம 1921-ல் தெரிவிககபபட்டது. ஒரு நடுநிலை அஙககப்பொருளாக, கீலின் அதிகக கொதி நிலையின பினனமாக, புறறுநோய உணடாகும் இநதப பொருள் இருநததெனக் கணடனா. அது நைட்ரஜன, கநதகம, ஆாசனிக அலலது மறற உலோகஙகள் எதுவுமிலலாத, ஒரு பொருளாக, பிகரிக் அமிலததுடன நிலையான கூட்டுப் பொருளை உணடாககுகிறது. இது ஒருவேளை பாலிசைகளிக நீரககரிப் பொருள வகுபபைச சோநததாக இருககலாம. 1922-லிருந்து 1924-க்குள் சா எானஸட கென்னவே, ராயல் புறறுநோய ஆஸபததிரியில, சுணடெலிகளின் சருமஙகளில சுததமான பாலிசைக்ளிக நீரகக கரிபபொருளகளைப பூசினர். ஆனல், இநதப் பரிசோதனைகளமூலம, கிடைதத முடிவுகள ஒன றுமேயில்லை. எனினும, வாயுப்பொருள கலநத கீல் பொருள்களை, ஓா இருமபு வாலையில் 500°C வரை சூடு செயதால், தீவிரமான புறறுநோய உணடாககும் ஒரு பொருள உணடாவதாக அவா கணடாா. அதிலும அதிகமான உஷ்ண நிலைகளில் புறறுநோய் உணடாககும தன்மையற்ற பொருளகளான பெட் ரோலியம எணணெயகள, ஐசோபரீன, அசிடிலீன், கொலஸட்ரால, மனித ரோமம, மிருக ரோமம, தசை போனறவைகளிலிருநது நீரகததின் உதவியுடன புற்று நோய் உண்டாககும தாாகள கிடைககும. இநதக குழப்பததைத தெளிவு படுததும இரணடாவது சூசகம மேனியாடுககுக கிடைத்தது. புற்றுநோய்க் காரணிகளின கீலகள, எணணெய்கள் இவறறோடு எப்போதும தொடர்பு கொணடுளள நில ஒளிாவை அவா ஆராயநதாா. 1927-ல இநத ஒளிர்வின் நிறமாலை தனிபபட்ட தன்மையுடையதாய இருககிறதென்றும, அதன் தாழ் அலைவரிசையில் 3 பட்டைகள் இருககின்றன என்றும் அவர் கண்டார்.


இயற்கையிலேயே கிடைககும புற்றுநோய்க் காரண தார்களையும், கென்னவே, கோல்டன போன்றவர்கள் பைரோலிசிஸ் (pyrolysis) பரிசோதனைகள்மூலம் கண்டவைகளையும், மேனியர்டும், ஹேகரும் ஆராய்ந்தனர். இதே சிறப்புத் தன்மை கொண்ட பட்டைகள கணடுபிடிககப்பட்டன. அதே மாதிரியான ஒளிர்வு அடையாளமுள்ள சுத்தமான ரசாயனக் கூட்டுப் பொருள்களை அடைவது

தான் அடுத்தபடியாகும். 1928-ல் இதே ஒளிர் நிறமாலையைக் கொண்ட 1:2 பென்சாந்தரசீனை ஹேகர் கண்டார். இதே கூட்டுப்பொருளோ, அல்லது இதனின்று விளைந்த மற்றப் பொருளோ, சுத்தி செய்யப்படாத தார்களின் ஒளிர்வுக்குக் காரணமாகும் என்பதில் சந்தேகமில்லை.



1 : 2 பென்சாந்தரசீனின் அமைப்பு


1929-ல் கிளார் 1 : 2 · 5 : 6 டைபென்சாந்தரசீனைச் செயற்கை முறையில் உருவாக்கினர். இதுதான் புற்றுநோய் உண்டாக்கும் குணங்களைக் கொண்ட சுத்தமான முதல் ரசாயனக் கூட்டுப்பொருளாகும் (கென்னவேயும், ஹேகரும் 1930).



1 · 2 : 5 : 6 டைபென்சாந்த்ரசீன்

இந்தச் சிக்கலான பாதையினூடே வழிகாட்டும் ஒரு கயிருக, ஒளிர்வு நிறமாலையை மட்டுமே கொண்டு, ராயல் புற்றுநோய் ஆஸ்பத்திரியில் ஆராய்ச்சிக் குழுவினர் பெக்டன் வாயுத் தொழிற்சாலையிலிருந்து கிடைத்த 2 டன் கீலைப் பின்னப்படுத்தும் வேலையில் இறங்கினர். 1931ஆம் ஆண்டு முன்பனிக் காலத்தில் இது 7 கிராம் எடையுள்ள மஞ்சளான படிகப் பொடியாக மாற்றப் பட்டது. இதை மேலும் பின்னப்படுத்தியபோது, பெரிலீன் $C_{20}H_{12}$ என்ற பொருளின் ஐசோமர்களாக இரண்டு படிகப் பொருள்கள் கிடைத்தன

பிரதமக் கூட்டுப்பொருளான 3 : 4 பென்ஸ்பைரீன் புற்றுநோயின் மிகச் சிறந்த காரணியாகக் கருதப்பட்டது. மூலக் கீலின் ஒளிர்வுக்கு இது காரணமாக இருந்தது.




3 : 4 பென்ஸ்பைரீன்

அதிகமான கொதிக்கும் நிலை கொண்ட வாயுத்தொழில் தார்களில் 1·5%-ல் 3 : 4 பென்ஸ்பைரீன் இருக்கலாம் எனப் பின்னர்ச் செய்யப்பட்ட ஆராய்ச்சி மூலம் தெரிகிறது.


ரசாயன ரீதியில் மிகவும் சிக்கலான, இரண்டு நீரகக் கரிப்பொருள்கள், சுண்டெலியின் தோலிலே பூசப்பட்டாலும், புற்றுநோயைத் தோற்றுவிக்கும் திறனுடையவையாக இருக்கின்றன என்று தெரிந்தவுடன் அதே குணங்களையுடைய, தூய்மையான ரசாயனக் கூட்டுப் பொருள்களைத் தேட ஆரம்பித்தார்கள். இன்று நமக்கு அதுபோல் பல பொருள்கள் தெரியும். கீல், தார், எண்ணெய், அதன் தொடர்புடைய தொழில்கள் இவற்றில் உண்டாகும் 'செய்தொழில்' புற்றுநோயப் பிரச்சினைகளை, புற்றுநோயைத் தோற்றுவிக்கும் ரசாயனப் பொருள்களைக் கண்டுபிடித்தது, ஓரளவு விடுவித்துள்ளது. ஆனால், சருமத்தைத் தவிர மற்ற இடங்களில் புற்றுநோய் தோன்றுவதில் உள்ளார்ந்துள்ள பிரச்சினைகள் இன்னும் முழுமையாக விடுவிக்கப்படவில்லை. உடலில் இயற்கையாக உள்ள, பல கூட்டுப்பொருள்கள் ஏறத்தாழ இதுபோன்ற ரசாயன அமைப்பை உடையனவாக இருக்கின்றன. எனினும், உடல் இவற்றை அசாதாரண நிலைகளில் கூடப் புற்றுநோய் உண்டாக்கும் நீரகக் கரிப்பொருள்களாக மாற்றக்கூடும் என்று யாரும் எடுத்துக்காட்டவில்லை. 1947-ல் ஹார்ட்வெல்லால் பிரசுரிக்கப்பட்ட (இரண்டாவது பதிப்பு, 1951) 'புற்றுநோய் ஊக்கும் செயல்முறைக்காகப் பரிசோதிக்கப்பட்ட கூட்டுப்பொருள்களைப் பற்றிய ஆராய்ச்சியில், ஏறக்குறைய 1,200 பொருள்கள் வரிசைப்படுத்தப்பட்டுள்ளன. அவற்றில் 350 தீங்கற்ற கட்டிகளையோ, கொடூரமான கட்டிகளையோ தோற்றுவிக்கும் தன்மையுடையன என்று கண்டுபிடிக்கப்பட்டது. அதன் பின்னர், ஏறக்குறைய 200 புற்றுநோய் ஊக்கும் ரசாயனப் பொருள்கள், அப்பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளன. நோய் ஊக்கும் இந்த ரசாயனப் பொருள்களின் பட்டியலைக் கண்டு நாம் அச்சமுறத் தேவையில்லை. ஏனெனில், அவற்றில் பெரும்பாலானவை, அதை விளைவிக்கும் செயல்முறையை மனத்தில் கொண்டே செயற்கை முறையில் தயாரிக்கப்பட்டவை. அதில் சிலவற்றைத் தவிர, முந்திய பட்டியலிலுள்ள 350 புற்றுநோய் ஊக்கும் பொருள்கள் 1 : 2 : 5 : 6 டைபென்சாந்த்ரசீனுடன் தொடர்புள்ள பாலிசைக்ளிக நீரகக்கரிப்பொருள்களோ, அல்லது அசோ சாயப் பொருள்களோ, வாசனை அமைன்களோ, ஸ்டீராய்டு ஹார்மோன்களோ அல்லது ரேடியக் கதிர் இலக்கப் பொருள்களோ ஆகும்.

பாலிசைக்ளிக நீரகக்கரிப்பொருள்கள் தங்களது ஆதிக்கத்தைப் பிரதானமாக அவை இடப்பட்ட இடத்திலேயே செலுத்துகின்றன; உதாரணமாக, பரிசோதனைக்குட்படுத்தப்படும் பிராணியின் தோல்மீது — பிறவகைப் புற்றுநோய்க் காரணிகள், இடப்பட்ட இடத்திற்கு அப்பால் செயல்படுகிறது. பாதிக்கப்பட்ட இடம், நோய் ஊக்கிகள் கிரகிக்கப்பட்டு, கடத்தப்பட்டு, வளர்சிதை மாற்றம் அடைந்ததன் விளைவே ஆகும். இதற்கு அசோ சாயப் பொருள்கள் சிறந்த உதாரணங்களாகும். 1906ஆம் ஆண்டிலேயே பி. பிஷர் என்பவர், ஸ்கார்லட் சிவப்பு சாயப் பொருளை முயலின் காதுத் தோலில் ஊசிமூலம் செலுத்தி எபிதீலிய வளர்ச்சிக் கட்டிகள்போன்று இருப்பதை விவரித்தார்.




ஸ்கார்லட் சிவப்பு

சில ஆண்டுகள் கழித்து, 1909-ல் புற்றுநோயக் காரணி எளிதான அமைப்புக் கொண்டதாக ஆக்கப்படலாம் எனவும், அதன் செயல் ஊக்கப் பகுதி 4′ அமைனோ-2 : 3′ அசோடோலுவீன் என்றும் ஹேவர்டு கண்டார்.



எனினும், ஸ்கார்லட் சிவப்பு அல்லது 4′ அமைனோ 2 . 3′ அசோடோலுவீன், பரிசோதனை மிருகங்களுக்குக் கொடுக்கப்பட்டதால், வேறுவிதமான முடிவுகள் கிடைத்தன. பல காலமாகப் பின் குறிப்பிட்ட பொருள் எலிகளுக்கு உணவில் கொடுக்கப்பட்டால், கல்லீரல் புற்றுநோய் உண்டாகிறது என யோஷிடா அறிவித்தார்; 1936-ல் அமைனோ அசோடோலுவீனின் ஓர் ஐசோமரும், கல்லீரலின் புற்றுநோயக் கட்டிகள் உண்டாக்குவதில் தீவிரம் வாய்ந்தது என கினோசிடா கண்டுபிடித்தார். இதுதான் 'வெண்ணெய் மஞ்சள்' என்பது - 4 - டைமீதைல் அமைனோ அசோபென்சீன்.



இது ஆகாரத்திற்கு நிறம் கொடுக்கும் சாதனமாக முன்னர் உபயோகிக்கப் பட்டதால் இந்தப் பெயர் கொண்டது. சரும அடியில் ஊசிமூலம் செலுத்தப் பட்டால், 'வெண்ணெய் மஞ்சள்' ஒரு விளைவும் தலத்தில் ஏற்படுத்துவதில்லை. ஆனால், மற்ற உறுப்பான கல்லீரலில் கொலான்ஜியோமா, ஹெபடோமா போன்ற புற்றுநோய்க் கட்டிகளை உண்டாக்கியது.

மேற்குறிப்பிட்ட மூன்றாவது பிரிவான வாசனையுள்ள அமைன்களைப்பற்றிய தற்காலத்தில் அறிவு, β நாப்தலமீன், பென்சிடீன் பொருள் உற்பத்தியுடன் இணைந்த சிறுநீர்ப்பையின் புற்றுநோய்களைப்பற்றிய விவரங்களிலிருந்து கிடைத்ததாகும்.







β நாப்தலமீன் பென்சிடீன்

மற்ற அமைன்களைப்பற்றியும் சமீபத்தில் ஆராய்ச்சி செய்யப்பட்டன. 2-அசிடைலமைனோபுளோரின் என்ற கிருமி நாசினி, ஒளி நாளத்தின் புற்று

நோய் உள்ளிட்ட பலதரப்பட்ட புற்றுநோய்களை எலியில் உண்டாக்கியது. 4-அமைனேஸ்டில்பீனின் வினைபொருளகளும இததகைய பலதரபபட்ட குணஙகளை வெளிக்காட்டின.



2-அசிடைலமைனேபுளோரின




4-அமைனேஸ்டில்பீன


இநதப் பிரிவைச சேர்ந்த கூட்டுப பொருள்களால் எலியில் உருவான கட்டிகள் வருமாறு : ஊசியிடப்பட்ட இடத்தில சாரகோமா, பேசல் செலகள கொணட கார்சினேமா, வெளிப்புற ஒலி நாளததின் புற்றுநோய்கள், கலலீரலின் கோலானஜியோமா, நுரையீரல் அடினேமா, குடலின் சில புற்றுநோய்கள் ஹைபர்நெபரோமா (சிறுநீரகப் புறறுநோய்—மொ-ர்) முதலியவைகளாகும.

4-அமைனேடைபீனைலும், அதன் வினைபொருள்களும்தான் சமீபகாலததில் விவரிககபபட்ட புற்றுநோய் உண்டாக்கும் அமைன்கள் ஆகும.


பென்சிடின் அல்லது 2-அசிடைல் அமைனேபுளோரினபோல் அலலாமல் 4-அமைனேடைபீனைல் நாய்களில் சிறுநீர்ப்பை புற்றுநோய் உண்டாக்கு வதில மிகுநத சகதி கொண்டிருநதது. அவை β நாபதலைமைன் போனறு சக்தி வாய்ந்திருந்தன.



உடல் இயலைச சார்ந்த ஒரு முககியமான கூட்டுப் பொருளுககும், புற்று நோய்த் தோறறததிறகுமிடையேயுள்ள ஒரு முக்கியமான இணைப்பு, 1932-ல் லகசேனல கண்டுபிடிககப்பட்டது. சில குறிபபிட்ட சாதகமான சூழநிலை களில, பெணபால ஹார்மோன்களை ஊசி மூலம் செலுத்தினல், ஆண சுணடெலியில், முலைபபுறறுநோய் உணடாகிறது என அவர் கணடார. ஈஸ்ட்ரோஜன்கள போனற, ஸ்டீராபடு ஹாரமோன்களின் புற்றுநோய் உணடாககும் வினை, திசுக்களிலே மாததிரம நிகழமுடியும. இந்தத திசுககளின மீது இயற்கையாகவே, இந்த ஸ்டீராய்டு ஹார்மோனகள் நன்கு வினை புரியும். இயற்கையிலேயே கிடைக்கும ஒரு கூட்டுப் பொருளால புற்றுநோய உணடாககப் படும இந்த ஆராய்சசி, லகசேனல் முதலில் செய்யப்பட்டது. மேலும், பாதிககப் படும தன்மை கொணட சுணடெலிகளில, முலை, அணடம இவைகளில் புற்று நோயை உணடாககும சக்தி, செயறகை முறை பெண்பால் ஹார்மோன்களுக்கு உண்டு என்பது தெரிந்தது.



ஈஸட்ரோன்
(இயற்கையாகக கிடைககும
பெண்பால் ஹாாமோன)



டைஈதைலஸ்டில்போஸ்டீரால்
(செயறகைமுறைப
பெணபால ஹாாமோன)

மனிதனில, எக்ஸ-கதிர்கள புறறுநோய் உண்டாககுவது பல நாட்களாகத் தெரிந்த ஒன்றுகும. அணுவிளைபொருள்களும, அணுகுணடுகளின விளை பொருளகளும, தீவிர ரேடியக கதிர இயககத தனமை கொணடதாலும மினனணுக்கதிாகளை வெளிவிடுவதாலும் (புறறுநோய உணடாககும தன்மை கொணடவை) இது சமீப காலததில மிகுநத முககியததுவம அடைந்திருக கிறது. ஆராயச்சி விரிவடைவதன அவசியததை இது உணடாககியது. இந்த வளாசசி தொடர்ந்து நடைபெறவேணடும. ஏனென்றுல், அபபோதுதான நமககு ஏறபடக்கூடிய மரபுவழி சொமாடிக் ஆபத்துகள் நனகு தெரியும். உடல் பூராவும செலுத்தப்பட்ட குறைநத அளவு எகஸ-கதிர்மூலம மிருகஙகளில புறறு நோய உண்டாகலாம என்பது ஏற்கெனவே தெரிநத விஷயம. துகளகளாகப் பிரியாத, வெப்ப நியூட்ரானகள்மூலம, சுண்டெலிகளில லியூகாமியா போன்ற புறறுநோய்கள உணடாககப்பட்டிருக்கின்றன.

கதிரியகக ஐசோடோப்களே புறறுநோயை உணடாக்க வல்லன. இவைகள உடலின் ஒரு பகுதியாக ஆகிவிடுவதும, உயிரினஙகளுககு நிரந்தரமான ஆபததை விளைவிககும ஒன்றுக ஆகிவிடுவதுமதான. இதறகும வெளிப்புறக கதிர வீசசுககும உள்ள வேறுபாடு மனிதனுககு சிகிசசைககுக கொடுககப்படும அளவிறகுச சமமான, கதிரியகக பாஸவரததிலுள்ள (P^{32}) பாஸபேடடை உட செலுததினல், சுணடெலிகளில் எலுமபு சமபநதமான சாாகோமாககள உணடாவது தெரிந்தன. மனிதனின தீஙகறற தைராயடு வியாதிகளில சிகிசசைககாகக கொடுககபபட்ட ரேடியோ அயோடீன பிறகாலததில லியூகிமியா உணடாக்குவதும நமககுத தெரியும. இஙகு, இரதத ஓடடததில சுறறிக் கொணடிருக்கும ரேடியோ அயோடினின கதிாவீசசால, எலுமபு மஜஜையில் கொடூரமான புறறுநோய மாறறஙகள உணடாகியிருககினறன. கதிரியகக ஸட ரான்சியம எலுமபிலேயே ஒருமுகபபடும தனமை கொணடிருககிறது. அது அஙகு கால்சியததை வெளியேறறுகிறது. சுணடெலிகளில எலுமபுப புற்றுநோய் களை உணடாககுவதாகவும் தெரிகிறது. புளுடோனியமும (Pu^{239}) எலுமபுப புறறுநோய்களை உணடாககுகின்றன. ஒரு கிராமின் பதது லடசததில ஒரு பகுதியை சரும இடையில ஊசிமூலம செலுததினல், ஊசியிடப்பட்ட இடததில் சாாகோமாககளை உணடாகக முடியும. இவவளவு குறைநத அலகில் புறறுநோய்

உண்டாக்கும சக்தி கொண்டிருப்பதாலதான, அணுகுண்டுகள வெடிப்பதால் ஏற்படும் தீங்கான ரேடியக கதிரியக்க பயங்கர விளைவுகளைபபற்றி நாம கவலை கொள்கிறோம. ஒரே மூச்சில், 1 μ கிராம புளூடோனியத்தை மூச்சில உள்ளிழுக்க-முடியும.

புற்றுநோய் உண்டாக்கும ரசாயனப பொருள்களின் பட்டியலை நீட்டிக்-கொண்டே போகலாம. பலதரப்பட்ட பாலிமர் மெல்லிய படலங்களை மிருகத்தின உடலில பொதிந்தால் எலிகளில் சார்கோமா உண்டாக்கமுடியும. செல்லோபேன, நைலான, டெபலான், டெகரான், பாலிதீன், பாலிஸ்டைரின், பாலிவினைல குளோரைட் போன்ற பல பிளாஸ்டிக பொருளகளின் மெல்லிய சவ்வுகளதாம புற்றுநோய்க கட்டிகளை உண்டாக்குகின்றன எனபது விசித்திரமாக இருக்கிறது. நூல்கள, பொடிகள், முண்டுகள் போன்றவைகள புற்றுநோய உண்டாக்குவதில பலஹீனம வாய்ந்தவைகள்.

'வெண்ணெய மஞசள்' போன்ற அசோ சாயங்களால் மிருகங்களில கல்லீரல் கட்டிகள் உண்டாக்கலாம என்பதை நாம ஏற்கெனவே பார்த்தோம மேலும், டேனிக் அமிலம், செனசியோ அல்கலாய்டுகள, எதியோனின் போன்ற-வைகள இந்த அங்கத்தில் (கல்லீரல்) புற்றுநோய் உண்டாக்கலாம். ரசாயன முறைப்படி மிகவும எளிய பொருளான தையோயூரியா சுணடெலிகள சருமப்-புற்றுநோயையும், யூரதேன் நுரையீரல் புற்றுநோயையும உண்டாக்குகிறது.

ஆரோக்கியமான செல்களைக கொடூரமான புற்றுநோய் செல்களாக மாற்றப் பலதரப்பட்ட ரசாயன, பௌதிக மார்க்கங்கள் உள்ளன. இவைகளுக்குள் தொடர்பு இல்லாதிருப்பது புற்றுநோய உண்டாக்கும 'ஒருமைக கோட்பாட்டிறகுத' தடையாக இருக்கிறது. இந்த நிலையை, ஹாடோ (1955) மிகவும நன்றாக விவரித்-திருக்கிறார். புற்றுநோய்க காரணிகளுக்கு செல்களில் உண்டாகும மறுவினையின் இறுதி வகைகள் ஒரு வரமபிறகுட்பட்டவை. அந்த வரமபு மரணமா? குண மடைவதா அல்லது வளர்ச்சி விகிதம் அதிகரித்துத் தன்னை நிரந்தரமாகக்த-தக அமைத்துககொள்ளுதலா என்பதேயாகும்.

பின்வரும அத்தியாயங்களில் புற்றுநோயின் ஆரமபத்தைபபற்றிய சில-கோட்பாடுகளை ஆராயலாம். ஆனால், செயற்கைத் திசுக்கலவையிலிருந்து சில முக்கியமான விவரங்கள கிடைத்துள்ளன. அதாவது, மூல மிருகத்திடமிருந்து-அகற்றப்பட்டு, ஓமபுயிரின் இரத்த ஓட்டத்திலுள்ள அவசியமான உணவுப-பொருளகள கொண்ட கலவையில் வளாக்கப்பட்ட ஒன்று, கோழிக்குஞ்சின இருதயத்தை செல்கள போன்ற அத்தகைய வளர்ச்சிக்கலவைகளை, அதே சூழ்நிலை யில பல ஆண்டுகள வைத்திருக்கலாம. சில சமயங்களில் இந்தச சூழ்நிலைகளில ஒரு மாற்றமும இல்லாதபோது வளர்ச்சிக்கலவைகள கொடூர நிலையை அடைந்-திருக்கின்றன. ஒரு பொருத்தமான மிருகத்தினுள இதைச செலுத்தினால்,

செலுததப்பட்ட பொருள கொடூரமான புற்றுநோய்க் கட்டிகளைப் போன்று, வளர்ந்து தாககி அருகிலுள்ள உறுப்புகளில் மெடாச்டேசுகளை உண்டாக்கி யிருக்கின்றன.

நீணட கால வளாசசியின்போது வளர்சசிககலவைகளில காறறை அகற்றி நைடரஜனைச செலுததி முன கூறிய மாறுதலகளை உருவாக்கமுடியும என 1953-ல் கோலபிளாடடும கேமரானும கணடனா. இநதக கணடுபிடிபபு ஊர்சசிதம செய்யபபட்டால, பிராணவாயு இலலாத நிலைமைககும, கொடூரமான புறறுநோய் மாறறஙகளுககும் ஒரு காரணத்தொடர்பு இருக்கிறது எனத் தெரிகிறது.

மிருகங்களில் தானுகவே உருவாகும் கட்டிகள்

புறறுநோய்க காரணிகளை வேணடுமென்றே உட்செலுததி, புறறுநோய் உருவாககுவதுபோல இல்லாமல, மனிதனைப போன்று மிருகஙகளிலும, மததிய வயதிலும, முதுமையிலும் புற்றுநோயக கட்டிகள் தாமாகவே தோன்றுகினறன. 1902-ல வெளியிடபபட்ட புளளிவிவரப்படி, புறறுநோய் கொணட குதிரைகளில மூன்றில இரணடு பஙகு, 10 வருடஙகளுககு அதிகமான வயதுடன இருநதன. மூன்றில் இரணடு பஙகு நாயகள 6 வயதிறகு மேற்பட்டிருந்தன. புறறுநோய ஆராய்சசியில் உபயோகப்படுததப்படட மிருகஙகள் சுண்டெலியும, எலிகளு மாகும. சுணடெலிகளில தானுகவே புறறுநோய 18 முதல 24 மாதஙகளிலும எலிகளில 24 முதல் 36 மாதஙகளிலும உணடாயின.

எனினும், வீட்டில வாழ் பலதரபபட்ட மிருகங்களினுடையவும், ஆய்வுக கூட மிருகஙகளினுடையவும் சாதாரண ஆயுட காலத்தின் வீததததில உள்ள வேறுபாடு களை மனததில கொணடு பார்ததால, அவைகள பொதுவாகப புற்றுநோயாலும், குறிப்பாகச் சிலவகைக் கட்டிகளாலும பாதிக்கப்படும தனனியல்பான தனமையில மாறுபடுகின்றன எனபது தெளிவு. ஒரே வயதுடைய மிருகஙகளில எலிகள, சுணடெலிகளைவிடச் சீமைப் பெருசசாளிகளும, முயல்களும குறைநத வீகிததததி லேயே புற்றுநோய் அடைகினறன. பசுக்கள, குதிரைகள் போன்ற வீட்டில வாழ மிருகஙகளைவிடப பனறிகளும ஆடுகளும குறைநத அளவிலேயே புறறு நோய்களால பாதிககபபடுகினறன. நாய்களைவிடக குறைந்த அளவில் பூனைகள் புற்றுநோயால தாக்கப்படுகினறன.

கோழிகள் போன்ற பறவை இனஙகளில் தானுகவே உண்டாகும் சாதாரணப் புறறுநோயகளாவன: லிமபோசாாகோமா (நிணநீர் முடிச்சுகளின் புற்று நோய்—மொ-ர்), லியூகிமியா, சூல்பை, சூல்பை நாளம, குடல இவைகளின் புற்றுநோய்களுமாகும். ஒரு பறவையிலிருநது மற்றொரு பறவைக்கு, வடிகட்டப் படும வைரஸ்மூலம, லிமபோசாாகோமாவும, லியூகிமியாவும கொண்டு செல்லப்படுகினறன எனத் தெரிகிறது. இவை ஒரு தனியான, வழக்கததிற்கு

மாறுன ஒரு பிரிவாகும். ஏனெனில், வடிகட்டப்பட்டவைகள்மூலம் பெரும் பாலான பறவையின் கட்டிகள் மற்றவைகளுக்கு எடுத்துச் செல்லப்பட மாட்டா.

முதுகெலும்புள்ள குளிர் ரத்த ஜந்துக்களில் புற்றுநோய்கள் உண்டானதைப் பற்றிய விவரங்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றன. ஊர்வனவற்றிலும, நீரிலும், நிலததிலும வாழ்வனவைகளிலும காணப்படுவதைவிடப் பல கட்டிகள, மீன்களில் காணப்படுகின்றன. மீன்களில் தோனறும் கட்டிகளைப் பற்றிய ஆராய்சசிகள் பெரிதும் செய்யப்பட்டிருக்கின்றன. அதே அளவில ஊர்வன வற்றிலும, நீரிலும, நிலத்திலும் வாழவனவற்றிலும ஆராய்சசிகள செய்யப் பட்டால், அவைகளிலும் அதிக அளவில் கட்டிகள் காணப்படும்.

முதுகெலும்பற்றவைகளில் ஏற்படும் புற்றுநோயைப்பற்றி நமக்கு அதிகம தெரியாது. தேனீயிலும ஒரு புற்றுநோய்க்கட்டி ஏற்பட்டதாகத தெரிகிறது. ஸமித (1934) சிப்பிகளில் (கிளிஞ்சல்கள்) புற்றுநோய் ஏற்பட்டதை விவரிததார் ; நத்தை இனஙகளில் இரணடு புற்றுநோய்க் கட்டிகள ஏறபட்டதற்கான ஆதாரஙகளையும கண்டுபிடிததார்.

இடம் மாற்றி அமைக்கப்படும் கட்டிகள் (கழலைகள்)

சென்ற நூற்ருண்டின் இறுதியில் புற்றுநோய் ஆராய்ச்சிபற்றிய கண்டுபிடிப்பு களில் முககியமான ஒன்று நிகழ்ந்தது. ஒரே இன மிருகஙகளிலிருந்து 'ஒட்டுதல்' மூலம் அதே இன மறற மிருகங்களுககுப் புறறுநோயகளை இடம மாறறி அமைக்க லாம் எனக கணடுபிடிக்கபபட்டது. இடம மாறறியமைககபபடும இத்தகைய கட்டிகளில் சிலவற்றை மிருகத்தின் தலைமுறையிலிருந்து மற்ருெரு தலைமுறைக்கு வரையறையில்லாத அளவில பரப்பலாம எனவும் தெரிந்தது. இந்த நூற் ருணடின் ஆரம்பகாலப் புற்றுநோய் ஆராய்சசியின் பெருமபகுதி இவவிதம இடம மாற்றியமைககப்படட கட்டிகளின் நடததைபற்றிய ஆராய்ச்சியில செலவழிககப் பட்டது. இந்தக் கட்டிகள எல்லாம தேடிக் கணடுபிடிககப்படடன். அவை களுககு அவைகளைக கணடுபிடிததவாகளின் பெயர்கள இடபபடடு, இப்போது பெரும்பாலும அஙஙனமே அழைக்கப்படுகினறன. உதாரணமாக, ஜென்சனின் சுண்டெலி கார்சினேமா, ஜென்சனின் எலி சார்கோமா, பிளெகஷனா - ஜாப் லிஙகின் எலி காாசினேமா, பிரவுன்-பியர்சின முயல் புற்றுநோய்க கட்டி, ஹார்டிங-பேசி சுண்டெலி மெலனேமா, வாககர் எலி கார்சினேசார்கோமா போன்ற பலப்பல. இந்தப் பெயர்கள், புற்றுநோய்க் கட்டி முதலில் உருவான அந்த மிருகம் இறந்து பல தலைமுறைகள் கழிந்தும் நிலைத்திருக்கினறன.

ஒரே மாதிரியான சூழ்நிலைகளில செய்யப்பட்டுமகூட எல்லா ஒட்டவைப்பு களும் சரியாக வளரவில்லை என்பதை, இடம் மாற்றி அமைக்கபபடும கட்டிகள் சம்பந்தமான ஆராய்சசியாளர்கள் கணடனர். ஓமபுயிரின் எதிர்ப்புச சக்தியி லுள்ள வேறுபாடுகளே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது சரியானதே. ஒட்ட

வைப்புகள் சரியாக வளராத அல்லது சிறிது வளர்ந்து பின்னர் மறைந்துவிட்ட அந்த மிருகங்கள், மேலும் ஒட்டவைப்புகளுக்கு எதிர்ப்புச் சக்தி கொண்டிருந்தன. இந்த எதிர்ப்புச் சக்தியின் தன்மையைப்பற்றி ஆராய்ச்சி செய்யப்பட்டால், புற்றுநோய்களைத் தடுப்பதிலும் அவைகளுக்கு சிகிச்சை செய்வதிலும் பயனுடைய முறைகள் கண்டுபிடிக்கப்படலாம் என்ற நம்பிக்கை பிறந்தது. எனினும், கட்டிகளின் ஒட்டவைப்புகளுக்குள்ள அதே எதிர்ப்புச் சக்தி ஆரோக்கியமான திசுவை அளிப்பவரிடமிருந்து ஓம்புயிருக்கு ஊசிமூலம் செலுத்தினாலும் உண்டாக்கப்படலாம் எனத் தெரிந்தது. ஏற்கெனவே இருக்கும் தானாகவே ஏற்பட்ட கட்டியின் மீதோ அல்லது மிருகத்தின் பின்னர் கட்டி உண்டாகவிருக்கும் வாய்ப்பின்மீதோ இந்த எதிர்ப்புச் சக்தி ஒன்றும் வினைபுரிய முடியவில்லை. உண்மையில் இந்த 'எதிர்ப்புசக்தி' 'வெளியிலிருந்து' வரும் திசுக்களுக்குத் தெரிவிக்கப்படும் ஒரு பொதுவான எதிர்ப்புச் சக்தியே தவிர, குறிப்பான புற்றுநோய் செல்களுக்கு எதிராக அல்ல. மிருகங்களின் திசுக்களிலிருந்து தாமாகவே உருவாகும் கட்டிகள் அயலானதல்ல. ஆகவே அது எதிர்ப்புச் சக்தியை உண்டாக்குவதில்லை.

1907-ல் இந்த நிலைக்கு விதிவிலக்கை டைசா கண்டுபிடித்தார். ஜப்பானிய வால்ட்ஸ் (நிலைகொள்ளாத) சுண்டெலிகளில் தாமாகவே உண்டாகும் கட்டிகள், அதே இனத்தைச் சார்ந்த சுண்டெலிகளில் வெற்றிகரமாக இடம் மாற்றி அமைக்கப்படமுடியும் எனக் கண்டார். வால்ட்ஸ் அல்லாத (நிலையான) சுண்டெலிகளில் ஒட்டவைப்புகள் நன்கு வளரவில்லை. (வால்ட்ஸ் என்பது இருவர் சேர்ந்து ஆடும் நடனம். அதாவது, ஆடிக்கொண்டிருக்கும் ஒரு நிலையில்லாச் சுண்டெலிகளை இங்குக் குறிக்கும். இங்குச் சுண்டெலிகள் நிலையில்லாமலிருப்பது, உட்காதுக் கோளாறால் ஏற்பட்டது. இந்தக் கோளாறு பிறவியிலேயே வந்தது—(மொ-ர்). ஒரே நிலையில்லாச் சுண்டெலிகள் உட்குழு மணமுறையைப் பின்பற்றி வருவதால் இந்த நிலை ஏற்பட்டது. ஒரே மாதிரியான இரட்டையர்களில் எப்படி ஒருவர் திசுவுக்கும், மற்றவர் திசுவுக்கும் ஒற்றுமை உண்டோ, அதுபோலத்தான் ஒரு மிருகத் திசுவிற்கும், மற்றொரு மிருகத் திசுவிற்கும் மரபியலான ஒரே சீரான தன்மையே இடம் மாற்றி அமைக்கப்படும் புற்றுநோய்க் கட்டிகளின் இரகசியம் ஆகும்.

சிலவகையான புற்றுநோய் ஆராய்ச்சியில், இடம் பெயர்த்து அமைக்கப்படும் புற்றுநோய்க் கட்டிகளுக்கு விசேஷ முக்கியத்துவம் உண்டு. பரீக்ஷார்த்தமாக, மெடாஸ்டேசுகள் பரவிய தன்மையையும், விகிதத்தையும் தூண்டுகிற சில காரணங்களை விளக்க, மெடாஸ்டேசுகளின் தனிப்பட்ட சிறப்புக் குணங்களை உபயோகப்படுத்தலாம். 'பிரவுன்-பியர்ஸ் முயல்' கட்டிகளிலிருந்து, மெடாஸ்டேசுகள், அட்ரீனலிலும், சிறுநீரகங்களிலும், கண்களிலும் உண்டாவதாகவும், மிகவும் குறைந்த அளவில் கல்லீரலிலும் நுரையீரலிலும் உண்டாவதாகவும் போல்ட்ஸ கண்டார். கட்டிகளின் செல்களை சிரைக்குள் செலுத்தினால், இதே மாதிரியாகப் பரவிய புற்றுநோய் வளர்ச்சிகள் உண்டாயின. எனினும், இதற்கு முன்பாகவே, உயிருள்ள திசுக்களுக்கு நிறம் கொடுக்கின்ற சாயமான டிரைபான் நீலத்தை ஊசி மூலம் மிருகங்களுக்குச் செலுத்தினால் மண்ணீரலிலும், கல்லீரலிலும், நுரை

விரல்களிலும் மெடாசடேசுகள் உண்டாயின. மெடாச்டேசுகளைப் பற்றிய எந்த விவரமும் உபயோகமுள்ளதே. நோயாளி சிகிச்சையால் குணமடைவது கட்டிகளின் பொதுப்படையாகப் பரவும் தன்மையைப் பொறுத்திருக்கிறது.

புற்றுநோய் சிகிச்சைக்குப் பயன்படுவதாகக் கூறப்படும் மருந்துகளைப் பரிசோதிக்கவும், கட்டிகளின் வளர்ச்சியைத் தூண்டுகிற காரணங்களைப்பற்றி ஆராயவும், இடம் மாற்றி அமைக்கப்படும் கட்டிகளும், தாமாகவே உண்டாகிற கட்டிகளும் நல்ல வாய்ப்புகளை அளிக்கின்றன. கடந்த காலத்தில் புற்றுநோயின் வேதியியல் சிகிச்சைபற்றி உபயோகமற்ற கட்டுரைகள் பல வெளிவந்திருக்கின்றன. செய்யப்பட்ட பரிசோதனைகள் போதிய அளவு ஒப்பிட்டுப் பார்க்கப்படவில்லை. சிகிச்சை செய்யப்படாத கட்டிகளின் நடத்தையில் தானாகவே நிகழ்ந்த பலதரப்பட்ட வேறுபாடுகளைப்பற்றிக் கவனம் செலுத்தப்படவில்லை. மிருகங்களின் பொதுத் தேகநலம், வயது, போஷாக்குத் தன்மை இவைகளுக்குப் போதுமான முக்கியத்துவம் கொடுக்கப்படவில்லை, அல்லது பரிசோதனைக்காகக் கையாளப்பட்ட கழலையின் வளர்ச்சி விகிதம் வேறுபாடு அடைந்தாலும், தானாகவே மறையும் தன்மை கொண்டிருந்தாலும் அந்தக் கழலை பரிசோதனைக்குத் தகுதி வாய்ந்ததாக இல்லை. கலப்பற்ற இனத்தைச் சேர்ந்த ஒம்புயிர் மிருகங்கள் உபயோகப்பட வேண்டும் எனவும், ஒம்புயிருக்கு ஒத்துக்கொள்ளக்கூடியதும், அதன் நடத்தையைப்பற்றி நன்கு தெரிந்ததுமான அத்தகைய இடம் மாற்றி அமைக்கப்படும் கட்டிகளை பரிசோதனைக்கு எடுத்துக்கொள்ளவேண்டும் என்பதும், நாம் ஏற்கெனவே கூறியதிலிருந்து தெளிவாகும். இத்தகைய சூழ்நிலைகளில் கிடைக்கும் ஆராய்ச்சி முடிவுகள் மிகவும் உபயோகமாக இருக்கும். ஆனால், நேரடி ஆதாரம் இல்லாதபோது, மற்றக் கட்டிகளின் சிகிச்சைக்கு இவைகளை உபயோகிப்பது அவ்வளவு விவேகமன்று.

8 ஆம் அத்தியாயத்தில் கட்டிகளின் வேதியியல் சிகிச்சைபற்றிய ஆராய்ச்சியின் முன்னேற்றத்தை நாம் விவாதிப்போம். தனியான சிறப்பு உணவு வகைகள், ஹார்மோன்கள், வைடமின்கள், திசுவிலிருந்தும் சிறுநீரிலிருந்தும் எடுக்கப்பட்ட வடிநீர்கள், பாக்டீரியாப் பொருள்கள் போன்றவைகள் புற்றுநோய் சிகிச்சையில் நல்ல பலனை அளிக்கின்றன என்று பறைசாற்றுவது போதிய அத்தாட்சி இல்லாமல் சொல்லப்படுகிறது என்றும், அது அவ்விதம் கூறுபவர்களின் பகுத்தறிவற்ற தன்மையைக் காட்டுகிறது என்றும் நமக்குத் தோன்றுகிறது. அவ்விதம் பறைசாற்றுபவர்கள் போலி அறிஞர்களாக இருக்கவேண்டும் அல்லது மன மயக்கத்தின் அடிமைகளாக இருக்கவேண்டும்.

ஒரு சிகிச்சைமுறை தாறுமாறாக மனிதப் புற்றுநோய்க்கு உபயோகிக்கப்படு முன்னர் அல்லது ஞாயிற்றுக்கிழமை பத்திரிகையாளர்களுக்குத் தெரிவிக்கப்படு முன்னர் அந்த சிகிச்சைமுறை போதிய அளவில் புற்றுநோய்க் கட்டிகள் கொண்ட விலங்குமீது உபயோகிக்கப்பட்டிருக்க வேண்டும்.

இடம் மாற்றி அமைக்கப்படக்கூடிய கட்டிகளுக்கு ஓம்புயிர்களாக எலிகளையோ, சுண்டெலிகளையோ உபயோகிப்பதைப்பற்றி இந்த அத்தியாயத்தில் நாம் குறிப்பிட்டு இருக்கிறோம். திட்டமிட்ட முறையில் புற்றுநோய ஆராய்ச்சி செய்யப்பட்ட சென்ற பல ஆண்டுகளாக இத்தகைய ஆயிரக்கணக்கான மிருகங்கள் வளர்க்கப்பட்டு, பரிசோதிக்கப்பட்டு, ஆராய்ச்சி செய்யப்பட்டு இறந்துபட்டிருக்கின்றன. இன்று நாம ஓரளவிற்குத் தெரிந்துகொண்டிருக்கும் புற்றுநோய்பற்றிய ஆராய்ச்சி அறிவு அவைகளின் உதவியின்றி இவ்வளவு தூரம் வளர்ந்திருக்க முடியாது என நாம கூறினால அது மிகையாகாது. ஆராய்ச்சிக்காக உயிருள்ள மிருகங்களைப் பயன்படுத்துவதை எதிர்த்து வருத்தம் தெரிவிக்கும் அந்தப் பெரியோர்கள், தங்கள உயிர்களுக்கு மாத்திரமல்ல, தங்களது அக்கம்பக்கத்திலுள்ளவர்களின் உயிர்களுக்குப் புற்றுநோயால் ஏற்படப்போகும விளைவுகளை ஏற்றுக்கொள்ளத் தயாராக இருக்கவேண்டும்.

இரக்கப் பார்வை கொண்ட ஸ்பேனியல்களும, நாய்களும், பஞ்சு போன்ற பூனைக் குட்டிகளும உயிர் அறுவை எதிர்ப்புச் சுவரொட்டிகளுக்கு அழகு தரலாம். ஆனால், புற்றுநோய்ஆராய்ச்சியின் மிருகச்சாலைகளில் அவ்வளவு அழகு தரவில்லை. ஒருவேளை எலிகளும் சுண்டெலிகளும, நாய்களையும பூனைகளையும போன்று நமது இரக்க உணர்வைத் தூண்ட முடியாது என்பதனாலோ!

பொதுமக்களின சரியான மனச்சாட்சியைப் பாதுகாக்க ஒரு உள்துறை தணிக்கைக் குழு இருக்கும்போது, வேறு எந்த வழியில ஆராய்ச்சி செய்யப்பட வேண்டும எனச் சொல்லவேண்டிய பொறுப்பு, உயிர் அறுவை எதிர்ப்பாளர்களிடம் நிச்சயமாக இருக்கிறது.

6. புற்றுநோயின் காரணங்கள்

பல வகையான இரசாயன, பௌதிக, உயிரின சாதனங்கள் எவ்விதம் ஓர் உயிரினத்தின் ஆரோககியமான செல்கள்மீது வினைபுரிந்து, அவைகளைப் புற்று நோய செல்களாக மாறறுகின்றன என்பதை விவரிக்க முயறசி செயயப்பட்ட தததுவஙகளையும, நடைமுறைக கோட்பாடுகளையும்பற்றி இந்த அததியாயத்தில் கவனிபபோம. நாம இவைகளைக காரணஙகள் என்று குறிபபிட்டோமே தவிரக் காரணம எனக குறிபபிடவிலலை ஏனெனில், நமககுத தெரிநதவரை இந்த எல்லாச சாதனஙகளும இறுதி விளைவை அடைய ஒரே வழியில் பணிபுரிகின்றன என நம்ப இடமில்லை.

புற்றுநோய் உண்டாக்கும் இரசாயன முறைகள்

விலஙகுகளின்மீது அவைகள் ஆற்றும் செயலால் கணடுபிடிககப்படும் இரசாயனப் புற்றுநோய்க காரணிகள், ஒவவொரு வருடமும் புதிது புதிதாகக கணடுபிடிக்கப்படும் மனிதப புறறுநோயின புதிய கேசுகளில் சிலவற்றிறகே காரணமாகின்றன என்பதை நாம ஒப்புக்கொள்கிறோம. என்றாலும், மனிதனிலும மிருகததிலும புறறுநோய் உணடாககும பொதுவான காரணிகள சந்தேகததிறகு இடமின்றி உளளன. பரிசோதனை மிருகஙகளில், இரசாயனப பொருள இடப பட்ட இடததிலோ, அதன வளாசிதைமாறறம, சேமிபபு, அல்லது வெளியேறறம நடககும இடஙகளிலோ புறறுநோய்க கட்டி உணடாகலாம. அது உணடாகும் இடம முழுக்க முழுகக இரசாயனக் கூட்டுப பொருளின் தனமையைப பொறுததது. செலமீது நேரடித தாககுதலால் ஒருவேளை உணடாகலாம. ஓமபுயிருககு வெளியே, திசு வளர்சசிக கலவையின் செல்களில் புற்றுநோய் உணடாககப்படுவதால், மேற்கூறியவாறு கூறுவது சாததியமே. கொடூரமான புற்றுநோய மாறறம 'ஏதோ ஒரு தூரத்தில' இருககும் சாதனததால் உண்டாகிறது எனக கூறப்படும சிததாந்தஙகளின்மீது, இதன்மூலம் நமக்கு ஓா ஐயம் உணடா கிறது.

பல செல்கள்கொண்ட உயிரினத்தில் வெளியிலிருந்து நிர்ணயிககப்படும் ஹார்மோன், போஷாக்குப்போன்றவைகளால் செல் ஊக்குவிக்கப்படுகிறது.

ஆரோக்கியமான செல் புற்றுநோய் செல்லாக மாற்றப்படுவது எளிதாக இருக்குமா, அல்லது கடினமாக இருக்குமா என்பது அத்தகைய வழிகளால் நிர்ணயிக்கப்படுகின்றன. இவ்விதம் மாறும் அம்சங்களே இரசாயனப் புற்று நோய்க் காரணியின் திறமையை ஓரளவோ அல்லது முழுவதுமோ நிர்ணயிக் கலாம். அவைகள் சக்திவாய்ந்தனவாக இருந்தால், அவைகளே கட்டிகள் ஆரம்பிக்கப் போதுமானவையாக இருக்கலாம். மிருகங்களில் புற்றுநோய் உண்டாக்குவது எளிதான, ஒரே ஒரு முறையால் நிகழ்வதன்று. பல நிலைகள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றன. அந்த நிலைகள் எல்லாம் மனிதனில் இன்னும் கண்டுபிடிக்கப்படவில்லை.

புற்றுநோய்க் காரணிகள் செல்களின்மீது வினைபுரிந்து, உடனே கட்டிகளை உண்டாக்குவதில்லை. புற்றுநோய்க் காரணிகளால் பாதிக்கப்படும் காலத்திற்கும் கட்டி தோன்றும் காலத்திற்கும் இடையிலுள்ள காலத்தையே நாம் ‘மறைகாலம்’ என்கிறோம். காரணியின் இரசாயனத் தன்மை, உபயோகிக்கப்பட்ட அளவு, அதனால் பாதிக்கப்பட்ட திசு அல்லது உறுப்பு, விலங்கு இனத்தின் வகை இவை களைப் பொறுத்து அந்த ‘மறைகாலம்’ இருக்கிறது. பொதுவாகப் பேசுங்கால், புற்றுநோய்க் காரணி அதிக அளவில் இடப்பட்டால் விரைவிலேயே புற்றுநோயும் உருவாகிறது. ஆனால், ஓர் ஆரோக்கியமான செல், புற்றுநோய் செல்லாக மாற ஒரு குறிப்பிட்ட காலம் பிடிக்கிறது. எவ்வளவு அதிகமாக அந்தக் காரணி இடப் பட்டாலும், குறைந்தபட்ச அளவை ஒரு வரம்பிற்குக்கீழ்க் குறைக்கமுடியாது. இந்த ‘மறைகாலம்’ ஒவ்வொரு வேறுபட்ட சிறப்பினங்களின் ஆயுட்காலத்திற்கு ஒரு குறிப்பிட்ட விகிதத்தில் இருக்கிறது எனத் தெரிகிறது. இது பொதுவாக 10—15% ஆக இருக்கிறது. உதாரணமாக, புற்றுநோய் உண்டாக்கப் பிடிக்கும் காலம் சுண்டெலியில் 5 மாதங்களாகவும், எலிகளில் 8 மாதங்களாகவும், சீமைப் பெருச்சாளிகளில் 12 மாதங்களாகவும், நாய்களில் 2 வருடங்களாகவும், மனிதனில் 5-15 வருடங்களாகவும் இருக்கின்றன. இது செல்களின் இயற்கை யான வயதைப் பொறுத்ததன்று.

புற்றுநோய் உண்டாக்கும் ரசாயனக் காரணிகளால் வயது முதிர்ந்த மிருகங் களின் செல்கள் எந்த அளவில் பாதிக்கப்படுகின்றனவோ, அதே அளவில்தான் இளம்பிராய மிருகங்களின் செல்களும் பாதிக்கப்படுகின்றன. வயது ஏற்ற மனிதனின் புற்றுநோய் அதிகமாக உண்டாகும் ‘மனித’ சாதனங்களின் பலம் குறைந்த தன்மையையும், அளவில் குறைந்திருப்பதையும் காட்டுகிறது. ஏனெனில், மிருகப் பரிசோதனையிலும் புற்றுநோய்க் காரணி பலம் குறைந்திருந் தாலும் குறைந்த அளவில் இருந்தாலும், புற்றுநோய் வாழ்க்கையின் கடைசிக் காலத்திலேயே உண்டாகிறது.

புற்றுநோய் உண்டாக்கும் ரசாயனக் காரணிகளின் பொதுவான குணங்களைப் பற்றிக் குறிப்பிடும்போது, மற்றும் இருதன்மைகளைப்பற்றியும் நாம் கூறவேண்டும். முதலாவதாக, புற்றுநோய் உண்டாக்கும் பெரும்பான்மையான சாதனங்கள்

(கதிரவீசகப்போனற புறறுநோய் உண்டாக்கும் பௌதிக சாதனஙகள் உட்பட) தனிசசிறபபுவாயந்தவை அலல. எலும்பு சாாகோமோ, மறற சாாகோமாககள், தசைசெல் கட்டிகள, லியூகிமியாககள், இரைப்பை, குடல், நுரையீரல, சருமம், ப்ராஸ்டேட், மூளைபோனற பல உறுப்புகளின புற்றுநோய்க கட்டிகள், பரிசோதனை மிருகஙகளில பாலிசைகளிக நீரகக கரிப்பொருளகளால் உண்டாககபபடு கின்றன. இநதக கூட்டுப் பொருள்கள உடலின திரவஙகளில் கரையாதவை. எங்கு இடபபடுகிறதோ அஙகு நிலையாகத தஙகிவிடுகின்றன. புகுததப்பட்ட இடததில் புறறுநோய உணடாககும் தனமைகொணடவை எனறு சொலலப்படு கின்றன. வாசனைகொணட ரசாயன அமைன்களைபபோன்ற மற்றப புறறுநோயக காரணிகளை ஓா உயிரினம் சேமிதது அல்லது வளாசிதை மாற்றம அடையசசெய்து வெளியேறறுமபோது, அவை உடலினுள எடுததுச செல்லப்படுகினறன. உதாரணமாக, β நாபதலமைன் நாய்களிலும மனிதனிலும் சிறுநீர்ப் பாதையில புற்றுநோய் உண்டாக்குகின்றன. சிறுநீரில உள்ள β நாப்தலமைனின் கழிவுப் பொருள புறறுநோயக காரணியன்று. ஆனால,மறறொரு நொதியின் உதவியால் அது சிறுநீரபபையில் புறறுநோய் உண்டாக்கும் சாதனமாக மாற்றப்படுகிறது எனபதற் கான ஆதாரஙகள உள்ளன.

புறறுநோய் உணடாககும் கூட்டுப் பொருள்களில சிலபல இடஙகளில புற்றுநோயக கட்டிகளை உணடாககுகின்றன. கலலீரலிலும், ஒலிசார்நத நாளத் திலும, தைராய்டிலும, இரதத செலகளிலும, மூளையிலும, சிறுநீர்ப்பையிலும, இரைபபையிலும, எலிகளின்—சுணடெலிகளின் கர்பபபையிலும 2-அசிடைல் அமைனோ புளோரின் கட்டிகளை உணடாக்குகினறன.

இரணடாவது அம்சம் எனனவெள்றால, புற்றுநோய்க காரணியின புற்று நோய் உண்டாககும தன்மையைப் புறறுநோய்க காரணி அல்லாத ஒரு சாதனம, அதன உடனிருபபதால அதை ஊககுவிககலாம் என்பதே. இநதப் பலனைத தான 'புறறுநோய உணடாககும இணைததன்மை' என்கிறோம. புறறுநோயக காரணிகள நோயூககும தேவைகளுககுக குறைநத அளவில இருந்தாலும, புற்று நோய் இணைககாரணிகள் அதன பணியை ஊககுவிககவோ, முழுமையாக்கவோ முடியும.

இந்த அம்சங்களின் முக்கியத்துவத்தை மிகைப்படுத்திவிடககூடாது. நுரையீரல் புற்றுநோய்க்கும புகைபிடித்தலுககும் உள்ள தொடர்பைப்பற்றிய பிரசசினைகளுககு முடிவுகாண்பது, பலவீனமான புறறுநோய்க் காரணிகள், புறறுநோய இணைககாரணிகள் இவைகளின் பரஸ்பர பணியைப்பற்றி அதிகமாகத் தெரிந்துகொளவதில் இருககிறது.

புற்றுநோய்க் காரணிகள் செல்களுக்கு நஞ்சானவை. இவைகளின் அடர்ந்த செறிவுடன் செல்கள் தொடர்புகொள்ளுமபோது அவை கொலலப்படுகின்றன அல்லது நிரந்தரமாக ஊனம் அடைகின்றன. ஆரோககியநிலை கொணட அல்லது

கொடூரப் புற்றுநோய்த் தன்மை கொண்ட வாரிசுகள் அந்த செல்களுக்கு இருக்கமுடியாது என்பது தெளிவு. பிரதானமாகச சேதமடைந்த கேந்திரங் களுக்கு அப்பால் — அதாவது, புற்றுநோய்க் காரணிகளைப் புகுத்திய இடத்தி லிருந்து வெகு தொலைவில் — அல்லது புதிய செல்களைத் தோற்றுவிக்கவோ, சீரமைக்கவோ வேணடிப் பகுப்படையும ஓரளவு சேதமுறற செலகளின் பின் சந்ததிகளில் நியோ பிளாஸ்டிக் மாற்றங்கள் ஏறபட்டுக் கட்டிகள் தோன்று கின்றன.

'தகுந்த அளவு சேதம' பற்றிய இந்தக் கருத்து மிகவும முக்கியமான ஒன்றாகும். தாமாகவே உண்டாகும் கட்டிகள மாற்றமடைந்த திசுககளின் 'வெளிகளில்' தோன்றுகின்றன எனபது நோயககுறியியல வலலுநர்களின் அனுபவமாகும. இஙகு செலகள் வாழ்வு, சாவு இவற்றின எல்லா நிலைகளிலும காணபபடுகின்றன. உதாரணமாக, எலிகளின் கலலீரலில பரீடசாாததமாகப் புற்றுநோய் உணடாககுமபோது, புற்றுநோயக காரணிகளால திசு சேதம அடைவதைக தொடர்ந்து சீர்செய்யபபடும இடத்திலும, மறுவளாச்சி அடையும் இடத்திலும் கட்டிகள் உண்டாவதாகத தொனறுகின்றன.

பல காலமாகத 'தினவு' புற்றுநோய்க்குக் காரணமாகக கருதப்பட்டது. நீண்ட காலமாக இடைவிடாத தலையீட்டால் பாதிக்கப்பட்ட செல்கள இருககும் இடஙகளில் எல்லாம சில செல்கள் போதுமான அளவு சேதமடைந்து, ஓர் அசாதாரண நிலையை அடைந்தன. திசுவில் சுற்றுபபுறததிலுள்ள செலகளிடையே உள்ள சமநிலை குலைக்கப்பட்டு, ஒரு புதிய நிலை ஏறபட்டது. அஙஙனம பாதிக்கப் பட்ட செல்களினிடையே, உடலின் கட்டுப்படுத்தி ஒழுஙகமைககும தூணடல் களுக்கு மறுவினை புரியாத சில செல்களும இருககக்கூடும. சுயேச்சையான கொடூர வளாசசிக் கேந்திரங்களை அவை தோறறுவிககின்றன. அவை எநத செலகளிலிருந்து தோன்றினவோ, அவற்றைவிடத் துரிதமாகப் பகுப்படைகின்றன.

இவ்விதம் சமநிலையற்றதன்மை மற்ற வழிகளிலும உணடாகலாம. உதாரணம், உயிரினததின் ஹார்மோன் நிலையில் ஏற்படும் மாறுதல்கள. இவைகளைப்பற்றிப் பின்னர்க் கவனிப்போம். முழுவதும் கொல்லப்படாமலும, முழுவதும் தபபிககா மலும், போதிய அளவு பாதிக்கப்படட செலகளதாம கொடூரமான புற்றுநோய் நிலையை அடைகின்றன என்பது ஒரு முக்கியமான விஷயமாகும். இது ஓரளவு தான் விளககம் கொடுக்கிறது. இததகைய கொடூரமான மாற்றத்திற்கான விளக் கங்களைத் தரும் சில கோட்பாடுகளை நாம கவனிப்போம்.


இரசாயனப் புற்றுநோய்க் காரணிகள் செல்மட்டத்தில் வினைபுரிகின்றன. செல்களுக்குள் நிகழும் கூட்டுச் சேர்க்கை நிகழ்சசிகளில் தலையிடுகின்றன. செல் வளர்ச்சிக்கும் பகுப்பிற்கும் நேரடிப் பொறுப்பான கிரியைகளிலும ஒருவேளை தலையிடக்கூடும என்பது தெளிவு. புற்றுநோய்க் காரணிகள் எந்த செல் களுடன் இணைகினறனவோ, அநத செல்களின் பகுதிப் பொருள்களைத தனிமைப் படுத்தி ஆராய முயற்சிகள செய்யபபட்டுவருகின்றன.

புற்றுநோய் உண்டாகும் தன்மைக்கும், பாலிசைக்ளிக் நீரகக் கரிப்பொருள்களில் உண்டாகும் ரசாயன எதிர்வினைத் தன்மைக்கும் உள்ள தொடர்பைப்பற்றி நீண்ட நாளாகவே தெரியும். இந்தப் பொருள்கள் பௌதிக முறைப்படி அல்லாமல் இரசாயன முறைப்படி வினை புரிகின்றன என்பது தெரிகிறது. அதாவது, செல்களின் பகுதிகளுடன் நேரடியாக எதிர்வினை புரிகின்றன. இரசாயனக் கணக்கீட்டதின்படி கரையாத பெரிய மூலக்கூறுகள் வேலை செய்வது கடினமாகும். அவைகளில் சில புற்றுநோய் உண்டாகும்போது நேரடியாக செல்புரதங்களுடன் சேர்ந்து, செல்லில் ஒரு புதிய புரத வகையை உருவாக்குகிறது என்பதற்குப் போதிய சாட்சியம் இருக்கிறது. எனினும், இரசாயன முறைப்படி அதிக அளவில் எதிர்வினை புரியும் புதிய வகை இரசாயனப் புற்றுநோய்க் காரணிகளைப்பற்றிப் பெரிதும் ஆராய்ச்சி செய்யப்பட்டிருக்கின்றது.

இரண்டாவது உலக மகாயுத்தத்தின்போது, பகுப்படையும் செல்களின்மீது தனிப்பட்ட நாசவேலை புரியும் புதிய இரசாயன யுத்த சாதனங்களைப்பற்றிப் பல ஆராய்ச்சிகள் செய்யப்பட்டன. இந்தப் பிரிவின் முதல் பொருள் HN_2 என்பதாகும்.

$$CH_3-N\begin{cases}CH_2CH_2Cl\\CH_2CH_2Cl\end{cases}$$

வளர்ந்துகொண்டு பகுப்படையும் செல்களுக்கு எதிரான அவைகளின் செய்கைகளால், அந்தக் கூட்டுப் பொருள்களை லியூகிமியாபோன்ற மற்றக் கொடூர நோய்களுக்கு எதிராக உபயோகிக்க வாய்ப்புக் கிட்டியது. இத்தகைய மருந்துகளின் பொது நச்சுத்தன்மையைக் குறைத்துத் திறமையைக் கூட்டச் செய்யப்பட்ட முயற்சிகளின்போது, செஸ்டர் பியட்டி ஆராய்ச்சிக் கழகத்தில ராசும் அவரது சகாக்களும் HN_2-ன் அடிப்படை அமைப்புடன் கூடிய பலதரப்பட்ட வாசனை வினை பொருள்களைக் கண்டுபிடித்தனர்.



செல்பகுப்பை மட்டுப்படுத்தும் இந்த மூலக்கூறுகளின் திறன் அவைகளின் இரசாயன எதிர்வினைத் தன்மையைப் பொறுத்திருக்கிறது என்பது தெளிவாயிற்று. பகுப்படையும் செல்களின்மேல், நைட்ரஜன் மஸ்டர்டுகள் நேரடியாக வினைபுரிந்து, அவை குரோமோசோம்களைத் துண்டித்தல்போன்ற உட்கரு விகாரங்களைத் தோற்றுவிக்கின்றன. இவை அயனீகரணக் கதிர்வீச்சு (எக்ஸ்-ரேபோன்ற) வினையின் விளைவாக ஏற்படும் மாற்றங்களை மேலெழுந்தவாரியாக ஒத்திருக்கின்றன என்பதை விரிவான செல்லியல் ஆராய்ச்சிகள் காட்டுகின்றன.

அயனீகரணக் கதிர்வீச்சுகள் செல்களைச் சிதைப்பதுடன் புற்றுநோயையும் உருவாக்குவதால், செஸ்டர் பீயட்டி குழுவினர், பல நைட்ரஜன் மஸ்டர்டுகளின் புற்றுநோய் உண்டாக்கும் தன்மையைச் சோதித்தனர். இந்த மருந்துகளைத் தசை ஊசிமூலம் செலுத்தினால், சுண்டெலி, எலி, ஹேம்ஸ்டர்போன்றவைகளில் புற்று நோய்க் கட்டிகள் உண்டாகும்.

நைட்ரஜன் அணுவுடன் இணைக்கப்பட்ட இரண்டு பக்கவாட்டுச் சங்கிலிகளைச் சார்ந்தே இந்த உயிர் இயல் நடவடிக்கை இருந்தது என ஒரு சமயம் நம்பப் பட்டது. அவ்விதம் எதிர்வினைபுரியும் 'இருபிணி' மூலக்கூறு குரோமோ மின் பொருள்களையே குறுக்கிணைக்கும் தன்மை வாய்ந்தது எனவும் நம்பப்பட்டது. மருந்துகளால் சிகிச்சை செய்யப்பட்ட பகுப்படும் செல்களில் உள்ள குரோமோ சோமகளின் தோற்றத்திலிருந்து இந்த எண்ணம் உருவாகியது. ஒன்றுடன் ஒன்று ஒட்டிக்கொண்டு தனியாகப் பிரிவதற்குப் பதிலாக 'பாலங்கள்' அமைக்கும் தன்மை கொண்டிருந்தன. நைட்டிரஜன் மஸ்டர்டுகள் குரோமோசோமகளைக் குறுக்குவாட்டில் இணைத்தன என்று தோன்றியது. இந்தப் பொதுமைக்கு அநேக விதிவிலக்குகள் இருந்தமையால், இது செல்லின் விகாரங்களை விளக்கும் அளவிற்குக்கூட முழுமையான ஒரு விளக்கமாக இல்லை.

ஆனால், பஞ்சாலைத் தொழிலில் உபயோகிக்கப்படும் 'குறுக்கிணைக்கும்' இது, மற்றப் பொருள்களைப்பற்றிய ஆராய்ச்சிக்கு அடிகோலியது. டைஎபாக்சைட்கள், எதிலீன் அமைன்களபோன்ற இரசாயனத் தொகுதிகளும் நைட்டிரஜன் மஸ்டாடு களின் பொதுவான உயிரியல் குணங்களைக்கொண்டிருந்தன. இம்பீரியல் கெமிக்கல் தொழிற்சாலைகளில், வால்போலும் அவரது சகாக்களும் காணபித்த படி, அவைகளும் (டைஎபாக்ஸைட், எதிலீன் அமைன்கள்) புற்றுநோய் உண்டாக்கும் சக்தி வாய்ந்த சாதனங்களாகும்.

இந்த இரசாயனப் பொருள்கள் செல்லிலுள்ள ஏதோ ஒரு பொருளின்மீது எதிர்வினை புரிவதன்மூலம் அவைகளின் உயிர் இயல் விளைவுகளை உண்டாக்கு கின்றன என்று நினைப்பது இயல்பே. அவை ஒரே முறையில் பணியாற்றுகின்றன என்பதில் சந்தேகமே இல்லை. அவை குரோமோசோம விகாரங்களைத் தோற்று விக்கும் காரணத்தால், இந்த 'ஏதோ ஒரு பொருள்' மரபுப் பொருளின் ஓர் இரசாயனப் பகுதியுடன் அநேகமாக டிஆக்ஸிரைபோ நூக்ளியஸ் ஏ-டன (டி.என்.ஏ.) நேரடியாகத் தொடர்புகொண்டிருக்குமோ என்று கருத இடமுண்டு. டி என்.ஏ. உருவாக்கப்படும்போது, செல் பகுப்பின் இடையே உள்ள அமைதி நிலையில் மருந்துகள் கதிர்வீச்சுப்போன்று வினைபுரிவதாகத் தோன்றும். இந்த உருவாகும் நிகழ்ச்சியிலோ அல்லது குரோமோசோம எனப்படும் இந்த டி என்.ஏ. புரத இணைப்பிலோ நைட்ரஜன் மஸ்டர்டுகள் தலையிடுகின்றன எனத் தெரிகிறது. இந்த அனுமானத்தைப் பொறுத்தமட்டில் புற்றுநோய் உண்டாக்கப் 'போதிய சேதம்' என்ற தத்துவத்திற்கே மீண்டும் வருகிறோம். பெருத்த அளவில் டி.என்.ஏ. சேதமடைந்துள்ள செல்கள் மரணமடையும். போதிய அளவு சேதம

இல்லாவிட்டால் ஒரு பலனும் விளையாது. போதிய அளவு சேதம் ஏற்பட்டால், புற்றுநோய் உணடாக வழி இருககிறது.

இந்த அநுமானம நிரூபிககப்படவேணடும். ஆனுல், இரசாயனக் கணணேட்டத்தில் பார்ததால், உடலுககு வெளியே உயிருளள செலலின் பகுதி களாகிய புரதங்கள், நூகளியிக அமிலங்கள் இவைகளுடன் ரசாயன முறைபபடி அந்த மருநதுகள பிரதிவினை புரியமுடியும.

புற்றுநோய் உணடாககும பாலிசைகளிக் நீரகக் கரிபபொருளுககு ஓரளவு இரசாயன எதிர்வினை உணடெனறும, அதைவிட அதிகமாக நைடரஜன மஸ்டர்டு களுக்கு உணடென்றும் நாம் கணடிருககிறேம். எனினும, பலவீனமான சிலபோது இல்லவே இல்லாத இரசாயன வினைததிறனின — திசையில இரசாயனப் புறறு நோயூககிகளின பட்டியலை நீட்டிககொணடேபோகலாம.

நைலான், டெப்ளான, டேகரான், பாலிஎதிலின், பாலிஸடைரன், பாலி வினைல குளோரைடபோன்ற பல பிளாஸடிக பாலிமர் படலங்களை எலிகளின் தசைககுள் புகுத்தியதில் சாரகோமா உணடாகியிருக்கிறது. புகுததப்பட்ட முழுமையான படலததின் பரபபிறகு நேர்விகிததததில புறறுநோய் உணடாக்கும திறமை இருக்கிறது. ஏனெனில, துளைகள் உளள மெல்லிய படலததின் புறறு நோய உணடாககும் சக்தி மிகவும குறைந்ததே. செல் தொடர்பு தததுவம (சாதாரணமாக ஒனறோடொனறு ஒட்டியிருககும செல்களைச செயறகை முறையில் பிரிததால், கொடூரமான புறறுநோய் மாறறஙகள நிகழலாம), செல் போஷாககு ஆகிய இரணடு தததுவஙகளைப்பறறி நிறைய ஆராயவேண்டியிருககிறது. மெலலிய படலங்கள் செல்களுக்கான போதிய போஷாககைத தடைசெய்கின்றன.

பாதிக்கப்பட்ட செல்களில் நிகழும் ஆரம்ப இரசாயன மாற்றஙகளைப்பற்றித தெரிநதுகொளவதிலேயே இரசாயனப புறறுநோய்க காரணிகளைப்பற்றிய தறகால ஆராய்சசி நடைபெறறுவருகிறது. ஒரு நிலையில புறறுநோயாக மாறககூடிய செலகள, வளர்ச்சி, தனி வேறுபாடு இவைகளைக கட்டுப்படுததும தன்மைகளை மீறுகினறன. இநத நிகழ்சசிகள் செலகளுக்குள் நடநதாலும ஹாரமோன்கள் மூலம நடந்தாலும, இதறகு முனனதாக ஓர் இரசாயன வினை நிகழவேண்டும். புறறுநோய்க காரணி ஒரு பாலிசைக்ளிக நீரககரிப் பொருளாகவோ, அல்லது 4-டைமீதைலஅமைனேஅசோபென்சின என்ற சாயப்பொருளாகவோ (இது, இதைச சாபபிடும எலிகளில கலலீரல் கட்டிகளை உண்டாக்குகிறது) இருந்தால், ஒரு புதிய இரசாயன அமைப்புப் புரதம—புற்றுநோய்க காரணிக் கூட்டமைப்பு— செலலின அதன் ஆரம்ப நிலையில தோன்றுகிறது எனத தெரிகிறது. நைட்ரஜன் மஸ்டாடுகள குரோமோசோம்களின் டி.என்.ஏ.மீது நேரடியாக வினைபுரிந்து செலலில் மரபுவழிப்பட்ட ஒரு நைவை உண்டாக்குகிறது என்பதறகுப் போதிய அத்தாட்சி இருககிறது.

சில புற்றுநோய்க் காரணிகளுக்குத் திருப்திகரமான இரசாயனக் கோட்பாடு இன்னும் கொடுக்கப்படவில்லை. உதாரணமாக, மெதியோனின் எனப்படும் இயற்கையில் கிடைக்கும் அமைனோ அமிலத்தைப்போன்ற எதியோனின் என்ற பொருளையோ, செனசியோவிலிருந்து கிடைக்கும் அல்காலாய்டுகளையோ உணவாகக் கொடுப்பதன்மூலமோ அல்லது டேனிக் அமிலத்தின்மூலமோ விலங்குகளின் கல்லீரல்களில் புற்றுநோய் உண்டாகிறது. தைராய்டு வீக்கத்தைக் கண்டுபிடிக்கும் முறையாகக் குறைந்த அளவு அயோடினை உணவில் கொடுத்தாலோ அல்லது தைராய்டு வீக்கம் உண்டாக்கும் புரோபைல்தையோயூரசில் என்ற மருந்தைக் கொடுப்பதாலோ தைராய்டு கட்டிகள் உண்டாகக்கப்படலாம். யூரதேன் என்ற ஓர் எளிய இரசாயனப் பொருளால் சுண்டெலிகளில் நுரையீரல் அடினோமா உண்டாக்கப்படலாம். இது கொடூரமான புற்றுநோய் அன்று எனவும், இதைவிட எளிய அமைப்புக்கொண்ட தையோயூரியாவால் சருமப் புற்றுநோய் உண்டாகலாம் எனவும் நாம் ஏற்கெனவே கண்டோம்.

இத்தகைய உண்மைகளின் மத்தியில் புற்றுநோய்க் காரணிகள் பற்றிய முழுவதுமான ஓர் இரசாயனக் கோட்பாட்டை முன்வைப்பது மிகவும் சிரமமாகும்.


கதிர்வீச்சுமூலம் புற்றுநோய் உண்டாவது

மிருக, மனிதப் பரிசோதனைகள்மூலம் கண்ட ஆராய்ச்சியின்படி, அயனீகரணக் கதிர்வீச்சும் அயனீகரண மற்றக் கதிர்வீச்சும் புற்றுநோய் உண்டாக்கும் என்பது பல காலமாக நமக்குத் தெரியும். ஆனால், இரசாயனப் புற்றுநோய்க் காரணிகளைப் போன்றே இவையும் எங்ஙனம் புற்றுநோய் உண்டாக்குகின்றன என்பது தெரியவில்லை.

முதன்மையான மரபுப் பொருள்களாகிய டி.என்.ஏ.-க்கும் புரதங்களுக்கும் கதிர்வீச்சு இரசாயன சேதத்தை உண்டாக்குகிறது என்பது பரிசோதனைகள் மூலம் பல நாட்களாகத் தெரிந்த ஒன்று. செல்லின் மற்றப் பகுதிகளிலும் மாற்றங்கள் உண்டாகின்றன என்பதும் இப்போது தெளிவாயிற்று. குறைந்த அளவுக் கதிர்வீச்சால், சில என்ஸைம் அமைப்புகள் குலைக்கப்படுகின்றன. செல்லின் சைடோபிளாஸ அமைப்பில் உள்ள பல அமைப்புகளுக்குச் சேதம் உண்டாவதால் இது நிகழலாம். இதுபோன்ற இன்னும் பல திடீர் நிகழ்ச்சிகளும் நடைபெறுகின்றன. பைகோமைசீசின் ஸ்பொரான்ஜியோ காம்பு நீள்வதை எக்ஸ்-கதிரின் 0·0005 ராண்ட்ஜன் போன்ற குறைந்த அளவு தடைசெய்ய முடியும் என பாஸ்பாக கண்டுபிடித்திருக்கிறார். 1·0 ராண்ட்ஜன் அளவால் அதிக விளைவு ஏற்படும் கதிர்வீச்சை நிறுத்திவிட்டால், நீள்வதும் தடைசெய்யப்படுவதும் நின்றுவிடுகின்றன. மற்றொரு பக்கத்தில் மங்க் மொச்சைக்கொட்டையின் இளஞ் செடிகளின் வளர்ச்சியை எக்ஸ்-கதிர்களின் குறைந்த அளவால் ஒன்று இரண்டு நாட்களுக்குத் தடைசெய்யமுடியும் என 1956-ல் கார்டன் கண்டார். கதிர்வீச்சால் பாதிக்கப்பட்ட செடியிலுள்ள ஆக்ஸின் என்ற வளர்ச்சிப் பொருள் குறைந்ததால் இந்த விளைவு ஏற்பட்டது. இதன் முன்பொருளாகிய டிரப்டோபானிலிருந்து



1 (a) ஓர் எலியின் கணையத்திலிருந்து எடுக்கப்பட்ட ஒரு செல்லின் தோற்றம் —எலக்ட்ரான் உருப்பெருக்கிமூலம். இதில் செல் படலம், உட்கரு, மைடோகாண்ட்ரியா, சைடோபிளாசத்தில் மடிப்புக்கொண்ட படலங்களின் சிக்கலான அமைப்பு, எண்டோபிளாஸ்மிக் வலை ஆகியவை தெரிகின்றன. (அளவு கோடு: $1\mu = 0.001$ மி.மீ.)




(b) மேலே சதுரமாகக் குறியிடப்பட்டுக் காட்டப்பட்ட பகுதியின் பெரிதான தோற்றம். சைடோபிளாசத்தில் புரதம் உருவாக்கப் பொறுப்பான ரைபோநூக்ளியோப் புரதத் துகள்கள் (ரைபோசோம்கள்), படலங்களின்மீது சிறிய கருமையான புள்ளிகளாகத் தெரிகின்றன. புரதம் சுரக்கும் ஓர் உறுப்புக் கணையம். ஆகவே, அதன் செல்களில் நன்கு உருவான எண்டோபிளாஸ்மிக் வலை இருக்கின்றது. (அளவு கோடு : 0.0005 மி.மீ.)




2 (a) மனிதக் கரு செல்லின் சைடோபிளாசத்தின் ஒரு பகுதி. இவைதாம் மைடோகாண்ட்ரியா எனப்படுபவை. முப்பரிமாணத்தில், மைடோகாண்ட்ரியா, வெள்ளரிக்காய்போன்ற அமைப்புக் கொண்டவை. (அளவு கோடு : 0.0005 மி.மீ.)




(b) பகுப்படையும் மனிதக் கரு செல்லின் பகுதி—எலக்ட்ரான் உருப் பெருக்கிமூலம். சென்ட்ரோசோமை ஊடுருவி இந்தப் பகுதி எடுக்கப்பட்டது (அம்புக்குறி காண்க). இதிலிருந்து ஸ்பிண்டில் இழைநார்கள் அலை அலையாக வெளிவருவதைக் காணலாம். குரோமோசோம்களின் இரண்டு பகுதிகளைப் பகுபடும் செல்லிலிருந்து வெளியே இழுக்கும் ஸ்பிண்டில் இழைநார்கள், மெல்லிய சுவர்களையுடைய சிறு குழாய்களாகத் தெரிகின்றன. (அளவு கோடு : 0.001 மி.மீ.)




3 (a) எலக்ட்ரான் உருப்பெருக்கியின்மூலம் தெரியும் மனிதப் புற்றுநோய் செல்லின் ஒரு பகுதி. கோடிட்டுக் காட்டப்பட்ட பகுதிக்கு இணையாக, நூக்ளியப் படலம் கூறுபோடப்பட்டுக் காட்டப்பட்டிருக்கிறது.(அளவு கோடு : 0.001 மி.மீ.)




(b) உள்ளே கோடிட்டுக் காட்டப்பட்ட அதே படத்தின் பெரிதான தோற்றம். நூக்ளியஸ் துளைகள் நன்கு தெரிகின்றன. (அளவு கோடு : 0.001 மி.மீ.)




4 (a) ஆரோக்கியமான சுண்டெலியினுடைய கல்லீரற் பகுதியின் நுண்படம். (×230.)



(b) ஆரோக்கியமான சிறுநீரகத்துப் பகுதியின் நுண்படம். (×210.)




5 (a) சுண்டெலிப் புற்றுநோய்க் கட்டியின் ஒரு பகுதி. செல் பகுப்பின் பல நிலைகளைக் காணலாம். (×450.)




(b) தைராய்டு சுரப்பியின் சாதாரண அடினோமா. கோளவடிவில் சுற்றியிருக்கும் மற்றத் திசுக்களிலிருந்து நன்கு பிரிக்கப்பட்டு, அதிலிருந்து ஒரு நார் வெளியுறையால் பிரிக்கப்பட்டிருக்கிறது. (பீரியாடிக் ஆசிட்ஷிப் ட்ரை குரோம் ×4.)







6 (a) முலைப்புற்றுநோய்க் கட்டி. ஒழுங்கற்ற வடிவத்தில் இருக்கிறது. சுற்றியிருக்கும் ஆரோக்கியமான திசுவை, ஒரு கட்டி செல்களின் தொகுதி ஊடுருவுகின்றது. வெளியுறை இல்லை. (ஹெமாடாக்ஸிலினும் இயோசினும் ×3.) (b) முன்னர்க் காட்டிய அதே படம். வெளிப்புறத்திலுள்ள ஸ்குவாமஸ் எபிதிலியத்தைப் புற்றுநோய் செல்கள் ஊடுருவுகின்றன. (ஹெமாடாக்ஸிலினும் இயோசினும் ×75.)






(c) (a), (b)-ல் காட்டிய அதே படம்; முலைப் புற்றுநோயின் மிகப் பெரிய செல்களில் பல தொகுதிகள் இருக்கின்றன. இந்த செல்களின் அளவிலும் உட்கரு அமைப்பிலுமிருந்தும், ஆரோக்கியமான முலை எபிதீலியம் பெரிதும் மாறுபட்டிருக்கின்றது. (ஹெமாடாக்ஸிலினும் இயோசினும் ×70.) (d) முலையின் புற்றுநோய். (a), (b), (c)-ல் காட்டப்பட்ட கோசிலிருந்து எடுக்கப்பட்ட அக்குள் நிணநீர் முடிச்சு உள்நோக்கிச் செல்லும் நிணநீர் நாளங்களிலும் நிணநீர்த் திசுவிலும் புற்றுநோய் செல்களின் தொகுதிகள் இருக்கின்றன. (ஹெமாடாக்ஸிலினும் இயோசினும் ×70.)






7 (a) நுரையீரலில் பரவிய, ஹேம்ஸ்டர் சார்க்கோமாவின் ஒரு மெடாஸ்டேசின் நுண்படம். (×45.) (b) பால்மூலம் பரவிய காரணியால் தூண்டப்பட்ட சுண்டெலியின் முலைப்புற்றுநோய்களுடன் இணைந்த செல்லுக்கு வெளியேயுள்ள வைரஸ் துகள்கள். (அளவு கோடு : 0.0005 மி.மீ.)






(c) மில்ஹில் பாலியோமா வைரஸால் பாதிக்கப்பட்ட சுண்டெலிக் கரு செல்லின் ஒரு பகுதியின் நுண்படம். நூக்ளியஸில் (உட்கரு) பெரும் பகுதி ஒரேமாதிரியான வைரஸ் துகள்களால் நிரம்பியிருக்கின்றன. உட்கருப் படலம் வலப்புறமாகச் செல்லுகிறது. இடது ஒரே மூலையில் காணப்படும் ஓர் இருண்ட பகுதி நூக்ளியோலஸ் ஆகும். (d) (c)ஐப் போன்ற ஒரு நுண்படம். மில்ஹில் பாலியோமா வைரஸால் பாதிக்கப்பட்ட ஒரு சுண்டெலியின் உமிழ் நீர்ச் சுரப்பிப் புற்றுநோய்களிலிருந்து எடுக்கப்பட்டது. செல் நூக்ளியஸில் இருக்கும் துகள்கள், (c)-ல் காட்டப்பட்டவைகள் போன்று இருக்கின்றன. (அளவு கோடு : 0.0005 மி.மீ.)



8 (a) எதிர்மறை வேறுபாடு என்ற முறையால் தயாரிக்கப்பட்ட நான்கு தனித்தனியான வைரஸ் துகள்களின் தோற்றம். இந்த முறையின் சிறப்பு என்னவென்றால், துகள்களின் உள்ளமைப்பைத் தெளிவாகக் காட்ட முடியும். விட்டத்தில் உட்பகுதிகள், 6 m μ இருக்கும் வடிவ இயல் முறையில் ஒரே ஒழுங்கில் அமைக்கப் பட்டிருக்கின்றன. (அளவுகோடு : 0.0001 மி.மீ.)



(b) மேற்கூறியதுபோன்றே தயாரிக்கப்பட்ட ரௌசின் கோழிக்குஞ்சு சார்கோமாவின் வைரஸ். புற்றுநோய் உண்டாக்கும் இந்த வைரஸ், மில்ஹில் பாலியோமா வைரஸிலிருந்து மாறுபட்டது. ஒழுங்கற்ற, தெளிவில்லா வெளியுறையுடன், நன்கு வரையறுக்கப்பட்ட உள்ளுறை, மணல் வடிவம் கொண்ட மத்தியப் பகுதி கொண்டது. வைரசின் ரைபோநூக்ளியிக் அமிலம் மத்தியில் இடம் பெற்றிருக்கிறது.

ஆக்சின் உருவாவது பெருமளவு குறைந்ததால் இந்த வளர்ச்சித் தடை ஏற்பட்டது என்பதும் தெரிந்தது. டிரப்டோபான் ஆகஸிஜனுக மாறும இறுதிக் கட்டததிற்குத தேவையான நொதிகள் எகஸ்-கதிர்களால் ஒருவேளை அடககபபட்டிருக்கலாம்.

குரோமோசோமகளின் டி.என்.ஏ.-யின் முனபொருளகளை உற்பததி செய்யக் காரணமான நூகளியஸிலுள்ள (உட்கரு) நொதி அமைப்புகள் கதிர்வீசசுகளால் பெரிதும பாதிக்கபபடுகின்றன எனபதற்குப போதிய அததாட்சிகள் இருக் கின்றன. உடகருப் புரதங்களை உணடாககுவதற்குத தேவையான ஏ. டி. பி. (ATP)ஐ உணடாககும ஒரு நொதி அமைபபு செலலின உட்கருவில் இருககிறது. டி. என். ஏ. ஐயும் புரதததையும உணடாககும இரு அமைப்புகளின ஒரு சம நிலையைக கதிர்வீசசுகள் பாதிககின்றன என்பதற்குப் பின்னர் சாட்சியம் கிடைததது. இதன்மூலம் உட்கரு சேதம அடைகிறது.

கதிர்வீச்சுகளின் புற்றுநோய் உண்டாக்கும் தன்மையை, செல் உட் கருவின் மரபுவழிப் பொருளகளினமீது ஏற்படும் நேரடி விளைவுகள் என்ற கணணோட்டததிலமாததிரம நாம ஆராய்வது போதாது என்பது தெளிவு. உடல இயல அமைப்பு என்ற முறையில் செல்லில் கதிர்வீச்சுகளால ஏற்படும ஆரமப விளைவுகளைப்பறறிய போதுமான அறிவு நமக்குத் தேவை. இத்தகைய ஆராய்ச்சி இப்போதுதான் ஆரமபமாகியிருக்கிறது.

வைரஸ்களும் புற்றுநோயும்

கோழிககுஞ்சில் லூகோசிஸ எனப்படும் வைரஸால் உண்டாக்கப்பட்ட முதல் புறறுநோய் 1908-ல் எல்லாமனல் விவரிக்கப்பட்டது. இதைத தொடர்ந்து 1911-ல் வடிகட்டக்கூடிய ரூஸ் கோழிககுஞசின் சார்கோமா கணடுபிடிககப் பட்டது. இருபது ஆணடுகள் கழிந்து, முயலகளில் கரணைகள், சருமக் கழலைகள உண்டாககும வைரஸகளைப்பறறிய முடிவுகள் முதன் முதலாக 1932, 1933-ல் ஷோப் என்பவரால் தெரிவிககப்பட்டன. சிலவகைச சுணடெலிகளில் உணடாகும முலைககட்டிகளுககுக காரணமாகப் பால்மூலம் பரப்பப்படும ஒரு சாதனம் என, 1930 இறுதியில் பிட்னர் (1936) போன்ற பலா அமெரிக்காவில் கணடு பிடிததனா (புகைப்படம 7b). தவளையில் உணடாகும் சிறுநீரகப் புறறுநோய, மறறத தவளைகளுககு செல் இல்லாத வடிசாறறுல பரப்பமுடியும் என லியூக் (1938) விவரிததார்.

இந்தப புற்றுநோய்கள் மிகவும் ரசமிக்கவை; மிகவும தீவிரமான முறையில் ஆராயப்பட்டன. 1940-க்குள் சீரகெட்ட திசுககளில் வளரும சக்தி கொணட உருப்பெருக்கியாலும் பார்ககமுடியாத சில சாதனங்கள், பலவகையான மிருகங களில் கட்டிகளை உருவாககமுடியும் எனப் பெரும்பான்மையான நோயககுறியியல் வல்லுநர்கள் ஒப்புக்கொணடனர். மனிதனில் புறறுநோய் உண்டாவதில அந்த வைரஸ்களுக்கு எந்தவிதமான பஙகும் இருப்பதாக அத்தாட்சி எதுவும இல்லை.

உயிர் இயல் சம்பந்தமான விநதைப் பொருளகளாகவே அவைகளைக கருத வேண்டும். சில மிருகஙகளில புறறுநோயகளைப்பறறி இன்னும நனகு தெரிந்து கொள்வதறகு உபயோகமான கருவிகளாக இருககலாமே தவிர, மனிதனின் பிரசசினைகளுக்கு அவறறுல பலன் இலலை.

சென்ற 10 வருடஙகளாக நுணுககமுறையில பல முனனேற்றஙகள ஏற படடதால, வைரஸகளால ஏறபடுகினறன எனத தறபோது தெரியும மிருகப் புற்றுநோயகளின படடியல் வளாநதுகொணடேபோகிறது. இதனமூலம மனித வியாதியைப புதிய முறையில அணுகுவதும முன்னேறறமடைநதுளளது. இநத நுணுககமுறை முனனேறறஙகளாவன: புதிய வைரஸகளின் புறறுநோய் உணடாககும தனமையைப பரிசோதிகக பாதிபபினமை இயல்படி, இளமை யான, முதிராத மிருகஙகளை உபயோகிததது, வைரஸ்களைபபறறிய பொதுவான ஆராயசசிககுத் திசு வளாசசிக கலவை முறைகளின பஙகு; எலகடரான உருப் பெருககியில ஏறபட்ட முனனேறறஙகள. இதனமூலம பாதிககபபட்ட செல் களின மெலலிய பகுதிகளில வைரஸ துகளகளைப் பாாகக முடிவதோடல்லாமல், அவைகளை எணணவும முடிநதது. சமீபகாலததில அவைகளில சிலவறறின் துணை அமைப்பைப பெருமளவில் பெரிதாககிக காணபிககமுடிநதது; மனிதனில் இளமபிளளைவாதம, மிருகஙகளில் கால்-வாய வியாதி, தாவரஙகளில் புகை யிலைப பல்வணண வியாதிபோனறவற்றின புறறுநோய் ஊககும நுணுககமுறை களினமூலம இநத வைரஸகளை, இரசாயன முறைபபடி, எளிதாககக முடிநதது. இநதத் தாவரஙகளின புரதப பகுதிகளை அகறறிவிடடால், தஙகளது நூகளியிக அமிலஙகளின வினையால்மாததிரமே மறற செலகளைப பாதிககமுடியும்.

இததகைய புதிய நுணுககமுறைகள, வைரஸ்கள, ஆராயசசி சமபநதமான கண்டுபிடிப்புகளில் எவவளவு உதவியாக இருககினறன எனபதைப பாாபபோம்.

சுண்டெலிகளில் வைரஸ்கள் தோற்றுவித்த லியூகிமியா

குறைநத அளவில தானுகவே தோனறும் லியூகிமியாவால பாதிககப்படுகிற ஒருவகையான சுணடெலியில (C_3H) அநநோயை 1951-ல கிராஸ விவரிததாா. பெருமளவில தானுகவே லிமபாடிக லியூகிமியா உணடாகிற ஒருவகைச சுண டெலியின (AkR) லியூகிமியா திசுககளிலிருநது பெற்ற செல அகறறிய சாறறைப பிறநத மறுநாளே மிருகஙகளுககு (C_3H) ஊசிமூலம செலுததினுல் லியூகிமியா உணடாவதைக கணடாா. இளமிருகததினுள புறறுநோயின எலலா செல்களையும் செலுததிவிடககூடாது எனபதறகாக, திசுககளை நனருக அரைதது, வைரஸகளை விடப் பெரிதாக இருககும எலலாத துணடுகளும வடிகடடிமூலம் அகறறப் படடன. தாயப்பாலமூலம கடத்தப்படும சுணடெலி முலைபபுற்றுநோயின பிட்னரின் சாசனததைபபோல், இந்த லியூகியா சாதனமும இளமிருகங் களினுள் செலுததபபடவேணடும. ஆகவே, நீணட மறைகாலத்திற்குப்பின் கட்டிகள் தோன்றுகின்றன.

கிராஸால் தயார்செய்யப்பட்ட லியூகிமியா சாறுகள் வயதான பால்குடிக்கும் சுண்டெலிகளுக்குள் செலுத்தப்பட்டதில ஒழுங்கற்ற (ஒரேதன்மையில்லாத) முடிவுகள் கிட்டின. வயதுவந்த சுண்டெலிகளோ எதிர்ப்புசக்தி கொண்டிருந்தன. சுண்டெலியின் C57என்ற பிரிவு (தனி மரபைச சேர்ந்தது) உபயோகிக்கப்பட்டதால் லியூகிமியா மாத்திரமே உண்டாயிற்று. ஆனால், C_3H என்ற இனத்திற்குச செலுத்தப்பட்டதில் லியூகிமியாக்கள், பாரோடிட கட்டிகள், சார்கோமாக்கள் உட்பட மாறுபட்ட பலவகைக் கட்டிகள உருவாயின. AkR லியூகிமியாக்களின் பல சாறுகள் சக்தியற்றனவாக இருந்ததாலும இளஞ் சுண்டெலிகளை மிகவும் கட்டாயமாக உபயோகிக்கவேண்டியிருந்ததாலும், கிராஸின் ஆராய்ச்சியைத் திரும்பவும் செய்துகாட்டுவது சிரமமாக இருந்தது. சுண்டெலியின C_3H இனத்தில் 0·5%-ல்தான் 'தானாகவே லியூகிமியா நிகழ்ந்தது என கிராஸ் கூறினாலும், மற்றும பல பரிசோதனைச்சாலைகளில் 10%வரை இந்த நோய் உண்டானதை கிராஸின விமாசகர்கள சுட்டிககாட்டினாகள்.

புதிதாகப பிறந்த சுண்டெலிகளில் மீண்டும செலுத்தி, லியூகிமியா வைரசின் ஒரு சக்திவாய்ந்த இனத்தை கிராஸ் பின்னா உருவாக்கினா (கிராஸ 1957). மூலாதார வைரஸ எடுத்துக்கொண்ட நேரத்தில பாதி நேரத்திலேயே (2½—3½ மாதங்கள்) இந்த வைரஸ் லியூகிமியாவை உண்டாக்கியது. இது முப்படைந்த சுண்டெலிகளையும் பாதிக்கும சக்திகொண்டிருந்தது. (ஒன்றுமுதல் பதினான்கு நாட்கள் வயதான) இந்த லியூகிமியா வைரஸ இருபபது நிலைநாட்டப்பட்டாலும், ஒப்பிட்டுப்பாக்கும முறைக்கு உபயோகப்படுத்தப்பட்ட சுண்டெலி இனத்தின் முக்கியத்துவத்தை நாடிப் புறக்கணிக்க முடியாது. இளம, வயதடைந்த C_3H. சுண்டெலிகளுக்கு (0·5%-ல் தானாகவே லியூகிமியா நிகழும் இனம்) எக்ஸ-கதிர் வீச்சு செலுத்தப்பட்டால், இந்த விகிதம 50%ஆக உயர்ந்தது என கிராஸ (1958) பின்னர் கண்டார். மேலும், இந்தக் கட்டிகளின செல இல்லாத சாறுகளை இதே இனத்தைச சேர்ந்த புதிதாகப் பிறந்த சுண்டெலிகளுக்கு ஊசிமூலம செலுத்தியதில, லியூகிமியாவும பாராடிட் கட்டிகளும உண்டாயின. ஆரோக்கியமான C_3H சுண்டெலிகளின உறுப்புகளின செல இல்லாத சாறுகள்கூடப புற்று நோய் உண்டாக்கும் சக்திகொண்டவை என கிராஸ் கண்டார். பலதரப்பட்ட சுண்டெலிகள் மறைந்துகிடக்கும் வைரஸ்களை எடுத்துச் செல்கின்றன. பின்னா, போதிய 'தூண்டல்களுக்குப் பிறகு' அவைகள உண்டாக்கும் கட்டிகளிலிருந்து அவைகளை மீண்டும் பெறலாம என்பது தெளிவு.

'எஹர்லிச் கார்சினோமா' எனப்படும் லியூகிமியா அற்ற கட்டிகளிலிருந்து சுண்டெலிகளில் லியூகிமியா உண்டாக்கும் இரண்டாவது வகை வைரஸ்களைக் கண்டிருக்கின்றனர். எஹர்லிச் கட்டி செல்களின செல் இல்லாத சாற்றை இளம் பிராயத்தில செலுத்தியதில, 14 மாதம வயதுடைய சுவிஸ் சுண்டெலியின் மண்ணீரலிலிருந்து பிரெண்ட் (1957) என்பவரால இந்த வைரஸ் தனிமைப்படுத்தப்பட்டது. மிகவும் குறைந்த 'மறைகாலமான' இரண்டு வாரங்களுக்குள் இந்த வைரஸ வயதுவந்த சுவிஸ் சுண்டெலிகளில் லியூகிமியாவை உருவாக்குகிறது.

ஜெர்மனியில் கிராபியும் அவரது சகாக்களும (கிராபி 1957) ஆராய்ச்சி செய்த சுண்டெலி லியூகிமியா வைரஸ், பலதரப்பட்ட சுண்டெலி கார்சினோமாக் களிலிருந்தும சாாகோமாக்களிலிருந்தும பெறப்படும. கிராபி வைரஸுக்கும புதிதாகப பிறந்த சோதனை மிருகங்கள் தேவையாக இருந்தன. மேலும, நோய் உண்டாக ஏற்பட்ட 'மறைகாலம' 4 முதல் 10 மாதங்களாக இருந்தன. கிராஸ வைரஸும பிரண்ட வைரஸும சிறப்பாகச சுண்டெலிகளாலேயே நோய் ஊக்குவனவாக இருந்தாலும், புதிதாகப் பிறந்த எலிகளுக்கு, 'கிராபியின் வைரஸ்' மூளைமூலமாகச் செலுத்தப்பட்டதில், மார்புக்கூட்டின் உட்புறம் கட்டிகள் உண்டாயின.

(இளம் எலிகளுக்கு கிராஸ் வைரஸ செலுத்தப்பட்டால் லியூகிமியா உண் டாகிறது என கிராஸ் 1961-ல் கண்டார்.)

சுண்டெலிகள், லியூகிமியா உண்டாக்கும் வைரஸ்களை எடுத்துச செல்வ தோடல்லாமல் அதனுல பாதிக்கவும படுகின்றன என இந்த முடிவுகள் நிரூபிக் கின்றன. லியூகிமியா கொண்ட மனித நிணநீர் முடிச்சுகள, மூளை இவைகளின சாறுகள் சுண்டெலிகளுக்கு லியூகிமியா உண்டாக்கலாம் என்று கண்டவர்களின் ஆராய்ச்சியைப்பற்றிப பரிசீலிக்கும்போது இந்த உண்மையை நினைவில் கொள்ள வேண்டும்.

பாலியோமா வைரஸ்

பாலியோமா வைரஸ இருப்பது திசு வளர்ச்சிக் கலவை முறைகளால் நனகு தெரிந்தது. புற்றுநோய்-வைரஸ் பிரச்சினைக்கு இந்த முறை அளித்த பேருத விக்கு இது ஒரு நல்ல உதாரணம ஆகும. திசு வளர்ச்சிக கலவை முறை என்பது அதன் பெயருக்கேற்றாற்போல் ஓா உயிரினத்தின் செல்கள, அதன் உடலிலிருந்து வெளியே வளர்ந்து உயிருடன இருக்கும சூழ்நிலையில வைக்கப் படுவதாகும. அவற்றை முழுக்க வைக்க போஷாக்குக்கொண்ட ஒரு திரவத்தைக் கண்டுபிடிப்பது மிகவும அவசியமாகும. சோதனைச்சாலையில் அதற்கென உணவளிக்க இரத்தம் கொடுப்பது, இரத்த உஷ்ணமான 87° செல் வளர்ச்சிக் குழாய்களை வைத்திருப்பது, பாக்டீரியாக்கள், பூஞ்சைக காளான்கள அவை களால் தாக்கப்படாமல் பாதுகாப்பது மிகவும் அவசியம. இத்தகைய சூழ் நிலைகளில் பலதரப்பட்ட மிருக செலலின் வகைகள், குறிப்பாகக் கருமுதிரா செல்களும புற்றுநோய் செலகளும காலவரையின்றி உயிருடன வைக்க முடியும். அந்த போஷாக்குத திரவத்தில் இடப்பட்ட மருந்துகள், வைரஸ்கள் இவைகளின் பிரதிவினைகளை நன்கு ஆராயமுடியும்.

திசு வளர்ச்சிக் கலவை முறையுடன் தொடர்பு கொண்ட பிரசித்தமான காரல் என்பவர், இந்த முறையின்மூலம் கருமுதிராக் கோழிக்குஞ்சின் இருதய செல்களை

நீண்ட நாட்களுக்கு வைத்திருந்தார். இத்தகைய வளர்ச்சிக் கலவைகள் நாற்பது (40) வருடங்களுககு மேலாகக் காப்பாறறப்பட்டன.

எவைகளிலிருந்து வெளிவந்தனவோ அந்தக் கோழிக்குஞ்சுகளின் வாழ் நாளைக்காட்டிலும அதிக நாட்கள் வாழ்ந்தன. செல்கள் இருதயத தசை செல்கள் சுருஙகுவதைக் காண்பித்தன. அவை செழித்து வளாந்தன. அடிக்கடி இடை வேளைகளில வளாச்சிக் கலவை'யை உபபிரிவுகளாகப் பிரிககவேணடியிருநதது. ஹு—லா என்று சொல்லப்படும ஓர் அமெரிககப பெணமணியின புற்றுநோய்க் கட்டியிலிருந்து கிடைத்த மனித செலகள்தாம், காரெலின் கோழிக்குஞ்சு இரு தயத்திற்குச சமமானதாகும். ஹு லா செல் வளர்சசிக் கலவை இல்லாத ஒரு வைரஸ் பரிசோதனைச்சாலையே உலகில் இல்லை எனலாம்.

சுண்டெலி லியூகிமியாக்களின் செல் இல்லாத சாறுகளை, ஒரு நாள் வய துடைய C_3H சுணடெலிக்குள் செலுததினல் பரோடிட் சுரப்பியின் கடடிகள் உணடாகினறன எனபதை ஏற்கெனவே கிராஸ விவரிததுளளார். இத்தகைய பரோடிட சுரப்பிக கட்டிகளின துணடுகளை வளாசசிக கலவைகளுககுள்(குரஙகின் சிறுநீரக செல்களையும், கருமுதிராக் கோழிக்குஞ்சுகளின் முட்டைகளின் படலங களையும கொண்டவை) 1957-ல் ஸடுவாடும் அவரது சகாககளும் செலுத்தி ஞாகள. இததகைய வளாசசிக கலவைகளை அன்று பிறந்த சுண்டெலிகளுககுள ஊசிமூலம செலுததினர். புற்றுநோயக கட்டிகள் உணடான எல்லாச சுணடெலி களிலும பரோடிட் சுரப்பி சார்கோமாக்கள மாததிரம அலலாமல, தைமஸ், அட்ரினல் சுரப்பி, முலைபோன்றவைகளின் முதலநிலைக கட்டிகளும உணடாகின. C_3H சுணடெலியில இடமபெயர்தது அமைககபபடட லியூகிமியாவின் வளாசசிக் கலவையில் இடப்பட்ட செல இல்லாச சாறுகளும இதே பலனைத தநதன. சுண்டெலிகளில் லியூகிமியாககள் காணப்படவில்லை. இதைத் தொடர்ந்து, குரஙகு சிறுநீரக வளர்ச்சிக் கலவைகள் அகறறபபட்டு, சுணடெலிக கருக்களி லிருந்து செல்கள் இடப்பட்டன (ஸ்டூவர்ட் முதலியோர் 1958). இதைத் தொடர்ந்து, சுணடெலிககரு செல்களுடன வளர்நத சுணடெலிக கட்டிச சாறுகளி லிருந்து எடுககப்பட்ட வளாசசிக கலவைத திரவஙகளை அனறு பிறந்த ஹாம்ஸடருககுள செலுத்தினல் பல கட்டிகள் உருவாவதை எட்டியும, அவரது சகாக்களும (1958) கணடனர். புதிதாகப பிறநத எலிகளுக்குள இதே வைரஸைச செலுததியதிலும் கட்டிகள் உணடாயின (எட்டி முதலியோா 1958). முயலகளில முதலில் உணடான வைரஸ கொணட கழலைகள் பின்னர் கரைந்தன; இரத்த வடிநீரில் வைரஸ்களுக்கான எதிர்ப்பொருள்கள் தோன்றின (எட்டி முதலியோர் 1959).

இனச்சிறப்புத் தன்மை அற்றும், பல முதல்நிலைக் கட்டிகளை உருவாக்கும் தன்மை பெற்றும் இருப்பதால், இந்த வைரஸை 'எஸ். ஈ. (S. E.) பாலியோமா" என அழைததனர். மனிதப் புற்றுநோய்க்கு வைரஸும் ஒரு காரணம என்ற கொள்கைககு ஏற்பட்ட ஓர் இடைஞ்சலை இது தகர்த்தது. எத்தனை கட்டிகள்

உள்ளனவோ அதறகுக காரணமான அத்தனை வகை மாறுபட்ட வைரஸ்கள் இருத்கவேணடும எனறு அவசியமிலலை.

மக்குலோக் போனறவாகளால் (1959) வேறுவகையான தோற்றம்கொண்ட ஒரு பாலியோமா வைரஸும் விவரிக்கப்பட்டது. தானுகவே நிகழும் சுணடெலி மூலைககட்டியின் பிழிநீா உடன்கலந்த, சுணடெலிக கருசெலகள கொணட திசு வளர்சசிக் கலவையிலிருந்தும் இது கிடைததது. எஸ். ா. பாலியேமாவைப் போனறு, இந்த வைரஸ், சுண டெலிக கரு வளர்சசிக கலவைகளில செல் அறிவை உணடாக்கின. புதிதாகப் பிறநத சுணடெலிகளிலோ, ஹாம்ஸடர்களிலோ, இந்த வைரஸ் உட்செலுத்தப்பட்டதில் பல கட்டிகள் உண்டாயின.

நமக்குத் தெரிந்த பலதரப்பட்ட மனித, மிருக வைரஸகளுடன் இதறகு எந்தத் தொடர்பும இல்லை என எஸ். ஈ. பாலியோமா வைரஸகள்மீது செய்யப பட்ட பரிசோதனைகளமூலம தெரியவந்தது (ரோவ முதலியோா 1958). ஆரோக்கியமான அலலது கட்டிகள்கொணட ஆணகள், பெணகள் பலரின் இரதததததில் பாலியோமா வைரஸ உளளிருப்பதறகான ஓா அறிகுறியும இல்லை அனுல், சீமைப் பெருசசாளியின சிவபபு அணுககளை ஒட்டிககொளளச செய்யும, வைரஸின் சகதியை மட்டுப்படுததும எதிாப் பொருளகள் அமெரிக்காவின பல பரிசோதனைக் காலனிகளில சுணடெலிகளில் நிறைய காணப்பட்டன.

மில்ஹில்லிலுள்ள இமபீரியல் புற்றுநோய் ஆராய்ச்சிககுழுவின் என சகாக களான டாக்டாகள நெகரோனி, செஸடர்மான், டவாமேஸ்கின் ஆகியோர் லியூகிமியா கொண்ட ஏ. கே. (A K) சுணடெலித திசுககளிலிருந்து (1959) ஒரு பாலியோமா வைரஸைத தனிமைப்படுத்தினர். ஸ்டுவர்ட், அவரது சகாக் களாலும செய்யப்பட்ட வளர்சசிக கலவை முறைப்படியும வைரஸ தனிமைப் படுததப்பட்டது. நோயவாய்ப்பட்ட சுணடெலிக கருசெல்லின் நூக்ளியஸிறகுள முதனமுதலில் வைரஸ தெரிகிறது. இதற்குள வைரஸின் செல் அழிவுப் பணிககு செல் இரையாகிறது. நூகலியஸினுள் 30—40 μ அளவில் ஆயிரக்கணக கான துகள்கள் காணப்படுகினறன (புகைப்படம 7c). நூகளியஸ் படலம சிதைந்து இருக்கிறது; துகள்கள் சைடோபிளாசததிற்குள் வெளியிடப்படு கின்றன. சைடோபிளாசத துகளகளில் சில, ஒரு வெளிப்படலத்தை புதிதாகக் கொண்டு 60 μ அளவு மொதத விட்டததுடன் இருககின்றன.

எம.ஹெச். பாலியோமா வைரஸ்கொண்ட வளர்ச்சிக கலவை ஊடுபொருளைப் புதிதாகப பிறந்த சுணடெலிகள, எலிகள், ஹேமஸ்டர்கள் போன்றவைகளில் உட்செலுததினுல, மற்ற பாலியோமா வைரஸ்கள் உண்டாக்கும் அதே கட்டித் தொகுதிகள உண்டாகின்றன. ஹேமஸடர் கட்டிகளில் சிலவற்றை வரிசையாக மற்ற ஹெம்ஸ்டர்களுக்கும நெக்ரோனி போன்றவர்களால் மாற்றியமைக்க முடிந்தது. வளர்சசிக் கலவையிலுள்ள சுண்டெலிக கருசெல்கள் இரண்டு வாரஙகளில் 10^7 என்ற விகிதத்தில் வைரஸ்களின் எணணிக்கையை அதிகப்

படுத்தமுடியும் என்றாலும், ஹேம்ஸ்டர் சிறுநீரகக் கட்டிகளின் வளர்வைக்கப் பட்ட செல்கள், அதே காலத்தில் மிகக் குறைந்த அளவே வைரஸ்களை உண்டாக்க முடியும் என்பது தெளிவு. கட்டி செல்களில் பல, நோய் உண்டாக்கும் வைரஸ் எதையும் கொண்டனவாகத் தெரியவில்லை.

ஒரு கட்டியின் கொடூரத்தன்மைக்கும், அது கொண்டிருக்கும் வைரஸ்களின் உள்ளடக்கத்திற்கும் யாதொரு தொடர்பும் இல்லை என்பது தெளிவு. பெரும் பாலான வைரஸ்களை உண்டாக்கும் நோயவாய்ப்பட்ட சுண்டெலிக் கருவளர்ச்சிக் கலவையின் செல்கள் அழிக்கப்படலாம். வைரஸ் விருத்திக்கும் செல் வகுப் பிறகும் இடையே போதிய தொடர்பு இருந்தால், அந்த செல்களையே கட்டிகளில் கொடூரமானவை என்கிறோம்.

எம். ஹெச். பாலியோமா வைரஸால் C_3H சுண்டெலியில் உண்டாக்கப் பட்ட பரோடிட் சுரப்பியின் கட்டி, எலக்ட்ரான் உருப்பெருக்கிமூலம் பரிசோதிக் கப்பட்டது (டவாமேஷகின், நெகரோனி 1959). கட்டி செல் நூக்ளியஸிறகுள் அளவிலும், புற அமைப்பிலும், வைரஸ்களினால் பாதிக்கப்பட்ட சுண்டெலிக்கு செல் வளர்ச்சிக் கலவையில் காணப்படும் நூக்ளியஸிடைத் துகள்களின் பங்கீட்டிலும் ஒருமைப்பாடுடைய பல துகள்கள் காணப்படுகின்றன (புகைப் படம் 7d). செல் வளர்ச்சிக் கலவைகளில் முன்னர் விவரிக்கப்பட்ட பெரியவான சைடோபிளாசத் துகள்கள் இதுவரை காணப்படவில்லை.

வைரஸை எளிதில் ஒருமுகப்படுத்த முடிவதாலும், எலக்ட்ரான் உருப் பெருக்கியில் எதிர்மறைச் சாயமேற்றும் முறைகளை உபயோகிப்பதாலும் (இந்த முறை கேம்பிரிட்ஜில் ஹார்ண, அவரது சகாக்களால் உருவாக்கப்பட்டது), வைரஸின் நுண் அமைப்பைத் தெரிந்துகொள்வது எளிதாயிற்று. பாலியோமா வைரஸிலிருந்து எடுக்கப்பட்ட எதிர்மறையில் சாயமேற்றப்பட்ட துகள்களின் ஒரு தொகுதி 576,000 மடங்கு பெரிதாகப் புகைப்படம் 8a-ல் காணபிக்கப் பட்டிருக்கிறது. புரதத்தின் உப அலகு ஒன்றும் 60 Å விட்டம் கொண்டிருக் கிறது. மத்தியில் எங்கோ நூக்ளியிக் அமிலம் அமைந்திருக்கிறது. மகுலோக வைரஸிறகாகவும் இத்தகைய படங்கள் கிளாஸ்கோவில் ஸ்டோகராலும் அவரது சகாக்களாலும் எடுக்கப்பட்டன.

ரூஸின் கோழிக்குஞ்சின் வைரஸ், இதிலிருந்து மாறுபட்ட நுண் அமைப்புக் கொண்டிருக்கிறது (புகைப்படம் 8b).

டி ஆக்ஸிரைபோ நூக்ளியிக் அமிலத்தின் தன்மைகளைக்கொண்ட (டி.என்.ஏ.) ஜீன்களுக்கும் வைரஸ்களுக்கும் இடையே உள்ள தொடர்பைப்பற்றி நன்றாகத் தெரிந்துகொள்ள இந்த மேற்கூறிய நான்காவது தொழில்நுணுக்க முன்னேற்றம் —பாதிக்கும் தன்மைகொண்ட வைரஸ் நூக்ளியிக் அமிலம்—பெரிதும் உதவி புரிகின்றது. ஒரு கட்டி செல்லின் நூக்ளியஸ் துண்டங்கள்—எல்லா செல்களின்

நூக்ளியஸில் இருப்பதைப் போன்றே டி.என்.ஏ. கொண்டுள்ள ஒரு கட்டி செல்லின் நூகளியஸ் துண்டங்கள் ஓர் ஆரோக்கியமான செல்லிற்குள் புகுந்து அதை ஒரு புற்றுநோய்க் கட்டி செல்லாக மாற்றமுடியுமா? ஆரோககியமான சுணடெலித திசுககளிலிருந்தும் லியூகிமியாகொணட சுணடெலித திசுககளி லிருந்தும லியூகிமியா உணடாகககும் நூகளியிக அமிலம தயார்செய்யப்படமுடியும் எனச சென்ற சில ஆணடுகளாக வெளிவந்த ஆராய்சசிகள் தெரிவிக்கின்றன (ஹேய்ஸ், சிமமன்ஸ், பெக, 1957 ; லடாரஜெட் முதலியோர, 1958). மனித லியூகிமியா நிணநீா முடிசசுகளிலிருந்து எடுககப்படட ஒரு ரைபோ நூகளியிக் அமிலததின் பகுதி (ஆா.என்.ஏ.) ஹேரல முதலியோர்களால் அன்று பிறந்த சுணடெலியின்மீது பரிசோதிககபபட்டது (1958) இந்தப் பரிசோதனைகளில லியூகிமியாககள உணடாகவில்லை. ஆனால், 15 நாட்களில 4 சுணடெலிகளில 3-ல, பெரியவான மெடாசடேசு கடடிகள தோனறின.

புற்றுநோய்க கட்டி வைரஸ, புற்றுநோய்க் கட்டி திசுவிலிருந்து மாறுபட்ட, பாதிககும நூகளியிக அமிலததை ஈநத முதல் வைரஸ பாலியோமா வைரஸாகும. எஸ். ஈ. பாலியோமா வைரஸிலிருநது டிமேயோர்கர் முதலியோர் (1959) டி. என. ஏ.-ஐ தனிமைப்படுததினர். சுணடெலிக கரு வளர்சசிக கலவை களின்மீது நூகளியிக அமிலம, செல அழிககும் பணியைச செய்கிறது. இதனல் புதிதாகப பிறந்த ஹேமஸடாகளைத தாககும வைரஸ் ஒனறு வெளியாகிறது. கட்டித திசுககளிலிருநது எடுககபபடுவதனமூலம புறறுநோய உணடாககும் நூகளியிக அமிலஙகள உற்பததி செயயபபட்டால, உயிரியலிலும் புறறுநோயக கட்டி நோயக குறியியலிலும் ஒரு பெரிய புரட்சி ஏற்பட்டதாகவே கருத வேணடும.

மனிதப் புற்றுநோய்க் கட்டி வைரஸ்கள்

மனிதப் புற்றுநோய்க கட்டிகளில வைரஸகளைக கணடுபிடிகக ஒரு தீவிரமான முயறசி செய்யப்படவேணடும என்பதில சிறிதும சநதேகமில்லை. இநதப் பகுதி யில் கூறப்படட 4 தொழில்நுணுகக முனனேறறஙகள் இந்த முயறசியில உதவி புரியும. எனினும, இதில பல சிரமங்கள இருககினறன. மிருகக கடடி வைரஸ் களை ஒப்பிடடுபபாரககப புதிதாகப பிறநத மிருகஙகளை உபயோகிததாலும, மனிதக கடடி வைரஸகளைக கணடுபிடிபபதில இளஞ சிசுககளை உபயோகிகக யாரும ஆலோசனை தெரிவிககவில்லை. இனபுளுயெனஸா, இளமபிளளைவாதம போனற வைரஸகளை மனிதனற்ற ஓமபுயிர்களில வளர வசதி செய்வது சாததிய மாகும. மிருக ஓமபுயிரில ஏறகெனவே இருககும வைரஸ்களிலிருநது மனிதன் மூலம வந்த வைரஸகளை பிரிததறிவதில் மிகுநத அககறை காட்டபபடவேணடும. இரததப பரிசோதனைமூலம ஒரு திருபதிகரமான சிறப்பு வேறுபாடு கிடைககும் வரை, சுணடெலிகளின செல் வளாசசிக கலவைகளுடன் மனிதக கட்டிப பிழிநீர் களை 'அடைகாததும' அதே மிருகஙகளுககு வளாசசிக கலவைத திரவஙகளை ஊசிமூலம செலுததியும காணபிககபபடட மனிதக் கட்டி வைரஸகளைபபற்றிய

எல்லா அறிக்கைகளையும் தாற்காலிகமாக நிறுத்திவைக்கவேண்டுவது நல்லது. பிழிநீர், எந்த மனிதக்கட்டியிலிருநது எடுககப்பட்டாலும் அதனல் சுணடெலி களுக்கு லியூகிமியா உணடாகிறது. மனிதக் கட்டிகளின் மெல்லிய பகுதிகளை எலக்ட்ரான் உருப்பெருககிமூலம பார்த்ததில சிறப்புக குணமவாயந்த வைரஸ துகள்கள் தெரிகின்றன என்ற கூறறெல்லாம ஒருபுறமாக ஒதுக்கிவைககப்பட வேணடும. மனிதக்கட்டி வைரஸின் சிறபபுக குணங்கள் இதுவரை வரையறுக கபபடவிலலையாதலால, அந்தச சிறிய கறுப்புப் புள்ளிகள் எதைக குறிககின்றன எனத தெரிவது கடினமே. தறபோது திசுவளர்ச்சிக கலவைமுறை நுணுககஙகள பெருமளவில் உபயோகிககப்படுவதால மனிதக்கட்டி வைரஸகள் என்று சொல்லப்படும் இவை செலகளுக்குத தீஙகு விளைவிககும சாதனததின மாறறங் களை விளைவிககும என நாம எதிரபாரககலாம. மனிதனிலோ, மிருகஙகளிலோ உணடாகும எலலாக கட்டிகளும வைரஸ்களால்தான நிகழகின்றன என்ற நம்பிககைக்கு இடமிலலை. எனினும, மனிதனும ஒரு மிருகமே. மற்ற இனஙக ளுக்கு எது பொருந்துகிறதோ அது மனிதனுககும் பொருநதககூடும். வைரஸ் காரணமாக மனிதனில தோன்றும பல கட்டிகள் சீககிரம கணடுபிடிக்கப்பட வேணடும.

வைரஸ்களும் புற்றுநோய் சிகிச்சையும்

சில மனிதப் புறறுநோயகள் வைரஸகளால் ஏற்படலாம் என்ற கண்டுபிடிப்பு சிகிச்சை முறைகளை எளிதாககககூடுமா எனச சிலர் கேட்கலாம். அதற்கு உடனடி பதில், 'இலலை' என்பதே. எம. ஹெச. பாலியோமா வைரஸ்களால உண்டாககபபட்ட கடடிகளில சில வைரஸகளைச சார்நது இருப்பதில்லை என்ற ஐயம ஏறகெனவே எழுந்துள்ளது. அதாவது, அவைகளின் தொடர்ந்த வளர்சசிககும, மெடாசடேசுகளுககும், நோய உணடாககும வைரஸ் துகளகள இருப்பது அவசியமில்லை எனவும் தெரிகிறது. இது உணமையானல், வைரஸ களுககெனத தனியான மருநதுகள இருநதபோதிலும, வைரஸ்களைக கொல்ல எடுககபபடும முயற்சிகள, புறறுநோயக கட்டியின் வளாசசியைப் பாதிககப் போவதில்லை. அதுபோலவே புறறுநோயச செலகள் தாமாகவே நோய உணடாக் கும் வைரஸின் ஆன்டிஜெனிககுணததில பஙகுகொண்டால ஒழிய, வைரஸ் எதிரபபு வாகஸினகள் போதிய பலன் அளிககா. (ஆனடிஜெனிககுணம் எனபது வைரஸிறகு எதிரப்பொருள உணடாககுமதனமை. மொ-ா.) புறறுநோய் உணடாககும இரசாயன சாதனஙகளும, கதிரொளிவீசசும, செலலின்மீது வினை புரிந்து, அதை ஏதோ ஒரு வகையில சேதபபடுததுவதாகத் தோன்றினலும், வைரஸ பாதிககபபடட செல்லிற்குள் அதிகபபடியான 'தகவல்களை' எடுத்துச் செல்கிறது எனபது புறறுநோய ஆராய்சசியில வைரஸகளினல தூண்டபபட்ட பிராணிககட்டிகளின் முககியத்துவததை வலியுறுததுகிறது. சில சமயஙகளில் பரிசோதனைசசாலையில் எம. ஹெச். பாலியோமா வைரஸைபபோல, மேலும அதிக வைரஸகளை உணடாக்குவதற்கான 'ஆணை'யாகவே இநதத தகவல் பிரதானமாக

இருக்ககூடும். பாதிக்கப்பட்ட செல்களின் எல்லாச் செயல்களும இநதக் குறிககோளை நோக்கியே செல்கின்றன. எனினும, எப்படி இரசாயனப் புற்று நோய்க காரணிகளும, கதிாவீசசும செலலுககுப போதிய சேதம விளைததுப் புற்றுநோய் உணடாககுகிறதோ, அஙஙனமே சில சமயஙகளில வைரஸ—செல உறவு செல அழிவிறகு அனறிப புறறுநோய உணடாககவும அடிகோலுகிறது. இநத வேறுபாடுகொணட வைரஸ—செல உறவைபபற்றி மிருகததில மாததிரம அலலாமல திசுவளாசசிக கலவையிலும தெரிநதுகொளள லாம. இது எஙஙனம சாதிககபபடுகிறது எனபதுதான் பல நாடுகளில் தற்போதைய ஆராயசசியின் அடிபபடை.

புற்றுநோயின் மற்றக் காரணங்கள்

உடற்கூறு சார்ந்த திடீர் மாற்றம்—சொமாடிக் திடீர் மாற்றம் (Somatic mutation)

ஓர் ஆரோக்கியமான சொமாடிக் செல்லின் உள்நிகழும திடீர் மாற்றம்தான் ஒரு புறறுநோய் செல் உருவாவதன முதல் நிகழ்சசி என்றும், பாதிககப்பட்ட ஜீனோ, ஜீன்களோ, நேரடியாகவோ, மறைமுகமாகவோ செலபகுப்பை ஆரம பித்துத் தொடர்ந்து நடத்திக்கொண்டிருக்கப் பொறுப்பானவை என்றும் இந்த அனுமானம் கூறுகிறது. ஆரோக்கியமான ஒன்று, கொடூரமான ஒன்றுக மாறுவது, உடல் செல்லினுள் நிகழும ஒரு கடததபபடததகக மாற்றம் எனபதால் புற்றுநோய் இந்தத திடீர் மாறறததின விளைவேயாகும். 1927-ல முலலா, எகஸ்-கதிர்களைக்கொண்டு ஜீனில் ஏற்படும முதல செயற்கை முறை மாற்றததை திடீர்மாற்றம நிகழ்ந்த செல்லிலிருந்து ஒருவழிததோன்றலில தெரியும திடீர் மாற்றத்தை ஏற்படுததினர். 1946-ல் ஆர்பககாலும, ராபசனும், சில இரசாயனப் பொருளகளின திடீர் மாற்றததன்மை காணபிக்கப்பட்டது. மஸடர்டு வாயுவால, டிராசோபிலா என்ற பழஈயில் மரணுபாயம்கொணட திடீர்மாறறஙகள் உண்டாககினர்கள். ஜீன்களின்மீது திடீர்மாறறம நிகழததும சாதனததின விளை நேரடியாக இருககவேண்டும என்பதல்ல. திடீர்மாறறம உணடாக்குபவைகள, அவைகள் இரசாயனப் பொருளாக இருந்தாலும சரி, பௌதிகப பொருளாக இருந்தாலும சரி, நேரடியாக ஜீனினமீது விளைபுரிவதில்லை. ஆனல், திடீர்மாற்றம் நிகழ்வதற்கான சாதகச சூழ்நிலையை உருவாக்குகிறது. ஏறபடும திடீர்மாற்றம் பிற சாதனஙகளினுல் மாற்றபபடவும் கூடும. 1920-ன் ஆரம்பததிலேயே ஜீனில் ஏற்படும திடீர்மாறறத்தின் காரணமாகப் புற்றுநோய் உண்டாகிறது என்ற எண்ணம உருவாயிறறு. அன்றிலிருந்து இது இரசாயன வைரஸ் தினவுபோன்ற அனுமானங்களுடன் சேர்க்கப்பட்டது. இந்த அனுமானம உணமையாக இருகக வேண்டுமானல் திடீர்மாறறம நிகழ்ததும சாதனஙகளுககும், புற்றுநோய்க் காரணி களுககும் இடையே பலமான ஒரு தொடர்பு இருககவேண்டும். தொடர்பு இல்லாவிட்டால் நாம் நான்கு வகையான சாதனங்களை எதிர்பாாககலாம. (1) புற்றுநோய்க்கட்டி உண்டாக்குவதுமட்டும, (2) திடீர்மாற்றம் உணடாககுவது

மட்டும, (3) இரணடும, (4) இரணடுமல்லாதது. சரியான முறை என்பதனுல் அவைகள் ஒரே உயிரினத்தில் பரிசோதிக்கப்படவேணடும். ஆனுல், சந்ததிகாலம் மிகக குறைவாகவும, திடீர்மாறறத்தின் விளைவுகள் எளிதில் தெரிவதாகவும், (விளைவுகள் மரணுபாயமாக இருந்தாலும சரி, இல்லாவிட்டாலும் சரி) அமைந்த ட்ரோசோபிலாவில் திடீரமாற்ற சாதனஙகளைச் சோதிப்பது மிகவும இலகுவாக இருககும.

சுணடெலியில புற்றுநோய் உண்டாக்கும சகதிவாய்ந்த பாலிசைக்ளிக நீரகக்கரிப்பொருளில் ஒன்று, மீதைல்கோலாந்தரனீ ஆகும். சுண்டெலிகளின் சிகிச்சை செயயப்படாத வாரிசுகளுககு இந்தக் கூட்டுப்பொருள சரும அடியில ஊசிமூலம செலுததப்பட்டால, வெளிஉறை நிறத்தைப் பாதிக்கும் 13 வகையான திடீர்மாறறஙகள் நிகழ்கினறன என ஸடராங கூறியிருககிருர். ஆரோக்கியமான சுண்டெலியில, 27 வருஷ காலஙகளில வெளிஉறை நிறததிடீர்மாறற விகிதம் 26,000-ல் 1. ட்ரோசோபிலாவில் செய்யப்பட்ட சோதனைகள் ஐயப்பாடுடையன வாக இருககின்றன. மீதைலகொலாந்தரனீனின் கரையும் விளைபொருள, கியோரோஸபோரா என்ற பூஞ்சககாளானில் திடீர்மாற்றம உணடாக்குவதாக இருககிறது என டேடம் சாதிததார். ஆனுல, பர்டெட்டோ, வெஸ்டர்கார்டோ ஆகியோர் இதை உறுதி செய்யவில்லை.

ஏற்கெனவே விவரிககப்பட்ட நைட்டிரஜன மஸ்டர்டுகள் திடீர்மாற்றம நிகழததவும, புற்றுநோய் உண்டாககவும சக்தி கொண்டிருந்தன என்பது தெளிவு. இரசாயன அமைப்பில் இவைபோன்ற பொருளகளான எதிலின ஆக்ஸைட், டைமீதைலசலபேட, டையசோமீதேன் போனறவைகள் புறறுநோய உணடாக்குபவைகளாகத தோன்றினுலும. அவவிதம நிரூபிக்கபபடவில்லை பல வாசனை அமைன்கள் புறறுநோய உணடாககுவன. ஆனுல, நாம ஏற் கெனவே பாாததபடி புறறுநோயக காரணிகள் மெடபொலேட்டுகளாக இருகக லாம். டெமரெககும், அவரது சகாக்களும 'வெணணெய் மஞ்சள்' (4 டைமீதைலஅமைனேஅசோபென்சீன்) 2-அசிடைலஅமைனேபுளோரின் 1 α & β நாப்தலமைன போன்றவைகள் ட்ரோசோபிலாவில திடீர்மாறறம் உணடாககுப வையாக இருககவில்லை எனக கணடனா. உடல்செல திடீர்மாறறம் அனு மானததை இது உறுதி செய்யவில்லை.

புறறுநோய்க காரணிகள என்று நிரூபிக்கப்படாத இத்தகைய திடீர்மாற்ற சாதனஙகளின் பட்டியலை நீட்டிக்கொணடே போகலாம். இத்தகைய நிருபணம, எந்த வகையிலும் உதவி செய்வதாக இல்லை. இந்தக் கோட்பாட்டுவாதிகள, ஒரே தனமையான குணங்கள் இல்லாமல் இருப்பதற்கான பல காரணஙகளைக கூறினர்.

உடலசெல் திடீர் அனுமானத்துடன் ஒவ்வாத பல விவரங்களும் இருக கின்றன. புற்றுநோய்க் கட்டிகள் உருவாவதற்கு செல்களின்மீது மீண்டும்

மீண்டும் ஊதா மேற்கதிர் கிரணங்களைச் செலுத்துவது அவசியம் என 1953-ல் பிளம் கண்டார். கதிர்வீச்சின் ஒவ்வொரு அளவும், ஒன்றுக்கு மேற்பட்ட திடீர் மாற்ற செல்களை உருவாக்கி, ஒவ்வொன்றும் வளர ஆரம்பிக்கின்றது என நாம் கொண்டால், முதல் அல்லது இரண்டாவது அளவோ கொடூர மாற்றத்தை விளைவிக்கப் போதுமானதாக இருக்கும் என நம்பப்படுகிறது. இதன் பின்னர் கதிர்வீச்சுக்கு உட்படுத்தினால் கட்டிகள் தோன்றும் நேரத்தில் ஒரு மாறுதலும் நிகழவில்லை. கட்டி தோன்றும் நேரம், இந்தத் திடீர்மாற்ற செல்கள் பெருகும் விதத்தைப் பொறுத்து இருக்கிறது. எனினும், உண்மையில் இடைவிடாத ஊதா மேற்கதிர்களைச் செலுத்துவதால், கட்டிகள் உருவாவது துரிதப்படுத்தப்படுகிறது. சுண்டெலிகளின் சில இனங்களில் லிம்போமாக்கள் உண்டாகத் தேவையான விவரம் உடல் செல் திடீர்மாற்றத் தத்துவத்திற்கு முரண்பட்டு இருந்தது எனக் கேப்லான் கருதினர். இங்கு எக்ஸ்-கதிர் போதுமான அளவிற்குக் குறைவாக இருந்தால் கட்டிகள் உருவாகாது. ஆரம்ப செல்களில் கட்டிகள் உருவாக்கும் முறை மீளதன்மைத்தானது.

ஸ்டீனர் கூறிய எபிகார்சினோ-ஜெனிசிஸ்-புற்றுநோய்க்காரணி அல்லது அதன் இணைக்காரணி, இவைகளின் இடைவிடாத விளைவுகளால் ஒரு தீங்கற்ற கட்டி ஒரு கொடூரமான கட்டியாக மாறலாம் என்பதிலிருந்து மற்ற சாட்சியங்களும் கிடைத்தன. உதாரணமாக, மனிதனில் தீங்கற்ற மெலனோமாவுக்கு ஏற்படும் சேதம் அல்லது முழுவதும் அகற்றப்படாத (அரைகுறையாக அகற்றப்பட்ட) சிறுநீர்ப்பை அல்லது குரல்வளை பாபில்லோமா, தீங்கற்ற ஒன்றைக் கொடூரமான ஒன்றாக மாற்றுவதைத் துரிதப்படுத்தும். குடலின் தீங்கற்ற அடினோமா பாலிப்கள், கொடூரப் புற்றுநோயாகப் பின்னர் மாறலாம். நோயக் குறியியலாளர்களால் தானாகவே, நிகழும் மனித வியாதியில், மிகவும் தெளிவாக வேறுபடுத்தப்பட்டு, ஆனால், பிராணிப் பரிசோதனையில் அசட்டை செய்யப்படும். வரிசையான —ஆரோக்கிய—தீங்கற்ற—கொடூரத்தொடர், ஒரு தனியான திடீர் செல் மாற்றத்தை யன்றிப் படிப்படியாக நிகழும் மாற்றங்களையே குறிப்பிடுகிறது. திடீர் செல்மாற்ற நிகழ்ச்சிகள் அபூர்வமானவைகளாகும், அவைகள், படிப்படியாக நிகழ்வது இன்னும் அபூர்வமாகும்.

நிணநீர் நாள அடைப்பு

பல புற்றுநோய்க் கட்டிகளையும், புற்றுநோய்க்கு முந்திய நிலைகளையும் ஆராய்ந்த சேம்ஸன்-ஹேண்ட்லி 'நிணநீர் நாள அடைப்புத்தான் புற்றுநோய்க்குக் காரணம்' என்ற தத்துவத்தை வெளியிட்டார். புற்றுநோய்க்கு முந்திய நிலையிலுள்ள திசுக்களில் நிணநீர் நாள அழற்சிக்கான அறிகுறிகள் இருக்கின்றன. சில சமயங்களில் நாட்பட்ட நிணநீர்த் தேக்கம் ஏற்படுகிறது. இது முழுதும் உண்மையாக இருக்கமுடியுமா என்பது சந்தேகமே. பரிசோதனைச்சாலையில் வளர்க்கப்பட்ட திசுக்களும், நிணநீர்ப் போக்கு இல்லாதவைகளும் கொடூரப் புற்றுநோய் அடையலாம் என்பதற்கான சந்தேகத்திற்கிடமில்லாத சாட்சியங்கள் இருக்கின்றன

என்பதை நாம மறக்கக்கூடாது. சில சமயங்களில இவைகள் தாமாகவே நிகழ்கினறன. ரசாயனப் புறறுநோயக காரணிகளாலும், புறறுநோய் உணடாக கும வைரஸ்களாலும் சில சமயங்களில் இவைகள நிகழகின்றன.

காட்பட்ட தினவு

ஒரு திசுவோ, உறுபபோ நாட்பட்ட தினவுக்கு உட்படுததப்பட்டால், புறறு நோய் உண்டாகலாம் என்ற கோட்பாட்டைப்பறறி நாம் மிகவும் அதிகம் சொல்ல லாம. இங்குககூடப் புற்றுநோய்க காரணிகள உட்புறத்திலோ, வெளிபபுறத் திலோ இல்லை எனபதை நிாணயிப்பது மிகவும் சிரமம். செல் பகுப்பையும, திசு சீரமைபபையும நோககி மீணடும மீணடும இட்டுசசெல்லும் தினவு, புற்றுநோயை உணடாககப் போதுமானதே என்பதைக காண்பிக்க முடிந்தாலும் செல் உடல் இயல், செல் உயிா இயைபியல் முறைப்படி பார்ததால், இந்த முறை மிகவும புதிராகவே தோன்றுகிறது. எனினும, புற்றுநோய் விளைவின் உண்மைத தன்மை யைபபறறிய அறிவை இந்தத தததுவஙகள் நமககுத தரவில்லை.

அனைததையும சுருஙககககூறின, செல்லுககுப் போதிய சேதம் விளைந்ததன் பயனாகவே புறறுநோய் உண்டாவதாகத் தெரிகிறது. இதன்மூலம் இதற்கு முன்னா அறிநதிராத, வளாச்சியைக் கட்டுப்படுததும அம்சஙகளிலிருந்து அது விடுதலை பெறுகிறது. இந்த அமசஙகள் செல்கள் பறறியனவாகவோ, அலலது திரவம பறறியனவாகவோ இருககககூடும். இவ்வாறு விடுதலைபெறற செலகள் பகுபபடையவும, சிறப்பு இயல்புகளை மாற்றியமைக்கவும் அருகிலுள்ள ஆரோககிய திசுககளை 'முறறுகை' இடவும சில சமயஙகளில் மெடாசடேசு களாகவும இந்த செலகள் செய்கின்றன.

7. புற்றுநோய் சிகிச்சை

தற்காலததில் புற்றுநோய் ஆராய்சசி எவவிதம செய்யப்படுகிறது என்பதைத் தெளிவுபடுததுவதே இந்தப் புததகததின் முதல் நோக்கம் என்றலும் சிகிச்சை முறைகளில் பரந்த அளவில கையாளப்படும அறுவை சிகிசசை, கதிர் வீச்சு இவைகளைப்பற்றிச் சிறிதும் கூருமல், புறறுநோயின் வேதியியல் சிகிசசையைப்பற்றி விவரிப்பது பொருததமல்ல.

நோய் நிர்ணயம்

முதல பிரசசினை நோய நிர்ணயமே. எநத அறுவை சிகிச்சையாளரும், எக்ஸ-கதிர் சிகிசசையாளரும் வியாதி நிர்ணயம செயயப்படாத புற்றுநோய்ககு சிகிசசை அளிகக விருமபுவதில்லை. எனினும், வியாதி நிாணயததிறகென ஒரு குறிபபிட்ட சோதனையும இலலை. உடலின எந்த உடல திரவததிற்கும பொருத்தமான, உயிர் இயைபியல சோதனையோ அல்லது எளிய ரததப் பரிசோதனையோதான் இருககிறது. இததகைய பரிசோதனைகளைப்பறறிப் பல நற்சான்றிதழகள் இருநதபோதிலும ஒன்ருவது நம்பததகுந்ததலல.

இததகைய பரிசோதனைககுத துலலியத்தன்மையே ஒரு முககியமான அளவுகோல் புற்றுநோயின் ஆரமப நிலையிலுளள எல்லா கேசுகளுககும 100-ககு 100 நேர் முடிவு அளிககும ஒரு பரிசோதனை இருபபதாக வைத்துககொளவோம. ஆனல், இது போக 10%-ல் தவருன முடிவுகளும தருவதாக வைத்துககொள்வோம். பரீட்சாாத்தமாக எடுததுககொள்ளபபட்ட 100,000 ஜனததொகையில் 35 வயதுக்கு மேறபடட 40,000 பேருககு இந்தப் பரிசோதனை செய்யபபடடால் இவைகளில் 4,000 கேசுகள் தவருன முடிவுகள் கொணடிருககும. இந்த 425-லிருந்து 250-ஐ மறறும பல சோதனைகளின் உதவியால கணடுபிடிகக வேணடியிருக்கும. ஒரு பரிசோதனையைத திருப்திகரமான ஒன்று எனக கொள்ள வேணடுமானல், தவருன பாசிடிவ்கள் 5% ஆகவும். தவருன நெகடிவகள 10% ஆகவும இருக்கலாம் என ஸ்டோவல் கூறுகிருர.

தற்போது, வியாதி நிர்ணயம செய்ய நோய் அறிகுறிகள் உணடான விதத்தை நோயாளிகள்மூலமாகவே மருத்துவர்கள் தெரிந்துகொண்டு ஆராய்வு

வெளிப்புற சோதனைகள்மூலமாகவும அறிகுறிகளைக கண்டறிவர். இத் தகவலின் விளைவாக மருததுவர்கள் வேறு ஏதாவது சிறப்புப் பரிசோதனைகள் அவசியமா என்பதை நிா்ணயம செய்வா

எகஸ்-ரே பரிசோதனைகள் மிகவும சாதாரணமானவை. எலும்பைபபோல் அல்லாமல் எஙகெஙகு திசுககள் எக்ஸ்-கதிர் ஊடுருவும் வணணம் அமைந்திருக் கிறதோ அஙகெல்லாம, மற்ற முறைகள் கையாளப்படவேண்டும். இரைபபை, குடலகள போன்ற உட்குழிவான உறுப்புகளில் எல்லாம பேரியம உணவு கொடுககப்பட்டால், இந்த உறுப்புகள் நன்கு தெரிகின்றன. எக்ஸ்-ரே படததில் இந்த உறுப்புகளிலுளள அசாதாரண வளாசசிகள் 'நிறைவு குறைபாடாகத்' தோனறும. சிறுநீர்ப்பை, சிறுநீரகம் போன்ற உறுப்புகள் எக்ஸ்-கதிர்மூலம் பரிசோதனை செயய இதைபபோனற (பேரியமபோன்ற) பல ஒளியைத தடை செய்கிற பொருள்களும இருககினறன.

உடலின உள அறைகளையும உறுபபுகளையும நேரடியாகச சோதிதது அறியப் பல முனனேற்றங்கள ஏறபடடுளளன. இரைப்பையைக கண்டறிய அறுவை மருததுவருக்கு 'கேஸ்டராஸகோப' எனற சாதனம கிடைததிருககிறது. உருப்பெருககிமூலம சோதனை செய்வதறகு சில திசுததுணடுகளையும இரைப பையிலிருநது எடுககமுடியும. இதுபோனறே நுரையீரலின் காற்றுககுழாயகளைக் கண்டறிய பிராஙகோஸகோப் உதவுகிறது.

துரிதமாக வளர்ந்து, உட்புகுந்து புறறுநோய் செல்கள் விளைவிககும மாறறஙகளின உதவியால நோய்க்குறியியல் நிபுணர்கள், உறுபபுகளிலும, திசுக் களிலும ஏறபடும புறறுநோயைக கணடறியமுடிநதது. தனிததனியாக இருககும புற்றுநோய செலகளின கூட்டஙகளையும கணடறியமுடியும எனபது தெரிகிறது. இத்தகைய தனிததனியான கூட்டஙகள், வளரும கட்டிகளால உணடாககப்படு கினறன. உடலில சுரககப்படும திரவஙகளிலும வெளியேறறப்படும திரவங களிலும இவைகளைக காணலாம உதாரணமாக, நுரையீரலுககும, காபபபபையின் கழுததுககும, 'எகஸபோலியேடிவ சைடாலஜி எனபபடுவதை பிரயோகிககலாம். தனிபபடுததப்பட்ட செலகளின், சிறபபான புறக்குணஙகளிலிருந்து கட்டிகளின் பணபுகளை அறியலாம.

குறிபபிட்ட புற்றுநோய்களுககான மற்றும பல சிறப்பான முறைகளும் இருக்கின்றன. உதாரணமாக, பெருமபாலான ஆரோககியமான செல்களின வளாசசிவிகிதம் மிகவும மெதுவாகவே இருககிறது. ஆகவே, தொகுப்பிறகாக அவைகள் பொருள்களை எடுததுககொள்ளும் விகிதமும குறைவாகவே இருக கிறது. கட்டி செல்களுக்கு வளர்சிதை மாற்றத தேவைகள் அதிகமாக உணடு. கண்டுபிடிக்கும வகையில், அவைகள் எடுததுககொளளும் பொருளகளை நாம காணுமாறு அடையாளமிட்டால் ஆரோககியமான செல்களிலிருநது, அவைகளைப் பிரித்தறியலாம். இதற்குக் கதிரியக்க ஐசோடோப்புகள் மிகவும் வசதியானவை

